Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 03 ஞாயிற்றுக்கிழமை (17.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 229

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## போதைப்பொருள் கடத்தலில் கேந்திர மையமாக வடக்கு

### தடுப்பதற்கு நடவழிக்கை அவசியம்



யாழ்.குடாநாட்டில் தற்போது போதைப் பொருட்களின் கடத்தல், விற்பனை, பாவனை போன்ற செயற பாடுகள் மிகவும் அதிகரித்துக் காணப்படுவதாக தகவல்கள் தெரி விக்கின்றன. பொது அமைப்புக்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளும் இவ்விடயம் தொடர்பில் அறிவித்து வருகின்றனர். எனவே, இச் செயற்பாடு களைத் தடுக்கும் வகையில் உரிய நட வடிக்கைகள், துரிதமாக எடுக்கப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியு றுத்தியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் விபத்து இளைஞர் உயிரிழப்பு

செம்மணி வீதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் மோட்டார் சைக்கிளும் ஹலோ ட்ரஸ்ட் வாகனமும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தஇளைஞர்ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்

இந்தச் சம்பவத்தில், நல்லூர் பகுதியினைச் சேர்ந்த சிவலிங் கம் சசிதரன் (வயது-25) என்பவரே உயிரிழந்தவராவார் நல்லூரில இருந்து முகமாலை நோக்கி சென்றுகொண்டிருந்த கண்ணி வெடியகற்றும் நிறுவன வாகனமும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்ப வம் தொடர்பில் வாகனச் சாரதியினை பொலிஸார் கைது செய துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் போக்கு வரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25)

## இ.போ.ச. மீது அசிட் வீச்சு

யாழிலிருந்து பதுளைக்குச் சென்ற இ.போ.ச. பேருந்து மீது நேற்றிரவு இனம் தெரியாதோர் அசிட் வீச்சு தாக்குதலை நடத்தி யுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

யாழிலிருந்து பதுளை நோக் கிச் சென்ற குறித்த பேருந்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

# காணாமற்போன எவரும் வெலிக்கடையில் இல்லை

## கையைவிரித்தது ஆணைக்குழு

காணாமற் போனவர்கள் எவ ரும் வெலிக்கடைச் சிறைச்சாலை யில் இருப்பதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்த போதும அவ்வாறு எவரையும் இதுவரை அங்கு கண்டுபிடிக்க முடியவில்லை என காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலை யில் நடைபெற்ற பொங்கல் தின விழாவில் எடுக்கப்பட்ட புகைப் படங்களில் தங்களின் காணாமற் போன உறவினர்கள் இருப்ப தாக சிலர் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் வழங் கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய காணாமற் போனோரின் உறவி னர்கள் வெலிக்கடை சிறைச் சாலைக்கு அழைத்துச் செல்லப் பட்டதாக ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

எனினும் அங்கு காணாமல் போனவர்கள் எவரும் இருக்க வில்லை என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதேவேளை இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகா ணங்கள் உள்ளிட்ட பகுதிகளி லுள்ள வைத்தியசாலைகளின் நோயாளர்கள் அனுமதிக்கப் பட்டமை தொடர்பான பதிவேடு கள் ஆராயப்படவுள்ளதாக ஆணைககுழுவின் செயலாளர் குணதாஸ தெரிவித்துள் ளார.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது காணாமற்போனதாக சந்தேகிக்கப்படுவோர் வைத் தியசாலைகளில் அனுமதிக் கப்பட்டு அதன் பின் காணாமற் போனார்களா என்பதனை இதன் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## தடை

வடமாகாணசப்ப உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களின் வீட்டுக்கு நேற்றிரவு சென்ற முல்லை பொலிஸார் முள்ளி வாய்க்கால் நினைவேந்தலுக்கு தடை விதிக்கும் முல்லை நீதி மன்ற உத்தரவை நேரில் கையளித்துள் ளனர்.

இதையடுத்து முல்லைத்தீவு

19 ஆம் பக்கம் பார்க்க

## கஜேந்திரகுமார் – சுமந்திரன் யாழில் காரசாரமான விவாதம்


தமிழ் மக்களின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர் பாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினரும் சட்டத் தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் சூடான விவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணத் தில் யூரோவில் மாநாட்டு மண் பத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சூடான விவாதத் தில், காரசாரமான விமர்சனங் களும் குற்றச்சாட்டுக்களும் முன் வைக்கப்பட்டன. பொதுமக்க ளின் கேள்விகளுக்கும் இருவ ரும் பதிலளித்தனர். சுமார் 4 மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்த சூடான விவாதத்தில் கேள்வி எழுப்பிய பொதுமக்கள் சுமந்திரனை நோக்கி அடுக்கடுக் காக குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## இலஞ்ச ஊழல் விசாரணை பதவி விலகினார் ஆணையாளர்

இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணை யாளர் எல்.கே.விமலசந்திர ராஜினாமா செய்துள்ளார் என ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையிலிருந்து விமலசந்திர உத்தியோகபூர்வமாக பதவி விலகியுள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நிறைவேற்றப்பட்டுள்ள 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய புதிய ஆணைக்குழுவை நியமிக்க இட மளிக்கும் வகையில் அவர் ராஜினாமா செய்துள்ளார் என்று தில் ருக்ஷி டயஸ் தெரிவித்தார்.

## ஊரெழுவில் ஆயுதப்புதையல்



யாழ்ப்பாணம் ஊரெழுப் பகு தியில் நிலத்தில் புதைக்கப்பட்டி ருந்த நிலையில் 4 கொள்கலன் களில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள் ளன.

அப்பகுதியில் வீடு கட்டு வதற்காக அத்திவாரம் வெட்டும் போதே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்துடன், இந்த ஆயு தங்கள் ஊரெழு கணேசா வித் தியாலயத்திற்கு அண்மையில் உள்ள திருச்செல்வம் புவனேஸ் வரி என்பவரின் காணியிலி ருந்தே மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை அத்திவாரம்

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்மொழியில் தேசிய கீதம் தாக்குதலுக்கு இலக்கான அரச உத்தியோகத்தர்



கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது சிங் கள மாணவர்களினால் தாக்கப்பட்டதாக கூறப்படும் அரச அதிகாரி ஒருவர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

செங்கலடி பிரதேச செயலகத்தின் அபி விருத்தி உத்தியோகத்தரான பத்தக்குட்டி சுமன் தன்மீது இடம்பெற்ற தாக்குதல் தொடர பில் ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# அமைதியின்மையை கருத்தில் கொண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் ஏற்பாடு செய்திருந்த நிலையில் அதற்கு முல்லைத்தீவு நீதி மன்றம் தடை விதித்துள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தத்தினால் உயிர் நீத்த பொது மக்களை நினைவு கூரும் நிகழ்வு முள்ளிவாய்க்கால் மேற்கு செல்வா விளையாட்டு கழக மைதானத்தில் அனுஸ்டிக்க தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி துண்டுப் பிரசுரம் மூலம் அனைவருக்கும் அழைப்பிதழ் விடுத்திருந்த நிலையில் நேற்று முன் தினம் முல்லைத்தீவு நீதிமன்றம் அதற்கு தடை விதித்துள்ளது.

முல்லைத்தீவு பொலிஸார் குறித்த நிகழ்வு நடந்தால் அது அமைதியின்மையை தோற்றுவிக்கும் என கூறி நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் போதே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (25)

# கண்ணி அகற்றுவோரின் பிரச்சினைக்கு தீர்வு

## இரண்டு மாத ஊதியமும் வழங்கல்



கிளிநொச்சியில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வந்த பணியாளர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டு ஊழியர்கள் பணியின்றி இருந்த இரண்டு மாதமும் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது இதற்காக நிறுவனம் 2 கோடியே 86 இலட்சம் ரூபா செலவு செய்கிறது என பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்ட பணியாளர்கள் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தனர்

கடந்த வாரம் பணியிலிருந்து நிறுவனம் ஒப்பந்த விதிமுறைகளுக்கு மாறாக எவ்வித கொடுப்பனவும் இன்றி திடீரென 450 வரையான பணியாளர்களை பணியிலிருந்து நிறுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

இந்த பிரச்சினை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஊடாக மீள் குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு மேற்கொண்ட நடவடிக்கைக்கு அமைவாக விரைவாக எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இதன் மூலம் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கு பணியில்லாமலே அவர்களுக்கு இரண்டு மாதமும் சம்பளம் வழங்கப்படுகிறது. ஐந்து வருடத்தை பூர்த்தி செய்த அல்லது நெருங்கியுள்ள பணியாளர்களுக்கு போனஸ் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. இதற்காக 2 கோடியே 86 இலட்சம் ரூபா நிதி நிறுவனத்தினால் செலவு செய்யப்படுகிறது.

எனவேதான் இந்த தீர்வினை பெற்றுக்கொள்வதற்காக அதிக அக்கறையோடு செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், தொழில் திணைக்கள அதிகாரிகள், முக்கியமாக ஊடகங்கள் ஆகியோருக்கு மகிழ்ச்சியுடன் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். என கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் தெரிவித்தனர் (160)

# சி.க.கூ. சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்




வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச, விசேட பொதுச் சபைக் கூட்டம், குட்செட் வீதியில அமைந்துள்ள, சனச சமாச மண்டபத்தில், நா.சேனாதிராசா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போது சி.க.கூ சமாசத்தின் பணிப்பாளர் சபையில், கடந்த காலங்களில் புணியாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (11)

# வியாபார முகாமைத்துவ இளமாணி கற்கை நெறி

## யாழ்.பல்கலை வவுனியா வளாகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் வியாபார முகாமைத்துவ இளமாணி கற்கைநெறி (செயற்திட்ட முகாமைத்துவம்) எனும் புதிய கற்கை நெறியானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வியாபார கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி அம்பலம் புஸ்பநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், 2014 - 2015 ஆம் கல்வியாண்டில் வியாபார முகாமைத்துவ இளமாணி கற்கை நெறி எனும் புதிய கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறியானது விசேட அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளதால் 2014 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் சித்தியெய்திய அனைத்துப் பிரிவு மாணவர்களும் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம் மற்றும் கணிதம் ) விண்ணப்பிக்கலாம்.

இதற்கான மேலதிக விபரங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள மாணவர்கள் கையேட்டின் மூலம் அறிந்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

# மாலைநேரக் கல்வியும் கற்றல் உபகரணம் வழங்கலும்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில மாணவர்களுக்கான மாலை நேரக் கல்வி வழங்கும் செயற்றிட்டமானது கடந்த வாரம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

உலகத்தமிழ் மக்கள் மறுவாழ்வு உரிமைகள் ஆணையத்தின் கல்வி வளர்ச்சிப்பிரிவினர் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் ஊடாக மேற்படி செயற்திட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

தாய் தந்தையரை இழந்து அல்லது வறுமையோடு பல்வேறு சவால்களை எதிர்கொண்டு பாடசாலைக்கற்றலை முன்னெடுக்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி அதன் மூலம் பாடசாலை இடைவிலகலை முற்றாக நீக்கவேண்டும என்ற நோக்கோடு சாதிக்கும் சந்ததி என்ற செயற்திட்டத்தையும்,

யுத்தத்தில் முற்றாக அழிக்கப்பட்ட பாடசாலை வளங்களை மீள நிறைத்து பாடசாலைகளில் நூலக வளர்ச்சியை உண்டாக்கி அதன் ஊடாக மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவாக்கும் நோக்கோடு கல்விச்செழுமை என்ற செயற்திட்டத்தையும் களத்தையும் புலத்தையும் இணைத்து தமிழர் நாமே தமிழர் கட்டமைப்புகளை நிலை நிறுத்துவோம் என்ற தொனிப் பொருளோடு இந்தத் திட்டம் முன்னெடுக்கப் படுகிறது

இதன் அடுத்தகட்டமாக தாயகத்தில் பாடசாலை மாணவர்களுக்கான மாலைநேரக்கல்விச் செயன்முறையை ஏற்படுத்தி அதன் மூலம் பாடசாலை மாணவர் அடைவுமட்டத்தை மேம்படுத்தும் நோக்கோடு உலகத்தமிழ் மக்கள் மறுவாழ்வு உரிமைகள் ஆணையத்தின் கல்வி வளர்ச்சிப்பகுதியான அரும்புகள் செயற்றிட்டமும் செயற்படுத்தப் படுகிறது.

அந்தவகையில் முல்லைத்தீவு உப்புமாவெளி.தூண்டாய் வடக்கு கிராமத்திலும் கருநாட்டுக்கேணி கிராமத்திலும் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட தேறாங்கண்டல் பகுதியிலுமாக தற்பொழுது மூன்று இடங்களில் இம்மாலை நேரக்கல்விச் செயன்முறையானது அரும்புகள் செயற்திட்டத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இங்கு மட்டுமல்லாது இனி வரும் காலங்களில் மாணவர்களின் அடைவுமட்டத்தை மேம்படுத்தும் நோக்கோடு மிகவும் பின்தங்கிய பகுதிகளில் இவை தொடரவுள்ளன.

தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை அதிபர் கேதீசுவரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு மேற்படி நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் கிராமத்தின் கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பெற்றோர்-மாணவர் ஆகியோரும் கலந்துகொண்ட குறிப்பிடத்தக்கது. (160)

# அத்தியடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம்

ஏழாலை அத்தியடி அருள் மிகு விநாயகர் திருக்கோயில் மகோற்சவப் பெருவிழா எதிர் வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினசரி பகல் திருவிழா காலை 8 மணிக்கும் [illegible] திருவிழா பிற்பகல் 4 மணிக்கும் ஆரம்பமாகும் அத்துடன் தினமும் பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

கொடியேற்றமும், தேர், தீர்த்தத் திருவிழாக்கள் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கற்பூரத் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் வரும் 1 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுவதுடன் 3 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம் பெறும்.

ஆலய குரு பிரம்மஸ்ரீ சோ.தேவநாத சர்மா தலைமையில் சிவஸ்ரீ தி.சோமநாதக் குருக்கள் மகோற்சவத்தை நடாத்தி வைக்கவுள்ளார். மகோற்சவம் சிறக்க கலாநிதி நு.ஸ்ரீஜெகதீஸ்வரக் குருக்கள் அருளாசிகளை வழங்கவுள்ளார். (இ)

# ஆசிரிய பயிலுநர்களுக்கு கற்பித்தல் பயிற்சி

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய பயிலுநர்களுக்கான கற்பித்தல் பயிற்சி நாளை தொடக்கம் மூன்று வாரங்களுக்கு இடம்பெறவுள்ளது.

குடாநாட்டில் உள்ள நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் ஆசிரிய பயிலுநர்கள் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர். இதேவேளை பெரும்பாலான பயிலுநர்கள் வன்னிப் பிரதேசங்களில் இருந்து வருகைதருவதால் ஏ9 நெடுஞ் சாலையை அண்மித்துள்ள தென்மராட்சி வலயப் பாடசாலைகளிலேயே பெரும்பாலானவர்கள் பயிற்சியில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகின்றது. 90

# வேகமாக செல்லும் பேருந்துகளால் பாடசாலை மாணவர்கள் அசௌகரியம்

வலிகாமம் பகுதியில் இருந்து யாழ்.வரும் பாடசாலை சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் சாரதிகள் பேருந்துகளை போட்டி போட்டு செலுத்துவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

பாடசாலைகளுக்கு மாணவர்களைக் கொண்டு செல்வதற்கு சேவையில் ஈடுபடும் இத் தனியார் பேருந்துகள் ஒன்றையொன்று முந்திக்கொண்டு செல்வதால் வீதியில் நடமாடும் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இவ்வாறு பாடசாலை சேவையில் ஈடுபடும் பேருந்துகள் நடத்துநர்கள் இல்லாமையால பயணிக்கும் மாணவர்கள் பாதுகாப்பின்றி பயணிப்பதாகவும் இப்பேருந்துகளில் நடத்துநர்களை இணைத்து மாணவர்களை பாதுகாப்பாக ஏற்றிச் செல்லுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (60)




# நேபாள மீட்பு நடவடிக்கையும், இந்தியா – சீனாவின் மூலோபாய நலன்களும்

irishtimes தளத்தில் ராகுல் பேடி கட்டுரையிலிருந்து



நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டு அதிகளவில் அழிவு ஏற்பட்டதன் பின்னர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவியை வழங்குவதற்காக அணுவாயுதப் போட்டியாளர்களான இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் விரைந்து சென்றதற்கு, சிக்கலான பூகோள அரசியல் நிர்ப்பந்தங்கள் மற்றும் நடைமுறை நலன்களைக் கொண்டுள்ளமையே காரணமாகும்.

இவ்விரு நாடுகளும் நூற்றுக்கணக்கான மீட்புப் பணியாளர்கள், மோப்ப நாய்கள் மற்றும் சிறப்பு உபகரணங்கள் போன்றவற்றை நேபாளத்தின் பாதிக்கப்பட்ட இமாலய மாநிலத்தில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தினர்.

இவ்விரு நாடுகளினதும் மீட்புப் பணியாளர்கள் பல தொன் கணக்கான நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளனர். அத்துடன் அழிவுகளுக்குள் சிக்குண்ட மக்களைக் காப்பாற்றுவதற்காக இணைந்து பணியாற்றியுள்ளனர்.

ஆனால் இராணுவ வீரர்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட இவ்விரு நாடுகளினதும் மீட்பு நடவடிக்கைகள் பரந்தளவிலான மூலோபாய நலனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

எவ்வாறிருப்பினும் இந்தியாவின் சமூக ஊடகம் ஒன்றால் வெளியிடப்பட்ட நேபாள நிலநடுக்கம் தொடர்பான உள்ளடக்கமானது உணர்வற்ற ஒன்று எனவும் தேசப்பற்றை மையப்படுத்தியதாக இருந்ததாகவும் நேபாளிகள் முறையிட்டுள்ளனர்.

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் அகப்பட்ட தனது நாட்டைச் சேர்ந்தவர்களை மீட்டெடுப்பதை நோக்காகக் கொண்டே இந்தியா, மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், தமது நாட்டை 'கொலனித்துவம்' ஆக்குவதற்கான ஒரு மூலோபாயத்துடனேயே நேபாள மீட்பு நடவடிக்கையில் தனது நாட்டு இராணுவத்தினரை இந்தியா பயன்படுத்தியதாகவும் குற்றம் சுமத்தப்படுகிறது.

இவ்வாறான எந்தவொரு மூலோபாய அல்லது போட்டிமிக்க நோக்கங்கள் எதனையும் கருத்திற் கொண்டு மீட்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை என இந்திய மற்றும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதாவது பிராந்தியப் போட்டி நிலையின் ஒரு பகுதியாகவே நேபாளத்தில் இவ்விரு நாடுகளும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர் என்கின்ற குற்றச்சாட்டை இவ்விரு நாடுகளினதும் அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

'இந்தியா மற்றும் சீனாவால் பாதிக்கப்பட்ட நேபாளிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் சாதாரண உதவியை விட அதிகமாகும். இவ்விரு நாடுகளும் நேபாளத்தில் நீண்டகால செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கான ஆழமான திட்டத்தின் ஒரு பகுதியாகவே இவ்வாறான உதவிகளை வழங்கியுள்ளனர்' என புதுடில்லியிலுள்ள மூலோபாய முயற்சிகளுக்கான அமைப்பின் பாதுகாப்பு ஆய்வாளர் பிரிகேடியர் அருண் சாகாய் தெரிவித்துள்ளார்.

இந்து மதத்தவர்களை அதிகமாகக் கொண்ட நாடாக நேபாளம் விளங்குவதால் மட்டுமன்றி நேபாளம் மற்றும் இந்தியா ஆகியவற்றின் கலாசாரம், மொழி மற்றும் உணவுப் பழக்கங்கள் போன்றன ஒத்ததாகக் காணப்படுவதாலேயே இந்தியா, நேபாளத்தின் மீது நீண்டகாலச் செல்வாக்கைப் பேணிவந்துள்ளது.

கடந்த ஆண்டிலிருந்து நேபாளமானது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பொதுமக்கள், பொருளாதாரம் மற்றும் மூலோபாய உறவுகளை சார்க் அமைப்பிலுள்ள அதன் ஏழு அயல்நாடுகளுடனும் விரிவுபடுத்துகின்ற கோட்பாட்டிற்கு நேபாளம் மிக முக்கிய பங்காளியாகக் காணப்படுகிறது.

நேபாளத்துடனான இந்தியாவின் உறவு நிலை மேலும் நெருக்கமானதாகக் காணப்படுகிறது. இந்தியாவில் மூன்று மில்லியனுக்கும் மேற்பட்ட நேபாளிகள் வசிக்கின்றனர். இதேபோன்று பத்தாயிரக்கணக்கான இந்தியர்கள் நேபாளத்தில் வசிக்கின்றனர்.

இவ்விரு அயல்நாடுகளுக்கும் இடையில் இலவச நுழைவிசைவுப் போக்குவரத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டுகளாக பாரம்பரிய நிகழ்வாக ஆண்டு தோறும் நேபாளத்திலிருந்து 'கூர்க்கா' வீரர்கள் இந்திய இராணுவத்தில் தொடர்ந்தும் இணைக்கப்படுகின்றனர். இதேபோன்று ஓய்வுபெற்ற முன்னாள் படைத் துறைத் தலைவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதிய நிதியாக பல பில்லியன் ரூபாக்கள் செலவிடப்படுகின்றன.

கார், மோட்டார் சைக்கிள், பொறியியல் மற்றும் மின்சாரப் பொருட்கள், உடைகள், மருந்துப் பொருட்கள், குடிபான வகைகள் மற்றும் சிகரெட்டுக்கள் போன்றன இந்தியாவிலிருந்து நேபாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

பல பத்தாண்டுகளாக இந்தியாவின் வர்த்தக மார்வாடி சமூகத்தவர்கள் நேபாளத்தில் மிகப் பாரிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் சுற்றுலாத்துறை, விவசாயம் போன்ற பல தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

'தனது வர்த்தக மற்றும் போக்குவரத்து மார்க்கங்களுக்கு இந்தியாவிலேயே தங்கியிருக்க வேண்டும் என்பது முற்றிலும் கடலால் சூழப்பட்ட நேபாளத்திற்கு நன்கு தெரியும்' என்கிறார் சாகாய்.

இவ்வாறான ஒரு சூழலில், கடந்த இரு பத்தாண்டுகளாக, இந்தியாவின் செல்வாக்கை மட்டுப்படுத்துவதற்கு நேபாளம், சீனாவை எதிர்பார்க்கிறது எனவும் சாகாய் தெரிவித்தார்.

1987இல் இந்தியாவின் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியால் நேபாளம் மீது நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டிருந்த முற்றுகையை நினைவுபடுத்தும் நேபாளிகள் தம்மை வசியப்படுத்துவதற்கு இந்தியா சிறிதளவு முயற்சியை மேற்கொண்டுள்ளதாகக் கருதுகிறார்கள்.

சீனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நேபாளம் உடன்படிக்கை எட்டிய பின்னர், நேபாளத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்காக இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இரு தரப்பு வர்த்தகம் மற்றும் போக்குவரத்து உடன்படிக்கை போன்றவை மீறப்பட்ட பின்னர் அதனை முறியடிப்பதற்காக நேபாளம் மீது இந்தியா முற்றுகையை மேற்கொண்டது.

நேபாளம் மீதான இந்தியாவின் முற்றுகையானது இந்தியாவின் 'பெரிய சகோதரன்' என்கின்ற மனப்போக்கில் கசப்பை ஏற்படுத்தியது. இதனால் இந்தியாவுக்கும் நேபாளத்திற்கும் இடையிலான நட்புறவு மற்றும் இரு தரப்பு உறவுநிலை விரிசலடைந்தது. இதனால் நேபாளம் புதுடில்லி பக்கம் திரும்பாது, சீனா மீது செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தது.

2014இல், நேபாளத்தின் அதிக முதலீட்டாளராக இருந்த இந்தியாவை சீனா பின்னுக்குத் தள்ளியது. குறிப்பாக, கட்டுமானம் மற்றும் சக்தித் துறைகளின் ஊடாக சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்காக தனது நேபாள எல்லையிலிருந்து இமயமலைக்குக் குறுக்காக தொடருந்து மற்றும் வீதிகளை விரிவுபடுத்தியது.

இது காத்மண்டுவுடன் இணைக்கப்படலாம். அவ்வாறு இணைக்கப்பட்டால் இது தொடர்பாக இந்திய பாதுகாப்பு ஆலோசகர்கள் கவலை கொள்ள நேரிடும்.

இந்தியாவின் அயல்நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்றவற்றுடனும் ஆப்கானிஸ்தான், ஈரான் மற்றும் பர்மா போன்றவற்றுடன் சீனா பாதுகாப்பு, இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவைப் பேணுவதானது அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறான திட்டங்கள் சீனாவின் பட்டுப் பாதை பொருளாதாரத் தொடரை உருவாக்குவதற்கான திட்டங்களில் ஒன்றாகும். அதாவது சீனா தனது பிராந்தியத்தில் மிகவும் பரந்த மேலாதிக்க குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான ஒரு முயற்சியாகவே பட்டுப் பாதைத் திட்டத்தை மேற்கொள்கிறது.

எனினும், சீனாவின் பிரசன்னமானது பொதுவாக நேபாளத்தில் வரவேற்கப்படுகிறது.

# சிறுபோக பயிர்ச்செய்கைக்கு 7 வீதத்தில் வங்கிக்கடன்

சிறுபோக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு வருடத்திற்கு ஏழுவீத வட்டி அடிப்படையில் வங்கிகள் கடன் வழங்கிவருகின்றது.

நெல், மரக்கறி பயிர் வகைகள், வெங்காயம், மிளகாய், எள், கச்சான், சூரிய காந்தி போன்ற எண்ணெய்ப் பயிர்கள், மற்றும் தானியவகை, கிழங்கு வகை என பயிரின் வகைக்கேற்ப கடன் பெற்றுக்கொள்ளமுடியும்.

பயிரின் வகை மற்றும் அதன் பராமரிப்பு உள்ளிட்டவற்றை கருத்திற்கொண்டு கடன் தொகை வரையறை செய்யப்படும்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, டீ.எவ்.சீ.சீ வங்கி, சனச அபிவிருத்தி வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, வர்தக வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, ஹட்டன் தேசிய வங்கி, யூனியன் வங்கி ஆகியவற்றின் கிளைகள், விரிவாக்கல் நிலையங்கள், சேவை நிலையங்களின் ஊடாக இக்கடனை பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (54)

## கந்தர் ஆலயதிருவிழா

மணியந்தோட்டம் கர்த்தர் ஆலய வருடாந்த திருவிழாவின் திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் இன்று காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் பெருவிழா நவநாட்கள் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

# யாழிலும் கவனயீர்ப்பு போராட்டம்

புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் கொலையைக் கண்டித்து யாழ்.இளைஞர்கள் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நல்லூர் ஆலயத்தின் முன்பாக இடம் பெறவுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு நீதி கிடைக்கக் கோரியும் குற்றவாளிகளை கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கோரியுமே இப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. பெண்ணியத்தை காப்பதோடு இதுபோன்ற சம்பவங்கள் இனியும் தொடராதவாறு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதை வலியுறுத்தியுமே இப் போராட்டம் தொடரவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

எனவே இப் போராட்டத்திற்கு வலுச் சேர்த்து வேறுபாடுகள் எதுவுமின்றி அனைவரும் கலந்து கொண்டு ஆதரவளித்து பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு நீதி கிடைக்கவும் குற்றவாளிகளை கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்துமாறும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (48)

நிரந்தர தோல்வி, நிரந்தர துக்கம், நிரந்தர சோகம் என்று எதுவும் கிடையாது. - ஒயிட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எப்போது, என்ன செய்யப்போகிறார்கள்?

புங்குடுதீவைச் சேர்ந்த பள்ளி மாணவி பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது சமூகத்தை அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது.

மாணவர்கள் ஆசிரியர்களும் மற்றும் சமூகத்தின் பலதரப்பினரும் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்.

பொலிசாரால் மூன்று குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் இந்த விஷயம் முடிந்துவிடாது. இத்தகைய குற்றவாளிகளை உற்பத்தி செய்யும் இந்த சமூகச் சூழ்நிலையும் பொறுப்புள்ளவர்களினால் விசாரணை செய்யப்பட வேண்டும்.

குறிப்பிட்ட இந்த சம்பவம் மட்டுமல்லாது, சமீப காலங்களில் பல்வேறு குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பதை பலரும் பதிவு செய்திருக்கிறார்கள். இளைஞர்களிடத்தில் விரக்தியையும் நம்பிக்கையீனங்களையுமே விதைத்துவரும் இன்றைய நம் அரசியல் சூழலுக்கு இதில் பாரிய பங்கிருக்கிறது.

பெரும்பான்மைத் தமிழ் மக்களின் வாக்குகளைச் சுவீகரித்து வைத்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள், இப்போதும், அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள் நம் மண்ணில் இருப்பதுதான் இதற்கெல்லாம் காரணம் என்று சொல்லிவிட்டு நைஸாக நழுவிவிடப் பார்க்கிறார்கள்.

பொலிஸ் மற்றும் இராணுவம் கடற்படை என பாதுகாப்பு தரப்பினர் வடக்கில் நிறைந்துள்ள சூழலில் மாணவியின் கொலையொன்று இடம்பெற்றிருப்பது தனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக த.தே.கூ. வின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வடக்கு மாகாண பிரதிபொலிஸ் மா அதிபருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பாதுகாப்புத் தரப்பினரை வடக்கிலிருந்து வெளியேற்றுவதுதான் இத்தகைய குற்றச்செயல்கள் இங்கே நிகழாமல் தடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வைத்திருக்கும் வழிமுறையா?

“மலர்ந்தது தமிழர் அரசு” என்று சொல்லி மாகாண அரசை எடுத்து வைத்துக்கொண்டு அடுக்கடுக்காய் உணர்ச்சிகரத் தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றிவிட்டு வாளாவிருக்க முடிகிறது.

“நாட்டில் நல்லாட்சியை நாம் கொண்டுவர வாக்களியுங்கள்” என்று கேட்டு, கொண்டுவந்த அரசின் தேசிய உயர் சபையிலும் இருந்துகொண்டு,

வடக்கில் உள்ள பிரச்சினைகளுக்கெல்லாம் மாற்று இனத்தவரும், பிற பிரதேசத்தவர்களும்தான் காரணம் என்று சொல்லிவிட்டுத் தப்பிவிடலாம் என்றே இப்போதும் இந்த அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள்.

இப்போதும் கூட பகை, வெறுப்பு, வன்மமூட்டும் பேச்சுக்கள் மூலம் நமது இளைஞர்களுக்கு நம்பிக்கையற்ற சூழலையே காண்பித்துக் கொண்டிருப்பது பற்றிய குற்றவுணர்வு கிஞ்சித்தேனும் இவர்களிடமில்லை.

பிரேமானந்தா ஆச்சிரமத்தில் குரூரமான பாலியல் துன்புறுத்தல்களுக்கும் கோரக் கொலைகளுக்கும் காரணமாயிருந்தவர்கள் என நீதிமன்றத்தால் சிறைவைக்கப்பட்டவர்களை, தொடர்ந்தும் அந்த ஆச்சிரம வேலைகளைச் செய்வதற்காக விடுவிக்க வேண்டும் என்று கோரும் “அற” உணர்ச்சியைக் கொண்டிருப்பவர்களிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

நமது இளைஞர்களுக்கும் சமூகத்திற்கும் எதிர்கால நம்பிக்கையை அளிக்க வேண்டியதும், விரக்தியால் வக்கிரப்பட்டுச் செல்லும் மனங்களை ஆற்றுப்படுத்த வேண்டியதும், அவர்களுக்கு வாழ்வின் மீது பிடிப்பை உண்டாக்குவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டியதும் அல்லவா இந்த அரசியல்வாதிகளின் இன்றைய தலையாய கடமை?

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டபிறகுதான், இவர்கள் அத்தகைய திட்டங்களையே யோசிப்பார்கள் என்றால், அந்தத் தீர்வைக் காண்பதற்கான முன்னெடுப்புகளை அவசரப்படுத்திச் செய்யவாவது முன்வர வேண்டுமல்லவா?

அறிவித்த அகிம்சைப் போரையும் ஆறப்போட்டிருப்பதற்கு என்ன காரணம்.... தெரியவில்லை. மோடியும் 13க்கு மேல் ஒன்றையும் அழுத்தப் போவதில்லை, ஜோன் கெரியும் அழுத்தப் போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்திச் சென்றுவிட்டார்கள்....

இப்போது எதற்குக் காத்திருக்கிறோம்? தீர்வு எப்படி வரும் என்று இவர்கள் சொல்கிறார்கள்? அதற்கு எப்போது, என்ன செய்யப் போகிறார்கள்?

- *ஆசிரியர்*

# பல அங்கத்துவ தேர்தல் தொகுதி எட்டு வேண்டும்

## இது முஸ்லிம்களின் ஒருமித்த குரல்

(கொழும்பு)

புதிய தேர்தல் முறைமையினால் சிறுபான்மையினரின் அங்கத்துவம் நாடாளுமன்றத்தில் குறைவதாகவும், இதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு புதிதாக 8 பல்அங்கத்துவ தொகுதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும், முஸ்லிம் அமைப்புக்கள் பல இணைந்து அரசாங்கத்துக்கு யோசனைகளை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, கொலன்னாவை, அக்குரணை, உடுநுவர, பேருவளை, மட்டக்களப்பு, மாவனல்லை, காலி என்பவற்றை பல் அங்கத்துவத் தொகுதிகளாக முஸ்லிம் கட்சிகள் அடையாளப்படுத்தியுள்ளன.

இதற்கு மேலதிகமாக, மாவட்ட தொகுதி முறைமையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு உறுப்பினர்களைச் சிறுபான்மையினருக்கு வழங்குமாறும் அக்கட்சிகள் தமது வேண்டுகோளில் முன்வைத்துள்ளன.

இந்த வேண்டுகோளை, அகில இலங்கை முஸ்லிம் லீக் இளைஞர் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில், தேசிய சூரா சபை உட்பட முஸ்லிம் அமைப்புக்கள் பலவற்றின் தலைமையில் ஜனாதிபதிக்கும், தேர்தல் தொடர்பிலான அமைச்சரவை உப குழுவுக்கும் முன்வைத்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

# அமைச்சர் ராஜித சொல்வது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது

## மேஜர் நிஸங்க சேனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எவன் கார்ட் நிறுவனத்துக்கு எதிரான விசாரணையை மூடிமறைப்பதற்காக தனக்கு மாதாந்தம் 20 மில்லியன் ரூபா இலஞ்சம் தர அந்நிறுவன அதிகாரியயாருவர் தன்னைப் பேரம் பேசியதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவிக்கும் கருத்தில் எந்தவித உண்மைத்தன்மையும் இல்லை என்றும், அவ்வாறிருக்குமாயின், அவர் அவரிடமுள்ள வீடியோ ஆதாரத்தைக் கொண்டு எனக்கெதிராக இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவேண்டும் என்றும் எவன்கார்ட் நிறுவனத் தலைவர் மேஜர் நிஸங்க சேனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார, சுதேச மருத்துவ அமைச்சருமான ராஜித சேனாரட்ன, “எவன் கார்ட் நிறுவனத்தில் என்னையும் பங்குதாரர்களாக ஆக்கிக்கொள்ள சிலர் முயற்சித்தனர்.

இந்நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் மூடிமறைப்பதற்காக எனக்கு மாதாந்தம் 20 மில்லியன் ரூபா இலஞ்சம் வழங்க முன்வந்ததுடன், மேலும் சில அமைச்சர்களுடனும் பேரம் பேசுதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனை நான் முற்றாக மறுத்ததுடன் அவர் வழங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்தேன். இவை அனைத்தும் வீடியோ செய்யப்பட்டுள்ளன” என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், எவன்கார்ட் சம்பவம் குறித்த விசாரணையை மூடிமறைக்க தான் பணம் கொடுத்ததாக தன் மீது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன என்று அந்நிறுவனத் தலைவர் மேஜர் நிஸங்க சேனாதிபதி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், “ராஜித குறிப்பிடுவதுபோன்று வீடியோ ஆதாரங்கள் இருக்குமாயின், காலம் தாமதிக்காமல் இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவில் அவற்றைச் சமர்ப்பித்து முறைப்பாடு செய்ய வேண்டும். எவன்கார்ட் விசாரணையை மூடிமறைக்க எவருக்கும் பணம் கொடுக்கவேண்டிய அவசியம் எனக்கில்லை. இது மாதிரியான கீழ்த்தரமான வேலைகளை நான் ஒருபோதும் செய்வதில்லை. அத்துடன், இவ்வாறான ஒரு விடயம் நடந்திருப்பின் சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். முக்கிய பொறுப்பில் உள்ள ஒருவர் இது போன்று பொய்க் கருத்துகளைத் தெரிவிப்பது முறையற்ற செயலாகும்” என்று கூறியுள்ளார்.

## முதலில் எல்லை நிர்ணயம் அதன் பின்னரே தேர்தல்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தினம் தீர்மானிப்பது, உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு, அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னராகும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மட் தெரிவித்துள்ளார்.

களுத்தறையில் நடைபெற்ற பிரதேச ஊடகவியலாளர்களுக்கான தேர்தல் சட்டங்கள் குறித்த செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

2012 ஆம் இலக்க 22 ஆம் பிரிவு உள்ளூராட்சி சபைத்தேர்தல் சட்டத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட அந்தந்த தொகுதி தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும் வரையில் தேர்தல் நடாத்த முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## விபத்தில் சிக்கியது யாழ்.தேவி

(கொழும்பு)

பிரதான ரயில் பாதையில் ஏற்பட்ட விபத்து காரணமாக ரயில் சேவைகள் தாமதம் அடைந்துள்ளதாக, ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குணுபிடிய பகுதியில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கன்ரர் ஒன்றுடன் யாழ். தேவி ரயில் மோதியதில் ஏற்பட்ட இந்த விபத்தில், உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் நன்மதிப்பை உயர்த்த 19ஆம் திருத்தம் உதவும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்திக் கொள்ள 19ஆம் திருத்தச் சட்டத்தை பயன்படுத்திக் கொள்ள முடியும் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் 19 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் நன்மைகளை சந்தைப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிளவடைந்த நிலையில் 19 ஆம் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை, முழு அளவில் நாடாளுமன்றின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொடிய பயங்கரவாதம் இல்லா தொழிக்கப்பட்டுள்ளதாகவும், சமாதானத்தை வென்றெடுக்க வேண்டிய அவசியம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

19ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் சர்வதேச ரீதியில் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மனித உரிமை மற்றும் ஜனநாயக நிலைமைகளின் அடிப்படையில் அதிகளவான முதலீட்டாளர்களை கவர முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# மே 2009 இல் எல்.ரீ.ரீ.ஈ இன் இராணுவ தோல்வி 1

■டி.பி.எஸ் ஜெயராஜ்

ஒருவர் நிகழ்காலத்தை புரிந்து கொள்வதற்கும் மற்றும் எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கும் உதவியாக உள்ள பாடங்களை கடந்த காலத்திலிருந்து கற்றுக்கெள்ள விரும்பினால் அல்லாது கடந்த காலத்தைப் பற்றி வெறுமே பேசுவது பயனற்றது. இருந்தும் நான் அதைச் செய்வது ஏனென்றால் குறைந்தபட்சம் சில-ராவது பொறுப்புணர்வுடன் கடந்த காலத்தை பிரதிபலிப்பதுடன் கடந்த காலத்தில் மேற்கொண்ட தவறுகளை எதிர்காலத்தில் செய்யாது தவிர்ப்பார்கள் என்கிற நம்பிக்கையில்தான்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையின் அரசியல் போக்கை தீர்மானிக்கும் சக்திகளாக இருந்த எல்.ரீ.ரீ.ஈ, இறுதியாக இலங்கை ஆயுதப் படைகளை தோற்கடித்து சுதந்திர நாடாம் தமிழ் ஈழத்தை ஒரு தட்டில் வைத்து தரப்போகிறது என்று பலரும் நினைத்திருந்தார்கள்.

அவர்கள் எல்.ரீ.ரீ.ஈ நடாத்திய மனித உரிமை மீறல்களை காணாமல் விட்டுவிட, புறக்கணிக்க, பூசி மெழுக அல்லது அப்பட்டமாக மறுதலிக்க விரும்பினார்கள் ஏனென்றால் விடுதலைப் பாதையில் இவையாவும் அவசியமான தீமைகள் என அவர்கள் எண்ணினார்கள். எனினும் யாராவது ஆக்கபூர்வமான விமர்சனம்



**ஒருவர் நிகழ்காலத்தை புரிந்து கொள்வதற்கும் மற்றும் எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கும் உதவியாக உள்ள பாடங்களை கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ள விரும்பினால் அல்லாது கடந்த காலத்தைப் பற்றி வெ-றுமே பேசுவது பயனற்றது. இருந்தும் நான் அதைச் செய்வது ஏனென்றால் குறைந்தபட்சம் சிலராவது பொறுப்புணர்வுடன் கடந்த காலத்தை பிரதிபலிப்பதுடன் கடந்த காலத்தில் மேற்கொண்ட தவறுகளை எதிர்காலத்தில் செய்யாது தவிர்ப்பார்கள் என்கிற நம்பிக்கையில்தான்.**

வெளியிட்டால், அவர்கள்மீது அவதூறு அள்ளி வீசப்பட்டு துரோகி எனும் கண்டனத்துக்கும் ஆளானார்கள்.

எல்.ரீ.ரீ.ஈ. இனால் பின்பற்றப்படும் செயற்பாட்டு முறைகள் வெற்றியை தராது மற்றும் தீர்க்கமான தோல்வி நிச்சயம் என்று சுட்டிக்காட்டியபோது அத்தகைய அறிவுரைகள் புலிகள் மற்றும் அவர்களது சக பயணிகளால் நிராகரிக்கப்பட்டதுடன் தொடர்ந்து மறுக்கப்பட்டும் வந்தன. புலிகள் வட்டாரத்தில் இராணுவவாத சிந்தனைகள் மற்றும் இராணுவ வெற்றி மட்டுமே ஒரே தீர்வு என்கிற நம்பிக்கை, நல்ல கருத்துள்ள ஆலோசனைகளை அவர்கள் புறக்கணிக்கும்படி செய்தது.

புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட மோசமான தவறுகளைச் சுட்டிக்காட்டி உடனடி நடவடிக்கையாக அவற்றை திருத்தும்படி நான் பல தடவை-கள் சொன்னதுண்டு. நான் விரும்பியதெல்லாம் எல்.ரீ.ரீ.ஈ தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் ஆனால் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் மாய உலகத்தில் வாழ்பவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இன்று எல்.ரீ.ரீ.ஈ இலங்கையில் ஒரு செயற்பாட்டு அமைப்பாக இல்லை. எண்ணிக்கையற்ற மரணங்களுக்கு, அளவிடமுடியாத அழிவுகளுக்கு மற்றும் மிகப் பெரிய இடப்பெயர்வுகளுக்கு வழியமைத்த தமிழ் ஆயுதப் போராட்டம் ஒரு கசப்பான நினைவு மட்டுமே. அடித்து துவைக்கப்பட்ட இலங்கை தமிழர்கள் உடைந்து நொருங்கிய துண்டுகளை எடுத்து அதைக்கொண்டு தங்கள் வாழ்க்கையை ஓட்டிச் செல்ல, மெல்ல மெல்ல போராடி வருகிறார்கள். எனினும் ஆழமாகச் சிந்திக்கும் தமிழர்கள் பலருக்கும் தங்கள் வாழ்க்கை மீண்டும் ஒருபோதும் பழையது போல, ஆகாது என்பது நன்கு தெரியும்.

கடந்த காலத்தில் எல்.ரீ.ரீ.ஈ. இனை விமர்சித்ததுக்காக என்னை காட்டுமிராண்டித்தனமாக விமர்சித்த பலர் இந்த நிகழ்வுகளின் மாற்றத்தால் ஒருவகை குழப்பத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்ந்துள்ளார்கள். எல்.ரீ.ரீ.ஈ. இன் தோல்வியை அடுத்து உடனடியாக வாசகர்களிடமிருந்து எனக்கு வந்த தனிப்பட்ட மின்னஞ்சல்களின் தொகையினைக் கண்டு நான் ஆச்சரியம் அடைந்தேன்! அநேகர் எனது முந்தைய கட்டுரைகளை குறிப்பாக பாராட்டியதுடன் பட்டபின் வருகின்ற ஞானம் அவர்களது முந்தைய கண்ணோட்டத்தை மாற்றியிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள். எல்.ரீ.ரீ.ஈ மற்றும் பிரபாகரன் ஆகியோருக்கு தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு ஒரு திருப்தியான முடிவைக் கொண்டு வருவதற்கான சக்தி மற்றும் தகுதி இருந்தபோதும் அவர்கள் அதில் தோல்வியுற்றதுடன் இறுதி ஆய்வு தமிழ் மக்களை காட்டிக்கொடுத்து விட்டது என்றும் சிலர் குறிப்பிட்டிருந்தார்கள். தற்சமயம் தமிழ் மக்கள் நடைமுறைக்கேற்ற, சுயநலமற்ற தலைவர் இல்லாத நிலையில் தலையறுபட்ட கோழிக் குஞ்சினைப் போல வெறிபிடித்து ஓடியபடி வெற்று வாய்வீச்சு முழக்கங்களைக் கேட்டபடி மற்றும் காலப்போக்கில் நீண்ட தோல்வியை ஏற்படுத்தக்கூடிய நடைமுறைக்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

எல்.ரீ.ரீ.ஈ நல்ல நம்பிக்கையுடன் பேச்சு வார்த்தைகளுக்குச் சென்று ஐக்கியமான இலங்கைக்குள் சமத்துவமாக வாழ்வதை உறுதி செய்யும் பேச்சு வார்த்தை தீர்வு ஒன்றை கொழும்புடன் ஏற்படுத்தி இருந்தால் எப்படி இருந்திருக்கும் என்கிற பிரதிபலிப்புகள் என்னுள் சிலநேரங்களில் ஏற்பட்டு சோகமான உணர்வுகளை என்னுள் ஏற்படுத்துவதுண்டு. நான் அனுபவிக்கும் அந்த துயரம் சாகும்வரை என்னைவிட்டு மறையாது என்பது எனக்குத் தெரியும். தமிழ் மக்கள் இலங்கையில் படிப்படியாக குறைந்து முற்றாக அழிந்து போவதைக் காண நான் சாட்சியாக இருக்கிறேன் என்பதை எண்ணும் போது அது மேலும் மேலும் அதிகரிக்க மட்டுமே செய்கிறது.

இலங்கையில் தமிழ் ஈழத்தை அடைய வேண்டும் என்கிற இலக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சி, அரசியல் - இராணுவ அடிவானத்தில் பல தமிழ் போராளிக் குழுக்களை உதயமாக்கியதை காண முடிந்தது. ஒரு சமயத்தில் பெரிதும் சிறிதுமாக கிட்டத்தட்ட 34 அமைப்புகள் இருந்தன. இவை அனைத்திலும் தமிழ் ஆயுதப் போராட்டத்தை உயிரோட்டமுள்ளதாக தொடர்ந்த ஒரு ஒற்றை அமைப்பாக வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான எல்.ரீ.ரீ.ஈ இருந்தது. பிரபாகரனின் கீழிருந்த எல்.ரீ.ரீ.ஈ அதன் சபதமெடுத்திருந்த இலக்கான தனியான தமிழ் நாட்டை அடைவதை நோக்கி இறுதிவரை சளைக்காது போராடியது.

பிரபாகரனும் மற்றும் சிலரும் குழுவாக இணைந்து தமிழ் புதிய புலிகள் (ரி.என்.ரி) எனும் அமைப்பை ஆரம்பித்தனர். ரினிற்றோதொலுயீன் எனும் வெடிமருந்துக் கலவையையும் சுருக்கமாக ரி.என்.ரி என குறிப்பிடுவதும் உண்டு.

கல்வியங்காட்டைச் சேர்ந்த செட்டி எனும் தனபாலசிங்கத்தின் தலைமையின் கீழ் ரி.என்.ரி இயங்கியது. பொலிஸ் தேடுதல் வேட்டை நடாத்தி முக்கியமான இளைஞர் ஆர்வலர்களை கைது செய்யத் தொடங்கியதும் பிரபாகரன் அதிலிருந்து நழுவி கடல்கடந்து தமிழ் நாட்டுக்குச் சென்றுவிட்டார். எழுபதுகளில் அவர் இப்படி வருவதும் போவதுமாக இருந்தார். இலங்கையில் பிரபாகரன் ஒரு போதும் கைது செய்யப்படவில்லை.

1975 யூலையில் முன்னாள் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மேயரான அல்பிரட் துரையப்பா பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் வழிபாடு செய்யப்போகும்போது அவரைக் கொலை செய்து ரி.என்.ரி தனது முத்திரையை பதித்தது. பிரபாகரன் உட்பட நான்கு இளைஞர்கள் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டு உள்ளார்கள். பின்னாளில் பிரபா-கரன் தனது சாதனை-களைப் பற்றிக் குறிப்பிடுகையில் இந்தக் கொலை தான் தனது முதலாவது இராணுவ செயற்பாடு எனக் குறிப்பிட்டுள்ளார்.

ரி.என்.ரி மே 5, 1976 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரீ.ரீ.ஈ) என உருமாற்றம் பெற்றது. அன்றைய தினத்தில் கிட்டத்தட்ட 40 - 50 தமிழ் இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு இரகசிய இடத்தில் இரகசியமாகச் சந்தித்து எல்.ரீ.ரீ.ஈ இனை உருவாக்கினார்கள். உமாமகேஸ்வரன் அதற்கு தலைவரானார். பிரபாகரன் இராணுவ தள-பதியாக நியமிக்கப்பட்டார். இந்த புதிய அமைப்பை ஒருங்கிணைத்து கட்டுப்படுத்த ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. உமாமகேஸ்வரன் மற்றும் பிரபாகரன் ஆகிய இருவரும் இந்தக் குழுவின் அங்கத்தவர்கள். அவர்களின் இலக்கு சந்தேகத்துக்கு இடமற்ற வகையில் தெளிவாக இருந்தது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஈழம் எனப்படும் சுயாதீன நாட்டை உருவாக்குவது. அதற்காக கொரில்லா யுத்தமுறையிலான போர் உத்தியை பயன்படுத்தி, இலங்கை அரசுக்கு எதிராக போராடுதல்.

ஒன்பது நாட்களுக்குப் பிறகு மே 14 இல் புதிதாக உருவாக்கப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (ரி.யு.எல்.எப்) வட்டுக்கோட்டையில் வைத்து இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு தமிழ் ஈழம் எனும் தனி நாட்டை கோரி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. யூலை 77 இல் நாடாளுமன்றத் தேர்தல்களில் பிரிவினைவாதத்தின் அடிப்படையில் ரி.யு.எல்.எப் போட்டியிட்டது. ரி.யு.எல்.எப் தனது தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது. கட்சியானது தமிழ் ஈழத்துக்கான ஒரு ஆணையைக் கோரி நடாத்தப்படும் ஒரு சர்வசன வாக்கெடுப்பாக இந்த தேர்தலை கருதுகிறது என்று வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர் பெரும்பான்மையாக உள்ள அனைத்து தொகுதிகளிலும் ரி.யு.எல்.எப் வெற்றி வாகை சூடி 18 ஆசனங்களை கைப்பற்றியது. ரி.யு.எல்.எப் பொதுச் செயலாளர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

(தொடரும்)

# உள்ளக விசாரணையை ஐ.நா. செயற்குழு பரிசீலிக்க முயற்சி

எதிர்வரும் ஒகஸ்ட் 3 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளும் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா. செயற்குழு, உள்ளக விசாரணைக் குழுவுடன் முக்கிய பேச்சுகளில் ஈடுபடவுள்ளது. அத்துடன், காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான தரவுகளையும் கோரவுள்ளது என அறியமுடிகிறது. இவ்வாறான தொரு சந்திப்பு இடம்பெறவுள்ளதை உள்ளக விசாரணைக் குழுவின் உயர் அதிகாரியொருவர் உறுதிப்படுத்தியுள்ளார். வடக்கு, கிழக்கில் காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடாத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை அண்மையில் வெளியிட்டது. இதுபற்றி ஐ.நா. குழுவுக்கு மேற்படி குழு தெளிவுபடுத்தவுள்ளது. அத்துடன், தமது பணிகள் குறித்தும் அது விபரிக்கவுள்ளது. காணாமல்போகச் செய்யப்பட்டோர் விவகாரம் தொடர்பில் உள்ளக விசாரணைக் குழுவிடம் இந்தச் சந்திப்பின்போது, ஐ.நா. குழு பல கேள்விகளை எழுப்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, படையினருக்கு எதிராகக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தப்படலாம் எனத் தெரியவருகிறது. வடக்கு, கிழக்கில் செயற்படும் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான அமைப்புகளுடனும் ஐ.நா. குழு பேச்சு நடாத்தவுள்ளது. காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. செயற்குழுவானது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின்கீழ் இயங்கும் அமைப்பாகும். 2006 ஆம் ஆண்டிலிருந்தே இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதற்கு இந்தக்குழு முயற்சித்தது. எனினும், மகிந்த அரசு இதற்கு இடமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்சி மாற்றத்தின் பின்னர், ஜெனிவாவில் வைத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கொழும்பு வருமாறு மேற்படி குழுவுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்நிலையிலேயே ஐ.நா. குழுவின் 10 நாட்கள் இலங்கைப் பயணம் அமையவுள்ளது. இதேவேளை, காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடாததும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்தகட்ட அமர்வு எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதிமுதல் 5 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

# குண்டு துளைக்காத வாகனம் கிடைத்தது எப்படி?

## விசாரணை ஆரம்பம்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருக்கும் போது அவருக்கென வழங்கப்பட்டிருந்த குண்டுகள் துளைக்காத மோட்டார் காரொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் சஜிந்தவாஸ் குணவர்தன பாவித்துள்ளதாக இரகசிய பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதற்கு மேலதிகமாக அவர் ஜனாதிபதி செயலகத்தின் மற்றும் பாதுகாப்பு பிரிவுக்கு சொந்தமான 20 வாகனங்களை தனது சொந்த தேவைக்காக பயன்படுத்தியமையும் தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலி காலத்தில் தனது பாதுகாப்புக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாவித்த வாகனத்தை சஜிந்தவாஸ் எவ்வாறு பயன்படுத்தினார் என்பது பிரச்சினைக்குரிய விடயமாகுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இந்திய மீனவர் விடுதலை

தமிழகத்தின் நாகபட்டினத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்று இலங்கை கடற்படையினரால் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட 37 மீனவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டனர். நாகையில் இருந்து கடந்த மார்ச் 29ஆம் திகதி 17 மீனவர்கள், மார்ச் 31ஆம் திகதி 7 மீனவர்கள், ஏப்ரல் 1ஆம் திகதி 6 மீனவர்கள், ஏப்ரல் 2ஆம் திகதி 7 மீனவர்கள் என மொத்தம் 37 பேர் படகில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

இவர்கள் கோடியக்கரைக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களை கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஏப்ரல் 5ஆம் திகதி ஆஜர்படுத்தினர். அவர்களை ஏப்ரல் 17ஆம் திகதி வரை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை 37 மீனவர்களும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜரானபோது, அவர்களை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் அவர்களது 5 படகுகள் விடுவிக்கப்படவில்லை என தமிழக ஊடகமான தினமணி குறிப்பிட்டுள்ளது.

# காஞ்சி சங்கராச்சாரியார் விரைவில் கொழும்புக்கு



காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாமி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார். அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இணைபபாளர் சமன் ஆதாவுதஹெட்டி, சங்கராச்சாரியாரை சந்தித்திருந்தார்.

அதன் போது இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும், இலங்கை பூசகர்களுக்கு பயிற்சிகளை வழங்குமாறும் சங்கராச்சாரியாரிடம் கோரப்பட்டிருந் தது. இந்தக் கோரிக்கையை சங்கராச்சாரியார் ஏற்றுக்கொண்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் வைத்து தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மற்றும் மத்திய மலைநாட்டைச் சேர்ந்த இந்துக்களை சங்கராச்சாரியார் இலங்கை விஜயத்தின் போது சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. மதத் தலைவர்களும் சங்கராச்சாரியாரை சந்திக்க உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பெரும்பாலும் எதிர்வரும் செப்டம்பர் மாதமளவில் சங்கராசசாரியார் இலங்கைக்கு விஜயம் செய்வார் என புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

# தேர்தலை சந்திக்க அஞ்சுகிறதா ஐ.தே.க.



ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலுக்கு அஞ்சுகின்றதா என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாரஹேன்பிட்டி அபயாராமவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவா உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தாது விசேட ஆணையாளர்களை நியமிக்கின்றது என அவர் கேள்வி எழுபபியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் ஆணை வழங்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் திட்டத்திற்கு மட்டுமே மக்கள் வாக்களித்திருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கைது தொடர்பில் அறிவிக்குமாறு சபாநாயகர் கோரிய போதிலும் அரசாங்கம் அதனை உதாசீனம் செய்து, எதேச்சாதிகாரமாக சந்தேக நபர்களை கைது செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்ட விதமே பிழையானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். காவல்துறை சட்டத்தின் 55ஆம் சரத்தின் அடிப்படையில் பிரிவுகளை உருவாக்கும் அதிகாரம் பொலிஸ் மா அதிபருக்கு மட்டுமே உண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

வேறு எவராலும் இவ்வாறு பிரிவுகளை உருவாக்க முடியாது எனவும், நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு, பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உப குழுவினால் நிறுவப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தமிழக அகதிகள் தயாராக இல்லை நாடு திரும்ப



தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகளில் 35 வீதமானவர்களே மீண்டும் தாயகம் திரும்புவதற்கு தயாராகவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் உள்ளனர், அவர்களில் பலர் சிறந்தவேலைகளில் உள்ளனர், குடும்பங்கள் உள்ளன, அவர்கள் அனைவரும் இங்கு வரமாட்டார்கள்,

கடந்த காலங்களில் இலங்கைக்கு திரும்பிவருபவர்கள் விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நான்கு ஐந்து மணிநேரம் அவர்கள் விசாரிக்கப்பட்டனர். இதனால் அவர்கள் மீண்டும் இலங்கைக்கு வருவது குறித்து அச்சம் கொண்டிருந்தனர். இந்த விசாரணைகளை குறைப்பதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்

இதுவரை காலமும் தாயகம் திரும்பும் அகதிகள் மூன்று வெவ்வேறு அமைப்புகளால் விசாரிக்கப்பட்டனர், ஆனால் தற்போது மூன்று அமைப்பினை சேர்ந்தவரகளும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்த விடயத்தில் எனது அமைச்சு படையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து பணியாற்றுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எமது எதிரி ரணில்

"நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரும் தேசிய அரசு அமைவதை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். கூட்டு அரசுக்கு இனி அவசியம் இல்லை. எனவே, பிரதான தனிக் கட்சியே ஆட்சியமைக்க வேண்டும்." - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். "எமது பிரதான எதிரி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவரை ஒன்றிணைத்து எதிர்கால அரசியலை மேற்கொள்ள முடியாது. இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்துவதே எமது நோக்கம்" என்றும் அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மீண்டும் தேசிய அரசு அமைவதற்கான சாத்தியம் உள்ளதா எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# உள்ளூராட்சி சபைகள் ஆணையாளரின் கட்டுப்பாட்டில்

## காரணம் கூறுவாரா மைத்திரி



பதவிக்காலம் முடிவடைந்த உள்ளூராட்சி சபைகளை தேர்தல் நடைபெறும் வரைக்கும் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் விசேட ஆணையாளர்களின் கீழ் கொண்டுவந்துள்ளமை ஏற்புடையதாக இல்லை. இந்த விடயத்தில் நாங்கள் அதிருப்தியுடன் இருக்கின்றோம். இது தொடர்பில் ஜனாதிபதி விளக்கமளிக்கவேண்டும். நியாயமான காரணங்கள் முன்வைக்கப்படாவிடின் அரசில் அங்கம் வகிப்பதா, இல்லையா என்பதனை அடுத்த வாரமளவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானிக்கும்." - இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார். நல்லாட்சியில் ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்கள் இடம்பெறக்கூடாது. உள்ளூராட்சி சபைகளுக்கு உடனடியாகத் தேர்தலை நடாத்தலாம் அல்லது அவற்றின் ஆட்சிக் காலத்தை நீடித்திருக்கலாம். அதனை விடுத்து ஆணையாளரின் கீழ் கொண்டுவருவது மக்களின் வாக்குரிமையைக் கேள்விக்குட்படுத்தும் செயற்பாடாகும். இதனை நல்லாட்சியில் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அதனால் இந்த அரசில் அமைச்சுப் பதவிகளைத் தொடர்ந்து வகிப்பதா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நீரில் மூழ்கியுள்ளது குஞ்சுக்குளம் பிரதான வீதி



(குஞ்சுக்குளம்)

குஞ்சுக்குளம் கிராமத்திற்கான பிரதான வீதி நீரில் மூழ்கியுள்ளதால் அப்பகுதி மக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கடந்த ஒரு வாரகாலமாக மல்வத்து ஓயாவின் ஆற்று நீர் பெருக்கெடுத்துள்ளதால் குஞ்சுக்குளம் கிராமத்திற்கான பிரதான வீதி நீரில் மூழ்கியுள்ளது. அதனால் கடந்த சில நாட்களாக குறித்த கிராம மக்களின் தரை வழிப்போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

மல்வத்து ஓயாவின் ஆற்று நீர் குஞ்சுக்குளம் பிரதான வீதியை ஊடறுத்து பாய்வதினால் இவ் அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

இதனை அடுத்து குறித்த கிராம மக்கள் குஞ்சுக்குளம் தொங்கு பாலத்தை போக்குவரத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

எனினும் குறித்த தொங்கு பாலம் ஏற்கனவே சேதமடைந்துள்ளதால் அப்பாலத்தினூடாக செல்வது அபாயகரமாக காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இக் கிராமத்தின் பிரதான வீதி நீரில் மூழ்காதவாறு பாலம் அமைப்பதற்கான பணிகள ஆரம்பிக்கப்பட்டும் அவ் நிர்மாணப்பணிகள் மந்த கதியில் நடைபெற்றுவந்ததினால் பால வேலைகள் முற்றுப்பெறாத நிலையில் அங்கு நிர்மானிக்கப்பட்ட பாலத்திற்கான தூண்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. இதனால் பால வேலைகள் மேலும தடைப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இக் கிராம மக்களுக்கான உணவு பொருட்கள் எதிர்வரும் ஒரு வாரத்திற்கு கையிருப்பில் உள்ளது மேலும் ஒரு வாரம் குறித்த மல்வத்து ஓயா நீர் தொடர்ந்து பாயுமானால் மாற்று வழியூடாக உணவுப்பொருட்களை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை மடு பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது.

கடந்த வருடம் குறித்த கிராமத்தின் அனைத்து வீதிகளும் வெள்ள நீர் உட்புகுந்தமையினால் வீதிகள் துண்டிக்கப்பட்ட நிலையில் உலங்கு வானூர்தி மூலம் உணவுப்பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்வி சமூக செயற்பாட்டை மாற்றுவதன் மூலம் இந்து சமய கலாசாரத்தை காக்க முடியும்

### - யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் தெரிவிப்பு -

(யாழ்ப்பாணம்)

ஒரு காலத்தில் இந்த நாட்டில் வாழ்ந்த 100 சதவீதமானோரில் 20 வீதமானோர் சைவலர்களாகக் காணப்பட்டார்கள். எம்மவர்கள் வெளிநாட்டு மோகத்தில் சென்றதாலும், இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்றதாலும், வேறு மதங்களுக்கு மாற்றப்பட்ட காரணத்தாலும் தற்போது 100 இற்கு 12 வீதமானோரே சைவர்களாகக் காணப்படுகிறார்கள். இந்த நிலைமை மிகவும் கவலைக்கிடமானது. என யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். கொக்குவில் யாழ்.விஷனின் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலைக்குப் புதிதாக அமைக்கப்பட்ட தியான மண்டபத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.விஷன் முதல்வர் கந்தையா சுசீந்திரன் தலைமையில் இடம்பெற்ற போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தியான மண்டபத்தை நல்லை ஆதீன முதல்வருடன் இணைந்து திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பௌத்த கல்விக்கு மூன்று பல்கலைக்கழகங்களும்,ஒரு பீடமுமிருக்கின்றன. அத்துடன் வேறு பல பல்கலைக்கழகங்களிலும் பௌத்த கல்விக்கான துறைகளுமிருக்கின்றன.

இதனால் அவர்கள் ஒவ்வொரு வருடத்திலும் கலைப் பீடத்திற்கு 250 மாணவர்களையும்,அரபிய இஸ்லாமிய பீடத்திற்கு 250 மாணவர்களையும் உள்வாங்குகின்றனர். ஆனால் எங்களுடைய சைவ சமயத்திற்கு அவ்வாறான எந்தவொரு பல்கலைக்கழகங்களுமில்லை. பீடங்களுமில்லை. விசேட அனுமதிகள் கூட இல்லை.

கலைப் பீடத்திற்குத் தெரிவு செய்யப்படுபவர்களில் குறிப்பிட்ட சிலர் மாத்திரம் தான் இந்துசமயம் சார்ந்த பாடங்களைப் பயில்கிறார்கள். இதன் காரணமாக எங்கள் பாடசாலைகளில் இந்து சமயத்தைக் கற்பிப்பதற்குப் போதிய ஆசிரியர் வளமில்லாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுவது எம்மத்தியிலுள்ள பெரும் குறைபாடாகும். இலங்கையில் தற்போது நூறில் 12 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாகவுள்ளனர். ஜப்பான் போன்ற நாடுகளில் 90 வயதைத் தாண்டியும் வாழ்வது சாதாரணமாகிப் போய் விட்டது. இந்த நிலையில் வளர்ச்சியடைந்த நாடுகளில் முதியவர்களின் தொகை அதிகரித்திருப்பது அந்தந்த நாடுகளுக்குத் தலையிடியாக மாறியிருக்கிறது.

இதன்காரணமாக ஒவ்வொரு நாடுகளுடைய தொழிற்துறையை, அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாத மனித வளம் இல்லாத இக்கட்டான நிலையேற்பட்டுள்ளது.

இலங்கையில் 50 ஆம் 60 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த பெற்றோருக்கு 9 வரையான பிள்ளைகள் காணப்பட்டார்கள். தற்போது அவ்வாறு பிள்ளைகள் பிறப்பது அரிதாகி விட்டது. சென்னைக்குச் சென்று வந்தால் தான் ஒரு குழந்தையாவது பிறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது அனைத்து நாடுகளிலும் வயது கூடியவர்களின் தொகை அதிகரித்துள்ள காரணத்தால் அதிகளவில் பெண்களை வேலைப் பணிக்குக் கொண்டு வர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே எமது சமுதாயத்திற்கு கல்வி, தொழில்நுட்பத் திறன், நல்லொழுக்கம், இறைபக்தி மிக்க பிள்ளைகள் தேவைப் படுகிறார்கள். பிள்ளைகளின் நலனில் பெற்றோர்களும், மூத்தோர்களும் மிகவும் கரிசனையுடன் செயற்பட வேண்டும் என்றும கூறினார்.



பரந்தன் திருச்சிலுவை முன்பள்ளியில் இன்று இடம்பெற்ற சிறுவர் சந்தை நிகழ்வில் (90)

## பரிவார மூர்த்திகளுக்கு மண்டபங்கள் அமைப்பு

(புலோலி)

புலோலி வடகிழக்கு சூழாவடி அருள்மிகு ஆதிவீரபத்திரர் ஆலயத்தில் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் ஆறு பரிவார மூர்த்திகளுக்கான மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன

பிள்ளையார், முருகன், முத்துமாரி, ஆதிபராசக்தி, பேச்சி அம்மன், வீரபத்திரர் போன்ற பரிவாரமூர்த்திகளுக்கே இவ்விதம் மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திருப்பணிவேலைகள் முடிவடைந்ததும் ஆனிமாத நடுப்பகுதியில் மேற்படி ஆலய மகா கும்பாபிஷேகம் மிகவும் சிறப் பாக நடாத்தத் திட்டமிட்டிருப்பதாக இவ ஆலய தர்மகத்தாவும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய வைரமுத்து - இராமச்சந்திரன் எமது செய்தியாளருக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ் ஆலய திருப்பணிக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அடியார்கள் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் ஆலயத்தின் பெயரில் உள்ள 100 320161144 இலக்க சேமிப்புக் கணக்கில் நிதியை வைப்பிலிட முடியும் என்றும் தெரிவித்தார்

(166)

## காணிகளை சுவீகரிக்கத்திட்டம்

பாதுகாப்பு படையினர் கோரியிருக்கும் காணிகளைத் தவிர வேறு எக் காணிகளிலும் படையினர் நிலை கொண்டிருக்க அனுமதிக்க வேண்டாம் என மன்னார் மாவட்ட செயலாளர் தேசப்பிரிய பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

மன்னார, நானாட்டான, முசலி, ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் காணிகளை சுவீகரிப்பதற்கு பாதுகாப்பு படையினர் விண்ணப்பித்துள்ளனர். இவ்விடயம் குறித்து பிரதேச செயலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் மன்னார் மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. அதன் போதே மாவட்ட செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 16 இடங்களும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 4 இடங்களும் முசலி பிரதேசப் செயலாளர் பிரிவில் 4 இடங்களும் என மொத்தமாக 172 ஏக்கர் தனியார் காணிகளை சுவீகரிப்பதற்காக பாதுகாப்பு படையினர் விண்ணப்பித்துள்ளனர். எனவே பாதுகாப்பு படையினர் விண்ணப்பித்திருக்கும் இடங்களை தவிர வேறு இடங்களில் இராணுவ முகாம்களை அமைக்க அனுமதிக்க வேண்டாம் என்றும் தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியின் க.பொ.த (உ/த) 2017இற்கான வகுப்புக்களை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 20ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பெற்றோர், மாணவர்கள் கட்டாயமாக கலந்துகொள்ள வேண்டும் என பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

## நடைபெற்றுவரும் குற்றங்களை தடுக்க பொலிஸாரும், மக்களும் செயற்பட வேண்டும்

### - போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவிப்பு -

எமது தமிழ் மக்கள் யுத்தத்தினால் கொல்லப்பட்ட பின்பு தற்போது ஒரு சுமுகமான சூழலில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான வேளையில் வாள் வெட்டுக்களும், கொள்ளைகளும், கொலைகளும், பாலியல் பலாத்காரங்களும் அதிகரித்துள்ளமை மிகவும் வேதனையளிக்கின்றது அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்திலே பாலியல் பலாத்காரங்களும் கொலைகளும் அதிகரித்துள்ளது. எனவே குற்றவாளிகளை கண்டு பிடிப்பதில் பொலிஸாரும் பொதுமக்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என போக்குவரத்து மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்திலும் சரி ஏனைய மாவட்டங்களிலும் தற்போது போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமையே கொலைகள் கொள்ளைகளுக்கு காரணமாக அமைகின்றன. இவ் விடயத்தில் பொலிஸாருடன் இணைந்து எமது சமூக அமைப்புக்களும் சிவில் குழுக்களும் குற்றவாளிகளையும் அதற்கு உடந்தையாக உள்ளவர்களையும் இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி அதிகூடிய தண்டனையை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்

கடந்த காலங்களில் பல குற்றவாளிகள் ஏதோ ஒரு வகையில் தண்டனையில் இருந்து தப்பி விடுகின்றனர். இதனால் குற்றம் செய்பவர்களுக்கு பயம் அற்று விட்டது. இனிவரும் காலங்களில் குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக் கொடுக்க சட்டத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் குற்றவாளிகளை காப்பாற்றும் முனைப்புடன் செயற்பட வேண்டாம். அதிகபட்ச தண்டனைகளை வழங்குவதன் ஊடாகவே சமூகத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

கடந்த புதன்கிழமை புங்குடுதீவில் கூட்டு வன்புணர்வின் மூலம் கொடூரமாக கொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவியின் கொலை தொடர்பாக அக்குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தனது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை சட்டத்தின முன் நிறுத்தி அதிக பட்ச தண்டனையை பெற்றுக் கொடுக்க பொலிஸார் தீவிரமாக செயற்பட வேண்டும் என்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(160)

# ஹோலி, கெய்லின் ஆட்டத்தால் வென்றது பெங்களூர் அணி





பரபரப்பான ஐ.பி.எல்., லீக் போட்டியில் கிறிஸ் கெய்ல், கப்டன் விராட் ஹோலியின் விளாசல் கைகொடுக்க, பெங்களூர் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் "டக்வொர்த் லீவிஸ்" முறைப்படி "திரில்" வெற்றி பெற்றது.

ஹைதராபாத்தில் நேற்றுமுன்தினம் நடந்த ஐ.பி.எல். லீக் போட்டியில் ஹைதராபாத், பெங்களூர் அணிகள் மோதின. "நாணயச் சுழற்சியில்" வென்ற ஐதராபாத் அணி கப்டன் டேவிட் வோர்னர், துடுப்பாட்டம் தேர்வு செய்தார்.

போட்டி தொடங்குவதற்கு முன் மழை குறுக்கிட்டதால், ஆட்டத்தை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இரண்டு மணி நேரம், 40 நிமிடத்துக்கு பின், தலா 11 ஓவர்களாக குறைக்கப்பட்டு போட்டி ஆரம்பமாகியது.

ஹைதராபாத் அணிக்கு ஷிகர் தவான் (8) ஏமாற்றினார். பின் இணைந்த கப்டன் டேவிட் வோர்னர், ஹென்ரிக்ஸ் ஜோடி பெங்களூர் பந்துவீச்சை வெளுத்து வாங்கியது. அபாரமாக ஆடிய ஹென்ரிக்ஸ், ஹர்சால் படேல் வீசிய 7 ஆவது ஓவரில் ஒரு சிக்சர், 3 பவுண்டரி அடிக்க, 21 ஓட்டங்கள் கிடைத்தது. தொடர்ந்து அசத்திய ஹென்ரிக்ஸ், 20 பந்தில் அரைச் சதத்தை பதிவு செய்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 103 ஓட்டங்கள் சேர்த்த போது ஹென்ரிக்ஸ் (57) ஆட்டமிழந்தார்.

துடுப்பாட்டத்தை சாகல் பந்தை சிக்சருக்கு அனுப்பிய வோர்னர், டேவிட் வைஸ் பந்தில் பவுண்டரி விளாசி அரைச் சதம் அடித்தார். ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 11 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 135 ஓட்டங்கள் எடுத்தது. வோர்னர் (52) ஆட்டமிழக்காமல் இருந்தார். பெங்களூர் அணி சார்பில் டேவிட் வைஸ் 2, மிட்சல் ஸ்டார்க் ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

மீண்டும் மழை குறுக்கிட்டதால் பெங்களூர் அணியின் வெற்றிக்கு 6 ஓவரில் 81 ஓட்டங்கள் என "டக்வொர்த் லீவிஸ்" முறையில் இலக்கு மாற்றம் செய்யப்பட்டது. கடின இலக்கை விரட்டிய பெங்களூர் அணிக்கு கிறிஸ் கெய்ல் அதிரடி துவக்கம் தந்தார்.

ஸ்டைன் வீசிய முதல் ஓவரில் அடுத்தடுத்து ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த கெய்ல், புவனேஷ்வர் குமார் வீசிய 2 ஆவது ஓவரில் 2 சிக்சர், 3 பவுண்டரி உட்பட 24 ஓட்டங்கள் எடுத்தார். இந்நிலையில் 3 ஆவது ஓவரை வீசிய ஹென்ரிக்ஸ், கெய்ல் (35 ரன், 9 பந்து, 3 சிக்சர், 4 பவுண்டரி), டிவி லியர்ஸ் (0) ஆகியோரை அடுத்தடுத்து ஆட்டமிழக்காமல் திருப்பம் தந்தார். அடுத்து வந்த மன்தீப் சிங் (1) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய கப்டன் ஹோலி, கரண் சர்மா, பிரவீண்குமார் பந்தில் தலா ஒரு சிக்சர் அடித்தார்.

பெங்களூர் வெற்றிக்கு கடைசி ஓவரில் 13 ஓட்டங்கள் தேவைப்பட்டன. புவனேஷ்வர் குமார் வீசிய 6 ஆவது ஓவரின் 2 ஆவது பந்தில் தினேஷ் கார்த்திக் (2) "ரன்அவுட்" ஆனார். அடுத்த இரண்டு பந்தில் பவுண்டரி அடித்த ஹோலி, 5 ஆவது பந்தில் சிக்சர் அடித்து வெற்றியை உறுதி செய்தார்.

பெங்களூர் அணி 5.5 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 83 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஹோலி (44) அவுட்டாகாமல் இருந்தார். ஹைதராபாத் அணி சார்பில் ஹென்ரிக்ஸ் 2 விக்கெட் வீழ்த்தினார். ஆட்ட நாயகன் விருதை ஹோலி வென்றார்.

## IPL ஐ.பி.எல். இன்றைய ஆட்டம்

பெங்களூர் எதிர் டில்லி
**இடம் :-** பெங்களூர்
**நேரம் :-** மாலை 4.00 மணி

ஹைதராபாத் எதிர் மும்பை
**இடம் :-** ஹைதராபாத்
**நேரம் :-** இரவு 8.00 மணி

## துப்பாக்கி சுடுதலில் வெண்கலம் வென்றார் ககன் நரங்

உலக கோப்பை துப்பாக்கி சுடுதல் 50 மீற்றர் "ரைபிள் புரோன்" பிரிவில் இந்திய வீரர் ககன் நரங் வெண்கலம் வென்றார். அமெரிக்காவில் உள்ள போர்ட் பென்னிங் நகரில், சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பு (ஐ.எஸ்.எஸ்.எப்.,) சார்பில் உலக கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டிகள் நடக்கின்றன.

இதில் ஆண்களுக்கான 50 மீற்றர் "ரைபிள் புரோன்" பிரிவில் இந்தியாவின் ககன் நரங் 185.8 புள்ளிகளுடன் 3 ஆவது இடம் பிடித்து வெண்கலம் வென்றார். இதன் மூலம் அடுத்த ஆண்டு பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடக்கவுள்ள ஒலிம்பிக போட்டிக்கு தகுதி பெற்றார். இதன்மூலம் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்ற 3 ஆவது இந்தியர் என்ற பெருமை பெற்றார். இதற்கு முன், ஜித்து ராய், அபூர்வி சண்டேலா ஆகியோர் தகுதி பெற்றனர்.

# இறுதிக்குள் யூகி பாம்ப்ரி



ஏ.டி.பி., சாலஞ்சர் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு இறுதிக்குள் இந்தியாவின் யூகி பாம்ப்ரி முன்னேறினார்.

உஸ்பெகிஸ்தானில் உள்ள சமர்கான்ட்டில் ஆண்களுக்கான ஏ.டி.பி., சாலஞ்சர் ரென்னிஸ் தொடர் நடைபெறுகிறது. இதன் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி, சக வீரர் சாகேத் மைனேனியை எதிர்கொண்டார்.

முதல் செட்டை 6 : 4 என வென்ற பாம்ப்ரி, "டைபிரேக்கர்" வரை சென்று அடுத்த செட்டையும் 7 :5 என தன்வசப்படுத்தினார். ஒரு மணி நேரம், 20 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில், பாம்ப்ரி 6: 4, 7:5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தார்.

# தொடர்ந்து சிக்ஸர் விளாசி ஹேல்ஸ் சாதனை



உள்ளூர் ருவென்ரி 20 போட்டியில் அசத்திய இங்கிலாந்து வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ், தொடர்ந்து 6 சிக்சர் விளாசி சாதனை படைத்தார்.

இங்கிலாந்தில் அந்நாட்டு கிரிக்கெட் சபையால் "நாட்வெஸ்ட் "ருவென்ரி - 20" தொடர் நடத்தப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த இதன் லீக் போட்டியில் நாட்டிங்காம்சயர், வார்விக்சயர் அணிகள் மோதின. டாஸ் வென்ற நாட்டிங்காம்சயர் அணி கப்டன் ஜேம்ஸ் டெய்லர் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

வார்விக்சயர் அணிக்கு போர்டர்பீல்டு (1), டாம் லீவிஸ் (0) நிலைக்கவில்லை. சிறப்பாக செயறபட்ட வருண் சோப்ரா அரை (80) சதம் அடித்தார். மற்றவர்கள் ஏமாற்ற, வார்விக்சயர் அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 141 ஓட்டங்கள் எடுத்தது.

பின் களமிறங்கிய நாட்டிங்காம் சயர் அணிக்கு வெசல்ஸ் ஹேல்ஸ் ஜோடி சிறப்பான தொடக்கம் தந்தது. வெசல்ஸ் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இருப்பினும், ஹேல்ஸ் தொடர்ந்து அதிரடி காட்டினார். ரான்கின் வீசிய 11 ஆவது ஓவரின் கடைசி 3 பந்தில் சிக்சர் விளாசினார். தொடர்ந்து அசத்திய ஹேல்ஸ், ஜாவித் வீசிய அடுத்த ஓவரிலும் 3 சிக்சர் அடித்து மிரட்டினார்.

இவரின் அரை சதம் கைகொடுக்க, நாட்டிங்காம்சயர் அணி 14.3 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 142 ஓட்டங்கள் எடுத்து, 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹேல்ஸ் 86 ஓட்டங்கள் (43 பந்து, 5 பவுண்டரி, 8 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தார் ஆட்ட நாயகன் விருதையும் இவரே வென்றார்.

இதன் மூலம், சர்வதேச அரங்கில் தொடர்ந்து 6 சிக்சர் விளாசிய 5 ஆவது வீரரானார் ஹேல்ஸ்.

முதல் நான்கு இடங்களில் மேற்கிந்தியதீவின் கார் பீல்டு. இந்தியாவின் ரவி சாஸ்திரி. தென்னாபிரிக்காவின் கிப்ஸ். இந்தியாவின் யுவராஜ் சிங் உள்ளனர்.

ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணியில் விளையாடிய நியூசிலாந்து வீரர் கோரி ஆண்டர்சன் காயம் (விரல்) காரணமாக விலகினார். தற்போது. இவருக் குப்பதிலாக அலெக்ஸ் ஹேல்ஸ் மும்பை அணியில் இடம்பிடித்துள்ளார்.

# பங்களாதேஷ் அணியின் தலைவராக இன்னும் தொடர்வாரா முஸ்பிகீர்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவராக அதன் டெஸ்ட் அணியின் தலைவர் முஸ்பிகீர் ரகீம் தொடர்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

இருப்பினும் இந்திய அணியுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டிக்கு அவரே அணியின் தலைவராக இருப்பார் என கூறப்படுகின்றது.

விக்கெற் காப்பாளராக செயற்பட்டு துடுப்பாடுவது அவருக்கு சிரமம். அத்துடன் அணித்தலைவராக கடமையாற்றும் போது மேலதிக அழுத்தம் ஏற்படுகிறது.

எனவே, அவர் விக்கெட் காப்பை விட வேண்டும். அல்லது அணித் தலைவர் பொறுப்பை விட்டுக்கொடுக்க வேண்டும்.

பங்களாதேஷ அணி துடுப்பாட்ட வீரரான அணித் தலைவரையே விரும்புகின்றது என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஷ்முள் "ஹசைன் கூறியுள்ளார்.

ரகீமின் தலைமை தொடரில் பாகிஸ்தான் தொடர் தோல்வியின் பின்னர் விமரசனங்கள் எழுந்து இருந்தன.

அந்த தொடரின் முதற் போட்டியில் விக்கெட் காப்பின் போது விரலில் காயம் ஏற்பட்டது. அந்த காயம் தொடர் முழுவதையும் பாதித்தது.

எனவே குறித்த விடயம் தொடர்பாக முடிவு எடுக்க வேண்டும் எனவும் மேலும் அவர் கூறியுள்ளார்.

# மேசைப்பந்தாட்ட ஒற்றையர் பிரிவில் இரு அணிகள் சம்பியனானது

யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கமும் யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து நடாத்தும் மேசைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும் பெண்கள் பிரிவில் யாழ். பல்கலையும் சம்பியனானது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரியும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும் மோதியது. இதில் மூன்று சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன.

இதில் முதல்சுற்றில் யாழ். இந்துக் கல்லூரி சார்பில் நிவேதனும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் சார்பில் துஷியந்தனும் போட்டியிட்டனர். ஆட்டநேர முடிவில் துஷியந்தன் 3:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாம் சுற்றில் யாழ். இந்துக் கல்லூரி சார்பில் ஆகாசும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் சார்பில் ஜெசிதரனும் போட்டியிட்டனர்.

இதில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் ஆகாஸ் 3: 0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாம் சுற்று ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி சார்பில் சிவலக்சனும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் சார்பில் பிரகாஸூம் மோதினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பிரகாஸ் 3:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இதனால் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் 2:1 என்ற சுற்றுகள் அடிப்படையில் வெற்றி பெற்று ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியனாகியது.

பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலையும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் மோதின. மூன்று சுற்றுக்கள் கொண்ட போட்டி நடைபெற்றது.

இதில் முதல் சுற்றில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சார்பில் கஜனியும், யாழ். பல்கலை சார்பில் பிரகாசினியும் மோதினர். இதில் பிரகாசினி 3:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாம் சுற்றில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சார்பில் சங்கீதாவும். யாழ். பல்கலை சார்பில் சங்கீதவாணியும் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சங்கீதவாணி 3:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாம் சுற்றில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சார்பில் தனுஷாவும், யாழ். பல்கலை சார்பில் சாரங்கியும் மோதினர். ஆட்ட நேர முடிவில் சாரங்கி 3:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இதனால் யாழ். பல்கலை அணி நடைபெற்ற மூன்று சுற்றுக்களிலும் 3:0 என்ற சுற்றுக்கள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

இப் போட்டி நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழ். பல்கலையின் மேசைப்பந்தாட்ட உள்ளக அரங்கில் நடைபெற்றது. இப் போட்டி நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலையின் மேசைப்பந்தாட்ட முன்னாள் அணித் தலைவரும் யாழ். இந்துக் கல்லூரியின் ஆசிரியருமான விமலநாதன் கலந்து கொண்டார். (93)

# பல்கலையை வீழ்த்தி ஜொலியன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடாத்தி வரும் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட முதல்சுற்றுப் போட்டியில் ஜொலியன்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.



யாழ். பல்கலைக்கழக அணியும் ஜொலியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின. இதில இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை இல்லை என மோதிக்கொண்டன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் ஆட்டநேர முடிவில் ஜொலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 60:52 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது.

மேற்படி போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. (93)

# திருவிழாவை முன்னிட்டு கால்பந்தாட்டப் போட்டி

மாதகல் புனித தோமையார் விளையாட்டுக்கழகம் புனித தோமையார் திருவிழாவை முன்னிட்டு மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியை நடாத்தவுள்ளது.

மேற்படி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 36 கால்பந்தாட்ட அணிகளிடையே மேற்படி போட்டியை நடாத்தவுள்ளது.

போட்டிகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (93)

# மெய்வல்லுநர் சங்கத்தின் புதிய தலைவர் சுகத் திலகரத்ன



இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் புதிய தலைவராக, 400 மீற்றர் ஓட்டத்தில் முன்னாள் ஆசிய சம்பியனாகத் திகழ்ந்த சுகத திலகரத்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தேர்தலில் அவருக்கு ஆதரவாக 83 வாக்குகள் அளிக்கப்பட்டன.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரான உபாலி குமாரசிறியை விட 59 வாக்குகள் சுகத் திலகரத்னவுக்கு மேலதிகமாகக் கிடைக்கப்பெற்றுள்ளன.

புதிய அதிகாரிகள் குழுவின் செயலாளராக எஸ்.பி ரூபசிங்கவும், பொருளாளராக டொனாடோ ஜயசூரியவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உப செயலாளராக பி.என்.எம் நயனானந்த தெரிவுசெய்யப்பட்டதுடன் உப பொருளாளராக என்.முகுந்தன் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டு சங்கத்தின் முன்னாள் தலைவரான ஜெனரல் பாலித பெரேரா, முன்னாள் செயலாளர் பிரேமா பின்னவல ஆகியோர் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை.

# வடமாகாணப் பாடசாலை பெருவிளையாட்டுப் போட்டி அட்டவணை

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகி யூன் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் போட்டிகள், போட்டிகள் நடைபெறும் இடங்கள், திகதிகள் தொடர்பான விபரம் வருமாறு,

19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான எல்லே போட்டி 21, 22 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிலும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான எறிபந்துப் போட்டி 22, 23 ஆம் திகதிகளும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் 15, 19 வயது ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டி 24, 25 ஆம் திகதிகளிலும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்துப் போட்டி 26, 27 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிலும் 15, 17, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி 27, 28 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான மென்பந்துப் போட்டிகள் அடுத்த மாதம் 2, 3, 4 ஆம் திகதிகளில் ஓமந்தை மத்திய கல்லூரியிலும் 15, 17, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் 4, 5, 6 ஆம் திகதிகளில் ஓமந்தை மத்திய கல்லூரியிலும் 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி 6, 7, 8 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்துப் போட்டி 6, 7, 8 ஆம் திகதிகளில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்திலும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான கராத்தே போட்டி 8, 9 ஆம் திகதிகளில் வவுனியா சி.சி.ரி.எஸ் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது. (93)

# இலங்கை அணிக்கு ஜொண்டி ரோட்ஸ் பயிற்சி



இலங்கை கிரிக்கெட் அணி ஜொண்டி ரோட்ஸிடம் பயிற்சி பெறவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரரான ஜொன்டி ரோட்ஸ் தற்போது மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்றுநராக பணியாற்றுகிறார்.

இலங்கை அணியின் பயிற்றுநர்கள் விலகிய நிலையில் வரும் யூன் 8 ஆம் திகதி 3 டெஸ்ட், 5 ஒருநாள், 20 - 20 போட்டிகளில் விளையாட பாகிஸ்தான் அணி இலங்கை வருகிறது.

இந்நிலையிலேயே இலங்கை அணியினருக்குப் பயிற்சிகளை வழங்க ஜொன்டி ரோட்ஸை ஒப்பந்தம் செய்வதற்காக இலங்கை கிரிக்கெட் சபை கடும் முயற்சிகளை எடுத்து வருகிறது.

பாகிஸ்தானுடன் இடம்பெறவுள்ள போட்டித்தொடருக்கு முன்னதாகவே இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அத்துடன் 10 தினங்களே இந்த பயிற்சி வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் இலங்கை அணி வீரர்களும் மைதானத்தில் பிடியெடுப்பதில் கலக்குவார்கள் என எதிர்பார்க்கலாம்.







கரைச்சி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களின் பெருவிளையாட்டு விழா அண்மையில் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் இடைவேளை கண்காட்சி நிகழ்வையும் பிரதம விருந்தினர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசில் வழங்குவதனையும், காணலாம். (90)

சுத்து

# "சல்லி" மீன்களின் கண்ணிற் படுவது மலம் மட்டுமே!

- ஜேர்மனியிலிருந்து லோகநாதன் -

கடலே பாலாக மாறினாலும் பால் அருந்தாமல் மலம், புழு, பூச்சிகளையே தம் விருப்பம்மிக்க உணவாகத் தேடும் சில மீன் வகைகளுண்டு. அதில் தனித்துவமானது சல்லி மீன்கள். இவை வேறு நல்ல இரை கிடைத்தாலும் கண்டுகொள்வதில்லை. இந்தச் சுவை தான் அவற்றின் தேர்வுச் சுவை. மனிதர் மலம் கழிக்கின்ற கரையோரங்களில் எல்லாம் இவற்றின் கண்ணோட்டமும் ஆரவாரமான புழக்கமும் அதிகமாகக் காணப்படும்.



பாற் கடல் போன்ற ஊடகவியல் துறையிலும் குறிப்பாகத் தமிழ் ஊடகத்துறையில் சல்லி மீன் குணவியல்பில் ஓரிரு சில்லறைகள் உலாவருகின்றன. ஊடகவியல் மக்களை முன் நகர்த்தும் ஒரு அரிய பணி, அரிய இயந்திரம்! ஆரோக்கியமான, தேர்ந்த செய்திகள், கட்டுரைகள், முன்மாதிரிகளை மக்களிடம் கொண்டு சென்று மக்களைப் பக்குவமாகப், பண்பாக வளர்க்கவேண்டிய தார்மீகப் பொறுப்புக்குரிய துறை ஊடகத்துறை.

நல்ல பிரசைகளாகத் தம் பிள்ளைகள் வளர வேண்டுமென விரும்பும் பொறுப்புள்ள தாயும் தந்தையும் பிள்ளைகளை எது அணுகவேண்டும் எது அணுகக் கூடாது என்று எண்ணுவார்களோ அதே உணர்வும் பொறுப்பும் பத்திரிகைகள், இணையத்தளங்கள், தொலைக்காட்சி, சினிமா.... எனும் அத்தனைக்கும் இருந்தே ஆக வேண்டும். இல்லாதவைகள் மக்களால் புறந்தள்ளப்பட வேண்டும்.

அந்தவகையில் தமிழ் மக்களை வழி நடாத்துவதாகப் பீத்திக்கொண்டு தவறான, வக்கிரமான, திரிபுக்கு உட்புகுத்தப்பட்ட, ஒரு பக்க சார்பான செய்திகள் கருத்துக்களைத் தந்து ஊடகப் பாற்கடலில் விஷம் கலக்கின்ற எவராயினும் உடனடியாகக் கிள்ளி எறியப்பட வேண்டிய சல்லிகளே!

விடிவாக்கி அழிக்கவேண்டிய பொய்யிருளையே முதலாக்கி யாழ்ப்பாணத்திலிருந்து உதயமாகும் ஒரு தமிழ்ப் பத்திரிகையும், ஐரோப்பாவிலிருந்து வயிறு வளர்ப்புக்கு (சாவிலையே-வாழவும்) அரங்கேறும் ஒரு சாவீட்டு இணையத்தளமும் சமூகத்தைப் பாழடிக்கும் ஊடக உதாரணங்களில் உச்சத் தேர்வாயுள்ளன.

இவர்கள் சந்தையில் விலை போகும் பொருட்கள் எதுவோ அது அன்றே மனிதனைக் கொல்லும் பொருளாக இருந்தாலும்? இவர்களுக்குரிய நோக்கம் இவர்கள் சட்டைப் பைகள் மட்டுமே! இந்த நோக்கம் மாறப்போவதும் கிடையாது. இவர்கள் மனிதர்களாவதற்கும் சாத்தியப்பாடே இல்லை.

யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் பிரபல கோவிலொன்றில் அண்மையில் சுமார் இரு மாதங்கள் இடைவெளியிருக்கும் ஒரு பெண்ணின் தாலிச் சங்கிலியை இன்னொரு பெண் திருட முயற்சித்ததாக ஒரு செய்தி...!

சாவீட்டு இணையத்தில் பிரசுரமாகியிருந்தது.

"யாழ்பாணம் வண்ணார் பண்ணைக் கோவிலொன்றில் தாலிக்கொடியைத் திருட முயன்ற பெண் கையுங்களவுமாக பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்."

செய்தி! இதோடு நிற்கவில்லை! "இவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண் என்பது குறிப்பிடத்தக்கது." இது தேவையா?

ஏன் இதுவரை வடக்கு மாகாணத்தில் எந்தப் பெண்ணும் திருடியதாக வரலாறே கிடையாதா? வடமாகாணமோ மற்ற மாகாணங்களில் திருட்டுக்களே இடம்பெறவில்லையா? குறிப்பாக இவர் கிழக்கு மாகாணம் என்று அழுத்திச் சொல்லும் செய்தியின் மூலம் எதை மக்களுக்குக் கொண்டுசொல்ல விரும்புகிறது இந்த ஊடகம்?

எம்பி சிறீ உட்பட்ட தமிழ்க் கூட்டமைப்பும், அரசியல் வாதிகளும் செய்த, செய்கின்ற திருட்டுக்கள் கொலைகள், மோசடிகளை விடவா ஏதுமறியாத ஏதிலிகளான இந்த அப்பாவிப் பெண்களில் ஒருத்தி திருட எத்தனித்தது.... இது உங்களுக்கு உழைப்பு தேடித் தரும் செய்தியாய் அமைகிறதோ? பதவியை, அதிகாரத்தை வைத்து கொலை செய்து, திருடி, ஏமாத்திப் பிழைப்பு நடாத்தும் கொடிய திருடர்களோடு ஒப்பிட்டால் இவர்கள் குற்றம் தூசுக்கும் சமனில்லை.

இந்த சிறிய ஒரு செய்தி....? மாவட்டத்துக்கு மாவட்டம் தமிழருக்கு இடையே ஏற்படுத்தும் பாரிய இடைவெளிக்கு எவ்வளவு பங்களிக்கிறது என்பது தெரியும் தெரிந்தாலும் கவலைப்பட மாட்டீர்கள். பிணமழை தான் உங்கள் பணமழை என நாக்கைத் தொங்கவிட்டு அலையும் நாதாரிகள்...

போரால் விதவைகளாகி வாழ்வாதாரங்கள் எதுவும் இன்றித் தனித்தும் பிள்ளைகளோடும் ஒரு வேளைக் கஞ்சிக்கும், உடு கந்தலுக்கும் அவலம் என்ற நிஜத்தின் அபலைகளாக எத்தனை ஆயிரமாயிரம் பெண்கள்....

களவு, விபச்சாரம் இயல்பாகிறதொன்றும் அவர்கள் குற்றமல்ல! அரசும் மக்களும் சிந்தித்து இந்த நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் அடிப்படைத் திட்டங்கள், அவற்றைச் செயலாக்கும் வழிகள் பற்றி அறியவைக்கும் நேர்மையான ஊடகப் பணியை மறந்து சமூகத்தின் பலவீனங்களைச் செய்திகளாக்கி குளிர் காய்கிறீர்கள். காயம் ஆறிவிட்டால் பிச்சை எடுக்க முடியாது தானே?

இன்றுள்ள பொருட்களின் விலைவாசி, பிள்ளைகளின் பராமரிப்பு, அவர்களின் கல்வித் தேவை, உணவு, உடை என எதையும் நிறைவு செய்ய முடியாது வாழும் சூழலில் கொடுமை என்னவென்றால்? அத்தனை சமுதாய அடுக்கிலும் பொருளாதார அவலமும் பொறுப்பும் பெண்களைத் தான் அதிகம் சாடியிருக்கிறது என்பது தான் இன்றைய அவதானிப்பில் உண்மையாகவுள்ளது.

இந்நிலையை சற்று அதிகமாக எதிர்கொள்ள நேர்ந்தால் பெண்கள் உயிரை மாய்க்கவேண்டும் இல்லை உயிர் வாழ்வதாயின் உழைப்புக்கு உத்தரவாதமற்ற சூழலில் களவோ, விபச்சாரமோ தான் அவர்களது தேர்வாகவுள்ளது. இதைப் புரிந்துகொள்ளாத ஊடகங்களின் செய்தியின் பக்கங்களைப் பார்த்தால் பெண்ணினம் எரிவதை பார்த்துக்கொண்டு பிடில் வாசிக்கிறார்கள்.

உழைப்பை மட்டும் குறியாக்கி ஊடகம் நடாத்தும் திருடர்கள் உருசி கண்டவர்கள். செய்திக்காக பல்வேறு பாணியில் கலவரங்கள் உருவாக்கவும் தயங்காதவர்கள். இவர்கள் தாமாகத் திருந்துவது அரிதிலும் அரிது.

# பார்வைக்குறைபாடும் பார்வைப் புனர்வாழ்வும்

இவ்வுலகில் பார்வை அற்றவர்களும் பார்வைக் குறைபாடு உள்ளவர்களும் குறிப்பிடத்தக்க அளவு வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுடைய எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வருகின்றது. இதற்கு முக்கிய காரணம் உலக சுகாதார மேம்பாடு காரணமாக முதியோர் தொகை அதிகரிப்பதே. இந்த நிலை வளர்முக, வளர்ந்த நாடுகளின் அபிவிருத்தியிலும் சமூகத்திலும் குறிப்பிடத்தக்களவு பாதிப்பை ஏற்படுத்துகின்றது.



இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் 80 வீத பார்வை இழப்பு அல்லது பார்வைக் குறைபாட்டு நோய்கள் தடுக்கப்படக் கூடியவை என்பதாகும். முக்கிய நோய்களாவன வெண்புரை, தூரகிட்ட பார்வைக் குறைபாடு, குளுக்கோமா, நீரிழிவு சம்பந்தமான நோய்கள் கருவிழி தொற்று நோய், விழித்திரை தேய்வு மற்றும் குழந்தைப் பருவத்தில் பார்வை இழப்பை ஏற்படுத்தும் நோய்கள் ஆகும்.

உலக சுகாதார ஸ்தாபகம் 1978 ஆம் ஆண்டு பார்வைக் குறைபாட்டை, பார்வை இழப்பை தடுக்கக் கூடிய நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து அதன் உறுப்பு நாடுகளுக்கூடாக நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக 1999 ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனமும் உலக பார்வை இழப்பு தடுப்பு சங்கமும் கூட்டாக இணைந்து பார்வை 2020 என்ற சர்வதேச நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தது.

பார்வை 2020 என்பது அனைவருக்கும் பார்ப்பதற்கான உரிமை என்பதாகும். இந்தப் பார்வை 2020 நிகழ்ச்சித் திட்டத்தில் அனைத்து நாடுகளும் சர்வதேச தேசிய உதவி ஸ்தாபனங்களும் அங்கம் வகிக்கின்றன. இதன் குறிக்கோள் 2020 ஆம் ஆண்டுக்குள் பார்வை இழப்பை அல்லது குறைபாட்டை குறைத்தல் அல்லது இல்லாமற் செய்தல் மற்றும் அனைவருக்கும் 100வீதம் பார்வையைத் தருவது ஆகும்.

இலங்கையை பொறுத்தவரையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் சுகாதார அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப்படுகின்றது. வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் 2009 ஆம் ஆண்டில் இது செயற்பட ஆரம்பித்தது. ஆனால் இன்று மிகவும் சிறந்த மாகாணமாக இந்த பார்வை 20/20 திட்டம் வடமாகாணத்தில் வெற்றி நடை போடுகின்றது எனலாம்.

மந்தப் பார்வை உடையவர்கள் இனங்காணப்பட்டு கண் வைத்தியரின் உதவியுடன் பரிசோதித்து அவர்களுடைய வயது, தொழில் பார்வை என்பவற்றை கருத்திற் கொண்டு கீழ்க்காணும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

மந்தப் பார்வை உடையவர்கள் என உறுதிப்படுத்தல்
ஆலோசனை வழங்குதல்
சூழலியல் திருத்தங்கள்
மந்தப்பார்வை, உருப்பெருக்கி சாதனங்கள்
மற்றும் உதவக் கூடிய சாதனங்கள்
சாதாரண சமூக கட்டமைப்புக்குள் இணைத்தல் (கல்வி கற்றல், வேலை வாய்ப்பு)

அதேபோல் பார்வை அற்றவர்களும் சமூகத்தில் இனம் காணப்பட்டு கண்வைத்தியரினால் உறுதிப்படுத்தப்பட்டு கீழ் குறிப்பிட்டுள்ள புனர்வாழ்வுப் பயிற்சிக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

பார்வை அற்றவர் என் உறுதிப்படுத்தல்
ஆலோசனை வழங்குதல்
வெள்ளைப் பிரம்பு பாவித்தலும் நடமாடும் பயிற்சியும்.
Braille மற்றும் தொடர்பாடல் பயிற்சி
சுயதொழிலுக்கான கல்வியும் தொழில் பயிற்சியும்.
சாதாரண சமூக செயற்பாட்டுடன் இணைத்தல்.

மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் செயற்பாடுகள் மூலம் பார்வைக் குறைபாடு உடைய மாற்றுத் திறனாளிகள் சமூகத்தில் சம உரிமையுடன் வாழ வழி சமைக்கும். ஆனால் இந்தச் செயற்பாட்டை முழுமையாக்க சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் திறனாளிக்கு தடைகள் அற்ற சமூகக் கட்டமைப்பு காணப்படுதல் என்பன அவசியம்.

இலங்கையில் பார்வைப் புனர்வாழ்வுத் திட்டம் முதன் முதலாக வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. 5 மாவட்டங்கள் உள்ளடக்கிய வடமாகாணத்தில் கிட்டத்தட்ட 11 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் குறைந்தது 1500 பேர் முற்றாக பார்வை இல்லாமலும் 4500 பேர் மந்த பார்வையுடனும் வாழ்கின்றார்கள் (நிரந்தரமாக) இவர்கள் அடங்கலாக கிட்டத்தட்ட 30000 பேர் பார்வைக் குறைபாட்டுடன் வாழ்கின்றார்கள்.

இவர்களில் 80 வீதமானோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளித்து சமூகத்தில் சாதாரண பார்வையுடன் நடமாடச் செய்ய முடியும்.

வடமாகாணத்தில் இரு மந்தப் பார்வை கிளினிக்குகள் (வவுனியா, யாழ்ப்பாணம்) இயங்குகின்றன. இங்கு மந்தப் பார்வை மற்றும் பார்வையற்றோர் அடையாளம் காணப்பட்டு அவர்கள் புனர்வாழ்வுக்குட்படுத்தப் படுகின்றார்கள். இந்தப் புனர்வாழ்வுப் பணியில் யாழ் மாவட்டத்தில் வாழ்வகம், விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், யாழ் விழிப்புலனற்றோர் சங்கம், இலங்கை பார்வையற்றோர் சம்மேளனம், நவில்ட பாடசாலை, வவுனியா மாவட்டத்தில் ORHAN நிறுவனம், முல்லைத்தீவு மாவட்டத்தில் இனிய வாழ்வில்லம், மற்றும் மன்னார் மாவட்டத்தில் MARDAP ஈடுபாடு கொண்டு செயற்படுகின்றன.

இவ்வாறு வடமாகாணத்தில் பார்வைப் புனர்வாழ்வுச் செயற்பாடுகள் திறம்பட செயற்பட்டாலும் அவை மேலும் மேம்பட சில நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமாகும்.

மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் பார்வைக் குறைபாடு பார்வைப் புனர்வாழ்வு செயலணி அமைத்து நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

மக்களிடையே அறியாமையை நீக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள்.

அனைத்துக் கல்வி வலயத்திலும் விசேட கல்வி வழங்குவோரைச் சீராக ஒழுங்கு படுத்துதல்.

இலகுவாக விரைவாக அணுகுவதற்கான சட்ட ஆலோசனைகள் வழங்குதல்.

Braille Unit அமைத்தல்.

அவர்களுக்கான கல்வி கலாசார விளையாட்டு நிகழ்ச்சிகளை ஊக்குவித்தல்.

மாற்று திறனாளிகள் தொடர்புடைய அறிவை பயிற்சிப் பட்டறை மூலம் வழங்குதல்.

தடைகள் அற்ற சமூக கட்டமைப்பை உருவாக்குதல். மாற்றுத் திறனாளிகள் தொழில் வங்கி / மையம் அமைத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

(நன்றி: Jaffna Diabetic Centre)

மக்கள் விரும்புவதைக் கொடுப்பதா?

படத்தில் நடித்தவர்களையும் நெருங்கே இணைத்து இப்படத்தை இயக்கியிருக்கிறார் சங்கர்

சினிமாவுக்கு வந்திருக்கும் கஜோலுக்கு இதுவரை இல்லாத அளவுக்கு சம்பளம் பேசப்பட்டிருக்கிறது.

விஷம் கலக்கின்ற எவராயினும்

திருட்டுக்களே இடம்பெறவில்லையா? குறிப்பாக இவர் கிழக்கு மாகாணம் என்று

உருவாக்கவும் தயங்காதவர்கள். இவர்கள் தாமாகத் திருந்துவது அரிதிலும் அரிது

பார்வை அற்றவர் என உறுதிப்படுத்தல்
ஆலோசனை வழங்குதல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

(நன்றி: Jaffna Diabetic Centre)

# மக்கள் விரும்புவதைக் கொடுப்பதா? நல்லதென்பதை அறிந்து கொடுப்பதா?



அரசியல் துறையில் என்னென்ன சூழ்ச்சிகள். வஞ்சகங்கள். பிரித்தாளும் கொள்கைகள். இன ஒதுக்கல்கள், பதுக்கல்கள் இருக்கின்றனவோ அவ்வளவும் மெதுவாக இலக்கியத்திலும் வரப் பார்க்கின்றன. உலகத்தில் எந்தத் துறையில் வேண்டுமானாலும் நேர்மையும் அறமும் குன்றலாம். இலக்கியத் துறையில் நேர்மையும் அறமும் குன்றினால் அந்த நாட்டிற்கே. அந்த மொழிக்கே ஒரு சாபக்கேடு அது!

எழுத்தைக் கொண்டு எழுத்தின் தரத்தை விமர்சனம் செய்யாமல் எழுதியவனைக் கொண்டு எழுத்தின் தரத்தைப் பார்க்க முயல்கின்றார்கள். நாகரிகமற்ற செயல் மட்டுமல்ல. அருவருக்கத்தக்க செயலும் ஆகுமிது. உயர்ந்த இலக்கிய இதழ்களாகத் தங்களைக் கருதும் சில இதழ்கள் பஜனைப்பாடல் புத்தகம், நாட்டு வைத்தியப் புத்தகம் - இவை தவிர வேறு நூல்களுக்கு விமர்சனம் எழுதுவது இல்லை. விமர்சனத்திற்கென்று தனி வெளியீடுகள், முறையாக விமர்சனம் எழுதும் இதழ்கள் நிறைய வர வேண்டும். "குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" - இந்தத் திருக்குறள்தான் திறனாய்வின் இலக்கணம். எழுதியவரின் இனம், நிறம், வயது, கட்சி பார்க்காமல் எழுத்தைப் பார்த்து மட்டும் விமர்சனம் செய்யும் பண்பு விமர்சகர்களுக்கு வர வேண்டும்.

தரம் குறைந்த இலக்கியத்தைத்தான் வாசகர்கள் விரும்புகிறார்கள். அதனால்தான் வெளியிடுகிறோம் என்று சிலர் நொண்டிச் சான்று கூறுகிறார்கள். வாசகர்களை நல்வழியில் உருவாக்கவும், தரமுள்ளதைப் படிக்கத் தூண்டுவதும்தான் பத்திரிகை தர்மம். தன் வழியில் தனது வாசகர்கள் உடனழைக்க முயல வேண்டும் பத்திரிகை ஆசிரியர். வாசகர்கள் வழியில் தான் சென்று அவர்கள் ஆதரவைப் பெற முயல்வது அறமன்று. பெரும்பான்மை வாசகர்களின் விருப்பத்தைத் தவிர வேறு இலட்சியமே இல்லாத ஓர் ஆசிரியருக்குக் கீழ்வருமாறு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் என்ன செய்வாரோ?

ஒரு தெருவில் ஒரு வீட்டில் மணமாகாத அழகான குடும்பப் பெண் ஒருத்தி இருக்கிறாள். அந்தத் தெருவில் உள்ள அறுபது எழுபது வாலிபர்கள் பத்து வருடங்களாக ஒரு பத்திரிகையின் சந்தாதர்ரர்களாக இருந்து படித்து வருகிறார்கள். "இந்த நம்பர் வீட்டில் இருக்கும் இன்ன பெண் ஒவ்வொரு நாளும் காலையில் இத்தனை மணிக்குப் பாத்ரூமில் குளிப்பாள். அப்போது அவளை அந்த நிலையில் ஒரு படம் பிடித்து உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும். வாசகர்களாகிய எங்கள் விருப்பம் இது. மறுக்க மாட்டீர்கள் என்று நம்புகிறோம்" இப்படி அறுபது எழுபது பேர் கடிதம் போட்டால், தமது வாசகர்களின் (அ) "நியாயமான" விருப்பத்தை பூர்த்தி செய்ய கமெராவும் கையுமாகப் பாத்ரூமிற்குள் சுவரேறிக் குதிப்பாரா அந்த பத்திரிகை ஆசிரியர்?

('தரமுள்ள இலக்கியம்' என்ற கட்டுரையில் நா.பார்த்தசாரதி)

# கறுப்பு மண்ணில் கவர்ச்சிப் பூக்கள்!



தென் ஆபிரிக்கா "பூமியின் பரிசு" எனக் கூறப்படும் கேப் பெனின்சுலா பகுதி இப்போது மறுபிறப்பு எடுத்து இருக்கிறது. இங்கு காணப்படும் 105 வகை தாவரங்கள் உலகின் மற்ற நாடுகளில் எங்கும் கிடையாது.

"டேபிள் மௌண்டன்" மலையை உள்ளடக்கிய இப்பகுதியில் ரொபின் தீவுக்கருகில்தான் முன்பு நெல்சன் மண்டேலா சிறை வைக்கப்பட்டு இருந்தார். தற்போது அந்த இடமே விலை மதிப்பில்லா உலக தேசிய பூங்காவாக மாறி உள்ளது.

கேப் பெனின்சுலா "உலகின் தேன் குடம்" என்று வர்ணிக்கப்படும். இங்கு 2,285 வகை அபூர்வ தாவரங்களைப் பார்க்கலாம். படத்தில் நீங்கள் காண்பது அவற்றில் ஒன்றான "..பின் போஸ்" மலர்களைத்தான்.



# சினிமா சினிமா

❋ மும்பையில் இருந்து வெளியாகும், "இன்டியன் மூவீஸ் டொட் கொம்" என்ற இணையதளம். ஒவ்வொரு ஆண்டும் ரசிகர்களுக்கு அதிகம் பிடித்தமான நடிகர் நடிகைகள் யார் யார் என்பதை அறிய. வாக்குகள் பெற்று தரவாரியாக பட்டியல் வெளியிட்டு வருகிறது.

அவ்வகையில் இந்த ஆண்டும் பொலிவுட். கோலிவுட். டோலிவுட். மாலிவுட் என தனித்தனியாக போட்டிகள் நடாத்தப்பட்டன. கோலிவுட் நடிகர்களில் அஜித் பெருவாரியான வாக்குகள் பெற்று முதலிடம் பிடித்துள்ளார். இரண்டாவது இடத்தை விஜய்யும், மூன்றாவது இடத்தை சூர்யாவும் பிடித்துள்ளனர். நடிகைகளில் ஐ பட நாயகி எமிஜாக்சன் முதலிடம் பிடித்துள்ளார்.

கடந்த வருடம் முதலிடம் பிடித்த ஸ்ருதிஹாசன் இரண்டாம் இடத்தையும், சமந்தா மூன்றாவது இடத்தையும், தமன்னா நான்காவது இடத்தையும். ஹன்சிகா ஐந்தாவது இடத்தையும், அனுஷ்கா ஆறாவது இடத்தையும் பிடித்துள்ளனர். கடந்த ஆண்டு ஒன்பதாவது இடத்தில் இருந்த நயன்தாரா இந்த ஆண்டு ஏழாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

❋ வெளியீட்டுக்கு முன்பே விருதுகளைக் குவித்து சாதனை படைத்துள்ள படம் "காக்கா முட்டை." இந்திய அரசின் இரண்டு தேசிய விருதுகள் அதில் முக்கியமானவை. தனுஷ், வெற்றிமாறன் இணைந்து தயாரித்துள்ள இப்படம் திரையரங்குகளில் வெளி வருவதற்கு முன்பே முழு லாபத்தை ஈட்டி விட்ட படமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அறிமுக இயக்குநர் மணிகண்டன் இயக்கியுள்ளார். படத்தில் நடித்துள்ள ரமேஷ், விக்னேஷ் என்ற இரு சிறுவர்களின் எதிர்கால கல்விச் செலவை ஏற்பதாக அறிவித்துள்ளார் தனுஷ். "இந்த இரு சிறுவர்களும் என்ன படிக்க நினைக்கிறார்களோ அது வரையிலான படிப்புச் செலவு என்னுடையது. என்ன படிக்க வேண்டும் என்பது அவர்களின் விருப்பம். நடிக்க வேண்டும் என நினைத்தாலும் நடிக்கலாம்" என அறிவித்துள்ளார். அவ்விரு சிறுவர்களுக்கும்தான் சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான இந்திய அரசின் விருதும் கிடைத்திருக்கிறது.

❋ ஒரு கோடி முதலீடு போட்டால் நான்கு மடங்கு இலாபம் என்கிறது பேய் பட வட்டாரங்கள். இதனால் சமீப கோலிவுட்டில் வாரத்துக்கு ஒரு பேய் படம் என்பது வழக்கமாகி விட்டது. சமீப வெளியீடான "காஞ்சனா -2", எதிர்பார்த்த இலாபத்தை விட பல மடங்கு இலாபத்தைக் கொட்டி இறைக்க, வரிசை கட்டி நிற்கிறது பேய் படங்கள். இதில் புது மாதிரியாக கவனம் ஈர்க்கிறது "கோப்பெருந்தேவி." "காஞ்சனா - 1", "காஞ்சனா -2" படங்களில் நடித்தவர்களையும் சமீபத்தில் வெற்றி பெற்ற "அரண்மனை" படத்தில் நடித்தவர்களையும் ஒருங்கே இணைத்து இப்படத்தை இயக்கியிருக்கிறார் சங்கர் பழனிச்சாமி. கேரள வரவு ஆராத்யா இதில் பேயாக நடிக்கிறார்.

❋ இயக்குநர் ரவிச்சந்திரன். "கண்ணதிரே தோன்றினாள்". "மஜ்னு". "சந்தித்த வேளை". "உற்சாகம்" என நான்கு படங்களைத் தந்தவர். இப்போது "நட்பதிகாரம் -79" படத்தோடு களம் காண்கிறார். ஒரு காரணமும் இல்லாமல் பாதிக்கப்படுகிற ஒரு நட்பு வட்டம். தனக்கு நிகழ்ந்ததை எப்படி கடந்து வருகிறது என்பதே கதை. திருக்குறளின் நட்பதிகாரம் 79 இனை பொருத்தமான தலைப்பாக வைத்து விட்டேன். இசை தீபக். மிக இளையவர். ஆனால் பெரிய இசை நுணுக்கம் தெரிந்தவர். "மஜ்னு" படத்தில் ஹரிஸ் ஜெயராஜை நாம்தான் கொண்டு வந்தோம். இன்றைக்கு அவரின் இடம் தனித்துவமானது. அது மாதிரியான ஒரு வளர்ச்சி இவருக்கும் காத்திருக்கிறது என்கிறார் ரவிச்சந்திரன்.

❋ "மாஸ்" படத்துக்குப் பின் சூர்யா நடிக்கும் படத்துக்கு "24" என பெயரிடப்பட்டுள்ளது. படப்பிடிப்பு தொடங்கியுள்ள நிலையில், 24 என்ற தலைப்புக்கு உரிமை கோரி குரல் எழுப்பி இருக்கிறார் பொலிவுட் நடிகர் அனில்கபூர். அவரது தயாரிப்பில் உருவான "24" படத்தின் லோகோவும், சூர்யா படத் தலைப்பும் ஒன்று போல் உள்ளது; எனவே அதை மாற்ற வேண்டும் என சூர்யாவுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளார் அனில் கபூர்.

❋ திருமணத்தோடு சினிமா வாழ்க்கை முடிந்து விடும் என்பது நடிகைகளுக்கு எழுதப்படாத விதி. சமீபமாக அந்த வழக்கம் மலையேறிக் கொண்டிருக்கிறது. இயக்குநர் விஜய்யை மணந்த அமலா-பால் மீண்டும் சினிமாவுக்குத் திரும்பி விட்டார். அதே போல் ஐஸ்வர்யா ராய், அனன்யா, காவ்யா மாதவன், நவ்யா நாயர், ஜோதிகா, ரீமா கல்லிங்கல் போன்றவர்களும் திருமணத்துக்குப் பின் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். மிக நீண்ட இடைவெளிக்குப் பின் சினிமாவுக்கு வந்திருக்கும் கஜோலுக்கு இதுவரை இல்லாத அளவுக்கு சம்பளம் பேசப்பட்டிருக்கிறது. தமிழில் "நேரம்" படத்தில் அறிமுகமான நஸ்ரியா தனது முதல் படத்திலேயே ரசிகர்களின் கவனம் பெற்றார். அடுத்தடுத்த வாய்ப்புகள் வந்து சேரும் நேரத்தில் திடீரென மலையாள நடிகர் பஹத் பாசிலை காதல் திருமணம் செய்து கொண்டார். ஆனாலும் தொடர் பட வாய்ப்புகள் வந்து கொண்டிருந்தன. 8 மாத இடைவெளிக்குப் பின் மீண்டும் சினிமாவுக்கு வருகிறார். குடும்பத்தினர் ஒப்புதலோடு இனி மலையாள சினிமாக்களில் மட்டுமே நடிக்கும் முடிவை எடுத்துள்ளார் நஸ்ரியா.

❋ "ஐ" படத்துக்குப் பின் தமிழில் தனுஷ் நடிக்கும் படம், உதயநிதியின் "கெத்து" ஆகிய படங்களில் நடித்து வருகிறார் எமி ஜாக்சன். "ஏக் திவானா தா" படத்துக்குப் பின் ஹிந்திப் பட வாய்ப்புகளை எதிர்பார்த்து காத்திருந்தவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இந்நிலையில்தான் கோலிவுட் பக்கம் கவனம் திருப்பினார். இப்போது ஹிந்தியில் மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை வழங்கியிருப்பவர் பிரபுதேவா. அக்ஷய்குமார் நடிக்கும் "சிங் ஈஸ் பிளிங்" படத்தை இயக்குகிறார் பிரபுதேவா. இதில் கீர்த்தி சனோன் நடிப்பதாக இருந்தது. திடீரென்று அவர் நீக்கப்பட்டார். வேறு ஹீரோயின்கள் தேடி வந்த நிலையில் எமி ஜாக்சனை தயாரிப்பு தரப்புக்கு சிபாரிசு செய்துள்ளார் பிரபுதேவா.



❋ மலையாள சினிமாவின் முன்னணி நடிகர்களான மோகன்லால் - மம்முட்டி இருவருக்குமிடையே தொழில் போட்டி இருந்த போதும், ஆச்சரியம், இருவரும் இதுவரை, 55 படங்களில் இணைந்து நடித்துள்ளனர். மோகன்லால் படத்தில் மம்முட்டியும், மம்முட்டி படத்தில் மோகன்லாலும் கெஸ்ட் ரோலில் நடிப்பது, வெகு சாதாரணமான விஷயம். தற்போது, மம்முட்டி நாயகனாக நடிக்கும், கடல் கடந்து ஒரு மாத்துக்குட்டி என்ற படத்தில், நடிகர் மோகன்லாலாக நடிக்கிறார் மோகன் லால். இது, அவர்கள் இணைந்து நடிக்கும், 56ஆவது படம்!

# யெகோவாவின் மகாநாடு

(கிளிநொச்சி)

யெகோவாவின் சாட்சிகள் நடாத்தும் யெகோவாவுடைய "நீதிநெறிகளைத் தொடர்ந்து பின் பற்றுங்கள்" என்னும் தொனிப் பொருளிலான வட்டார மகாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (166)

# புதூர் நாகதம்பிரான் பொங்கல் விழா 15இல்

(வவுனியா)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா யூன் மாதம் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அதேமாதம் 14 ஆம் திகதி காலை சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை 5 மணிக்கு சுவாமி வீதி வலம் இடம்பெற்றதன் பின்னர் 15 ஆம் திகதி மாலை 5 மணிக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று இரவு 10 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்றதன் பின்னர் சுவாமி வீதி யுலா இடம்பெறும்.

இதனையடுத்து பண்டமெடுக்கும் நிகழ்வு இடம்பெற்று பொங்கல்விழா இடம்பெறவுள்ளது.

பொங்கல் விழாவுக்கான வர்த்தக நிலையங்களை அமைக்க விரும்புபவர்கள் யூன் 7 ஆம் திகதி ஆலயத்திற்கு வருகை தந்து இடங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் கற்பூரம் மற்றும் அர்ச்சனைப் பொருட்கள் விற்பனை செய்ய முடியாது என ஆலயத்தின் பரிபாலனசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை உணவகங்கள் அனைத்தும் சுகாதார பிரிவின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும் எனவும் ஆலயத்தின் பெயரில் பணம் பெற வருபவர்களிடம் பணத்தினை மக்கள் வழங்க வேண்டாம் என பரிபாலனசபை தெரிவித்துள்ளதுடன் பணம் மற்றும் பொருளை ஆலயத்திற்கு வழங்க விரும்புபவர்கள் ஆலய பரிபாலனசபை அலுவலகத்தில் வழங்க முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# உண்மையான சேவை நோக்கோடு செயற்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினருக்கு உறங்க நேரமில்லை

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



இந்த மண்ணில் உண்மையான மக்கள் சேவை நோக்கத்தோடு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் செயற்பட்டால் உறங்குவதற்கே நேரமிருக்காது அந்த அளவுக்கு மக்கள் மத்தியில் தேவைகளும் பிரச்சினைகளும் பெருகிக்கிடக்கின்றன. என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 'உரிமைக்கும் உயர்வுக்கும்' என்ற அவரது நாடாளுமன்ற உரைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டில் ஏற்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது மக்களுக்கு சகல அடிப்படையிலுமான விடுதலையை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில் நாம் அன்று ஆயுதமேந்திப் போராடினோம் ஆனால் எமது ஆயுதப் போராட்டம் நீண்ட கால தொடர் இழப்புக்களின் விளைவாகவும் சர்வதேச அரசியல் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையிலும் ஆயுதங்களின் மூலம் தீர்வை எட்டுவது சாத்தியமற்றது என்ற சூழல் உருவானதையடுத்து நாம் ஜனநாயக அரசியல் வழிமுறைக்குள் தள்ளப்பட்டோம்.

இலங்கை இந்திய ஒப்பந்த காலத்தில் நாம் அரசியல் நீரோட்டத்தோடு இணைந்ததும் நாமாக விரும்பி ஏற்றுக்கொண்ட விடயம் அல்ல அன்றைய சூழலே எம்மை அந்த நிலைமைக்கு தள்ளியது. ஜனநாயக அரசியலில் தமிழருக்கான நியாயமான உரிமை அவர்களுக்கான விடுதலை மக்களின் வாழ்வியலுக்கான இயல்பு சூழல் உருவாக்கம் என்பனவற்றை நிரந்தரமாக தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காக நாம் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் உழைத்துவருகின்றோம்.

இந்த உழைப்பிற்குப்பின்னால் பல தியாகங்கள் இருக்கின்றன எங்களோடு அன்று இணைந்து பயணித்த பல போராளிகளை நாம் இழந்திருக்கின்றோம் எமது கொள்கைக்கெதிரானவர்களின் சேறு பூசல்களையும் நாம் சந்திக்க வேண்டியிருந்தது இருப்பினும் நாம் தளர்ந்துபோகவில்லை நாம் இளம் வயதில் மக்களின் விடுதலைக்காக போராட புறப்பட்டவர்கள் எனவே [illegible] களது இலக்கு எட்டப்படும்வரை நாம் பின்வாங்க முடியாது. ஆகவேதான் நாம் ஜனநாயக வழிமுறையிலும் அரசியல் வாதிகளாக இயங்காது அரசியலிலும் போராளிகளாகவே செயற்பட்டு வருகின்றோம். ஆகவே எமது செயற்பாடுகள் அனைத்தும் அரசியல் வாதிகளின் செயற்பாடுகளிலிருந்து வேறுபட்டது. குறித்த இலக்கை எட்ட வேண்டும் என்பதற்காக நாம் ஒவ்வொரு விடயங்களுக்குப்பின்னாலும் மிகக்கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றோம். இன்றைய அரசியல் வேலைத்திட்டங்கள் உண்மையான மக்கள்சேவைநோக்கில் முன்னெடுக்கப்படுமாயின் அரசியல்வாதிகளுக்கு உறங்குவதற்கே நேரமிருக்காது அந்த அளவுக்கு துயரங்களும் தேவைகளும் மக்களை சூழ்ந்து கிடக்கின்றன அதை ஒவ்வொரு அரசியல்வாதிகளும் உணர்ந்துகொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

# பூநகரி மரமுந்திரிகைத் தோட்டம் இராணுவத்திடமிருந்து மக்களுக்கு


கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் உள்ள ஆயிரம் ஏக்கர் மரமுந்திரிகைத்தோட்டம் படையினரிடம் இருந்து மர முந்திரிகை கூட்டுத்தாபனம் பெற்று அதனை மக்களுக்காக பயன்படுத்தவுள்ளதாக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தலைவர் எல்சி.விஜியவர்ணசூர்ய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் பழைய கச்சேரி வளாகத்தில் கிளிநொச்சி பிராந்தியத்திற்கான மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் அலுவலகத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தற்போது குறித்த ஆயிரம் ஏக்கர் மர முந்திரிகைத் தோட்டம் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகிறது இதனை மர முந்திரிகை கூட்டுத்தாபனம் பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சின் ஊடாக மேற்கொள்ளும். அவ்வாறு பெற்றுக் கொள்கின்ற போது அதனை அந்த பிரதேச மக்களுக்காக பயன் படுத்துவோம் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி பிரதேசத்தில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் வகையில் நேற்றுமுன் தினம் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இதில் இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தலைவர் எல்சி.விஜயவர்ணசூர்ய, அதன் பிரதி பொது முகாமையாளர் பி.கொடிகார, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மர முந்திரிகை கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி விரிவாக்கல் உத்தியோகத்தர் பி.சுரேந்திரா, சந்தைப்படுத்தல் அதிகாரி ஜெயதிஸ்ஸ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (29)



காவேரி கலா மன்றத்தின் வேம்பொடுகேணி சமுதாய நாடகக்குழுவினரின் கலைநிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது... (90)

## முரசின் இன்றைய பலன்

(17.05.2015 ஞாயிற்றுக்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 03 ஆம் திகதி.
மரணயோகம் சதுர்த்தசி – திதி
பரணி நட்சத்திரம் மு.இ.11.24 வரை பின் கார்த்திகை
இராகுகாலம் 4.23 - 5.53 வரை சுபநேரம் 8.53 - 10.23 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – எந்தவொரு செயலிலும் சரியான முடிவுக்கு வர முடியாது தடுமாறுதல்

**ரிஷபம்** – கற்பனையை விற்பனைக்கு கொண்டு வர முயற்சி எடுத்தல்

**மிதுனம்** – திகதி தப்பியபொருட்கள் பற்றி விழிப்பாக இருத்தல் அவசியம்

**கடகம்** – இயந்திரக்கோளாறினால் பிரயாணம் முறிவடைதல்

**சிம்மம்** – பழையதை புதிது போலாக்கி தலையில் கட்டியடிக்க முனைதல்.

**கன்னி** – நிர்வாகங்களில் பங்கெடுக்க அழைப்புக்கிட்டுதல்.

**மீனம்** – விலங்கொன்று குறுக்கறுத்து விபத்தினைத் தரலாம்.

**கும்பம்** – விளம்பரத்தை நம்பியதால் மோசடிக்கு உட்படுத்தல்

**மகரம்** – நிலுவைகள் கூடியதால் தொடர்புகள் தற்காலிகமாக துண்டித்தல்

**தனுசு** – பெற்றோரின் புத்திமதியைக் கேட்டதால் ஆபத்து நீங்கிவிடல்

**விருச்சிகம்** – ஏழரைச்சனி இருப்பதினால் பிறருக்கு உதவிட பின்னடித்தல்.

**துலாம்** – சில நாட்களாக நிலவிக்காணப்பட்ட குடும்பப்பிணக்கு மறைந்து சந்தேகம் நீங்குதல்.

# சூனியப்பிரதேசமாக தோற்றமளிக்கும் கற்கோவளம் புனித நகர் குடியேற்றம்

## விமோசனம் கிடைக்குமா என மக்கள் கேள்வி?

(புலோலி நிருபர்)

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்திலிருந்து கற்கோவளம் புனித நகர் குடியேற்றத் திட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதிக்கு இற்றைவரை வீதி மின்விளக்குகள் எதுவும் பொருத்தப்படவில்லையெனவும் சூனியப்பிரதேசமாகக்காணப்படும் இப்பாதையால் பயணிக்கும் பாதசாரிகள் பெரும் இன்னலடைந்து வருகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின்னர், கற்கோவளம் புனித நகர் பகுதியில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் வீட்டுத் திட்டம் அமைத்துக்கொடுக்கப்பட்டது. சுமார் இரு நூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் அவ் வீடுகளுக்கு மின் இணைப்பும், வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் குறித்த வீதிக்கு இற்றைவரை மின் கம்பங்கள் நாட்டி, வீதி மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை.

இதே நிலையில், தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று இரவு வேளைகளில் திரும்பும் மாணவர்கள், மற்றும் அரச தனியார் பணியாளர்கள், அடங்கலாக அவசர சிகிச்சையின் பொருட்டு மந்திகை மருத்துவமனைக்குச் செல்லும் கர்ப்பிணித் தாய்மார், மற்றும் நோயாளிகள் அனைவரும் குறித்த பாதையையே பயன்படுத்தி வருகின்றார்கள் இப்பாதையின் இரு மருங்கிலும் பற்றைகள் வளர்ந்து காணப்படும் அதேவேளை, மயானவாயில் பகுதியால் செல்லும் போது ஒருவித அச்சமும், திருடர்களின் அட்டகாசம், மற்றும் விசப்பாம்புகளின் கெடுபிடிகளுக்கும் ஆளாகிவருகின்றார்கள்.

எனினும் இது குறித்து இக்குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் சுமார் 200இற்கு மேற்பட்ட குடும்பத்தவர்களினால், கையொப்பமிட்டு, மகஜர் ஒன்றை கடந்த ஜனவரி மாதம் பல அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

ஆனால் இற்றை வரை இப்பாதை சூனியப் பிரதேசமாகவே காணப்படுகின்றது. எனவே இப்பகுதி மக்களின் நன்மை கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென, கற்கோவளம் புனித நகர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (166)




மன்னார் செல்வநகர் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் யாத்திரிகர் குழு ஐந்தாவது தடவையாக எதிர்வரும் 27ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு வற்றாப்பளை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு பாத யாத்திரையாக ஆலயத்தில் இருந்து தமது புனித பாதயாத்திரையை தொடங்கி 01-06-2015 அதிகாலை வற்றாப்பளை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தினை சென்றடையவுள்ளது. தமது தேவஸ்தான விஷேட பு,ஜைகளை நிறைவு செய்து அதனைத்தொடர்ந்து பொங்கல் காவடி நேர்த்தி பிரதிஸ்ட்டை அத்தனை சிறப்பு நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# கடற்றொழிலாளர்களின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவில் கடற்றொழிலாளர்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டமொன்றினை நடாத்தவுள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் மற்றும் மாவட்ட கடற்றொழிலாளர்களின் கிராமிய அமைப்புகளின் சம்மேளனம் ஆகியன இணைந்து இக்கவனயீர்ப்புப் போராட்டத்தினை நடாத்தவுள்ளது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் நடைபெறுகின்ற சட்டவிரோத கடற்றொழில்கள் மற்றும் வெளி மாவட்ட கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய மீன்பிடிகள் சட்டவிரோத மீன்பிடிகளை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் கட்டுப்படுத்த தவறுகின்றமை போன்ற பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பினை வெளிக்காட்டும் வகையில் கடற்றொழிலாளர்களினால் முற்பகல் 8.30 மணியுளவில் மாவட்ட நீரியல் வளத்திணைக்களத்திற்கு முன்பாக இக்கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இப்போராட்டம் தொடர்பான ஏற்பாட்டுக்கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் சங்கங்களின் சமாசத்தின் தலைவரும் மாவட்ட கடற்றொழிலாளர்களின் கிராமிய அமைப்புகளின் சம்மேளனத் தலைவருமான அந்தோனிப்பிள்ளை மரியராசா தலைமையில் நடைபெற்றது. கவனயீர்ப்பு நடைபெறும் நாளில் கடற்றொழிலுக்கு தொழிலாளர்கள் செல்வதில்லையெனவும், கடற்றொழிலாளர்கள் அனைவரையும் இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (160)

# வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(புலோலி நிருபர்)

புலோலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முதலி மனோண்மணி) அம்பாள் ஆலய தருமபரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் ஆலய மண்டபத்தில் வே. சாந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சி.ரகுலேந்திரன் தலைவராகவும், சி.நவரத்தினம் உப தலைவராகவும், ச.பேமராஜ் செயலாளராகவும், நா.தவகுலரட்ணம் உபசெயலாளராகவும், சி.தயசீலன் பொருளாளராகவும், நிர்வாக சபை உறுப்பினர்களாக, வே. சாந்தகுமார், ந.நிஷாந்தன், மா.மணிமாறன், பொ.சிவராசா, சி.இராசசிங்கம், மு.தங்கவேலு, திருமதி.க.பரமேஸ்வரி, பொ.இந்திரசேகரம், ர.கீர்த்தனன், திருமதி. பூ.மனோண்மணி ஆகியோரும், க.வைகுந்தன் முகாமையாளராகவும், திருமதி.பூ.மனோண்மணி களஞ்சியப் பொறுப்பாளராகவும், திருமதி பிரதீபன் சர்மிளா, ர.கீர்த்தனன் ஆகியோர் கணக்காய்வாளராகவும், ஆலோசகராக க.ராகீஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர். (166)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஆசிரியர்: நேற்று நான் சொல்லித் தந்த கேள்வியைப் பழச்சுட்டு வந்தியாடா?
மாணவன்: பழச்சிட்டேன் சேர்.
ஆசிரியர்: சொல்லு பார்ப்போம்.
மாணவன்: திருக்குறளின் சிறப்புகளை விவரிக்கவும்..?

*** *** *** ***

**அப்பா (வாத்தியார்) :** வாத்தியார் பிள்ளை மக்கு என்று உன்னைத்தானே திட்டினேன். அதுக்கு ஏன்ரா சிரிக்கிறாய்?
**மகன்:** தாத்தா கூட வாத்தியார்தானே! அதை நினைச்சுத்தான் சிரிக்கிறேன்...

*** *** *** ***

**ஆசிரியர்:** தானத்திலேயே பெரிய தானம் எது? அன்னதானமா? கண்தானமா? இரத்ததானமா? நிதானமா?
**மாணவன்:** எங்க பள்ளிக்கூட மைதானம் சேர்...

*** *** *** ***

**ஆசிரியர்:** முதுகு வலி போய் திருகுவலி வந்தது என்றால என்ன அர்த்தம்?
**மாணவர்:** தமிழ் வாத்தியார் போய் கணக்கு வாத்தியார் வந்திருக்கிறார் என்று அர்த்தம் சேர்...
ஆசிரியர்: .....?.....!

*** *** *** ***

**ஒருவர்:** இந்தப் பள்ளிக்கூடத்திலே மதிய உணவு நேரத்தில என்ன, ஒரே சத்தமா இருக்கு?
**மற்றவர்:** "சுத்தம் சோறு போடும்" என்ற வாசகத்தை "சத்தம சோறு போடும்" என்று யாரோ மாத்தி எழுதியிருக்கிறாங்களாம்...

*** *** *** ***

**ராஜு:** பள்ளிக்கூடத்தில எல்லா வாத்தியாரும் சைவமாக இருந்தால் நல்லதா.... ஏன்?
**பாலு:** பரீட்சையில நமக்கு முட்டை போட மாட்டாங்களே..!

*** *** *** ***

**மணி:** கோழி ஏன் முட்டை போடுது..?
**சோமு:** அதுக்குத்தான் 1, 2, 3 தெரியாதே!

*** *** *** ***

"பரீட்சைக்கும் விஷப் பரீட்சைக்கும் என்ன வித்தியாசம்?"
"அதை என்னிடம் கேட்காதே... சாதாரண பரீட்சையே எனக்கு ஒரு விஷப் பரீட்சைதான்"

*** *** *** ***

"என் மகனுக்குச் சந்திரன் என்று பேர் வைச்சது தப்பாப் போசசுது?"
"என்னாச்சு?"
"மாதத்தில் பாதி நாள் நல்லாப் பழக்கிறான்... பாதி நாள் டல்லாப் பழக்கிறான்"

*** *** *** ***

**அப்பா:** டேய், பரீட்சையில உனக்கு எவ்வளவு மார்க்ஸ்?
**மகன்:** கணக்குக்கு 0 அப்பா...
அப்பா: என் மூஞ்சையில கரியைப் பூசிட்டியேடா..!
மகன்: ஏற்கனவே அப்படித்தான் இருக்குப்பா..!

*** *** *** ***

"அப்பா... நான் நூற்றுக்கு நூறு வாங்கினால்?..."
"எனக்கு ஹார்ட் அட்டாக்கே வந்திடும்".
"அதனால்தான் வெறும் 20 மார்க்ஸ் வாங்கியிருக்கிறேன்"

*** *** *** ***

"பரீட்சையில் அதிக மார்க்ஸ் வாங்கோணும் என்றால் உடம்பை ஆரோக்கியமா வைச்சுக்கொள்ளோணும்"
"அப்ப படிக்க வேண்டாமா சேர்?"

*** *** *** ***

**ஆசிரியர்:** இடி, மின்னல் ஏற்படும்போது ஏன் மின்னல் முதலிலும் இடி இரண்டாவதாயும் வருது, கேட்குது?
**மாணவன்:** கண் முதல்ல இருக்கிறதாலே மின்னல் முதல்லே வருது. காது பின்னால் இருக்கிறதாலே இடி இரண்டாவதாகக் கேட்குது சேர்..

*** *** *** ***

**மாணவன்:** ரீச்சர் ஒவ்வொரு பரீட்சையிலும் எனக்கு ஐந்து மார்க்ஸ், பத்து மார்க்ஸ்தான் போடுறீங்கள்...
**ஆசிரியை:** அதுக்கென்ன?
**மாணவன்:** பேப்பர், பேனா, மை எல்லாமே விலையேறிப் போச்சு... கொஞ்சம் பார்த்து, சேர்த்துப் போடுங்கோ ரீச்சர்...!

# இலங்கைப்படையினருக்கு குதிரைகள் முண்டியடித்து வரும் உதவிகள்


(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு குதிரைகளை அன்பளிப்புச் செய்வதில் இந்தியாவும் பாகிஸ்தானும் போட்டி போட்டுக் கொண்ட விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தியத்தலாவவில் உள்ள இலங்கை இராணுவ பயிற்சி அகாடமிக்கு இரண்டு நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு குதிரைகளை வழங்கியுள்ளன.

கடந்த வாரம் பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்து, எட்டுக் குதிரைகள் மற்றும் பாகிஸ்தானிய இராணுவத்தில் மேஜர் பதவியில் இருக்கும் கால்நடை மருத்துவர் உள்ளிட்ட 13 பேரை ஏற்றி வந்த இலங்கை விமானப் படையின் சி-130 விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறினால், அது அவசரமாக இந்தியாவின் புனே விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

பின்னர், அந்த விமானம் கொழும்பில் இருந்து வந்த பொறியியலாளர்களால் திருத்தப்பட்ட நிலையில், கொழும்பு திரும்பியது.



பாகிஸ்தான் இராணுவத் தளபதி இந்தவாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவிருந்த நிலையில், தியத்தலாவ பயிற்சி முகாமில் அந்தக் குதிரைகளை ஒப்படைக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால், அவரது பயணம் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டு விட்டது.

அதேவேளை, பாகிஸ்தான் இராணுவம், குதிரைகளை அன்பளிப்புச் செய்துள்ள நிலையில், இந்திய இராணுவமும், கடந்த திங்கள் ஆறு குதிரைகளை இலங்கை இராணுவத்துக்கு அன்புளிப்புச் செய்துள்ளது.

இந்தக் குதிரைகளை தியத்தலாவ பயிற்சி முகாமில் வைத்து இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரகாஷ் கோபாலன், இலங்கை இராணுவ பயிற்சி நிலையப் பணிப்பாளர் பிரிகேடியர் ராஜகுருவிடம் கையளித்துள்ளார்.

அதேவேளை, பாகிஸ்தான் இராணுவத் தளபதியின் பயணம் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால், பாகிஸ்தான் குதிரைகளை முறைப்படி கையளிக்கும் நிகழ்வு தள்ளிப் போடப்பட்டுள்ளது.

# இலங்கைப்பணிப் பெண்களுக்கு சம்பள உயர்வு வேண்டும்

## நடக்கிறது ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சென்று சவுதி அரேபியாவில் தொழில் புரியும் பெண்களுக்கு, ஆகக் குறைந்த சம்பளமாக ரூபா 60,000 வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோறள கூறியுள்ளார்.

இலங்கையிலுள்ள அந்நாட்டு தூதுவராலயத்துடன் ஏற்கனவே நடாத்தியுள்ள பேச்சுவார்த்தையின பேரில் இது தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்று வருகை தரவிருப்பதாகவும் அவர் பி.பி.சி.யிடம் தெரிவித்துள்ளார்.

தற்போது அந்நாட்டில் தொழில் புரியும் பணிப் பெண்கள் மாதமொன்று ரூபா 30,000 தொடக்கம் 35,000 சம்பளமாக பெறுவதாக கூறப்படுகின்றது.

இந்தத் தொகை ஆகக் குறைந்தது ரூபா 60,000 ஆக இருக்க வேண்டும் என்பதே தமது கோரிக்கை என தெரிவித்துள்ள அமைச்சர் தலதா அத்துக் கோறள, ரூபா 50,000 இற்கும் 60,000 இற்கும் இடைப்பட்ட தொகையாவது கிடைக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் சவுதி அரேபிய குழுவுடன் அந்நாட்டில் இலங்கை பணிப் பெண்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும் பேசப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

சவுதி அரேபியாவிற்கு வீட்டுப் பணிப் பெண்களாக அழைக்கப்படும் பெண்களுக்கு உள்நாட்டு முகவர்கள் ஊடாக எஜமான்களால் ஒரு தொகை பணம் கமிஷனாக வழங்கப்படுகின்றது.

அந்த கமிஷன் தொகையில் முழுத் தொகையும் அநேகமாக பணிப் பெண்களுக்கு கிடைப்பது இல்லை என ஆட்களை திரட்டி கொடுக்கும் உள்ளூர் முகவர்கள் கூறுகின்றார்கள். இந்த கமிஷன தொகை நிறுத்தப்பட்டால் இந்த சம்பள அதிகரிப்பு சாத்தியப்படுவது இலகுவாக அமையும் என்றும் உள்ளூர் முகவர்களினால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# கிழக்கில் ஹெரோயின் மூவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான 40 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான் குடிபொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரி சோதகர் ரீ.ஜெயசீலன் தெரிவித்தார்.

இதுவே கிழக்கு மாகாணத்தில் கைப்பற்றபட்ட பாரியளவிலான ஹெரோயின் எனவும் அவர் தெரிவித்தார்.

பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழு நேற்றுமுன்தினம் காலை முதல் காத்தான்குடி பரீட் நகர் பிரதேசத்தில் பொலிஸ் மோப்ப நாய்களின் உதவியுடன் நடாத்திய சுற்றிவளைப்பின் போது,

காத்தான்குடியிலிருந்து கட்டார் நாட்டிற்கு டெனீம் நீளக் காற்சட்டையின் இடுப்பட்டியினுள் ஐஸ்பழம் தயாரிக்கும் பொலித்தீன் கவரினுள் வைத்து தைத்து கடத்தப்படவிருந்த நிலையில் ஹெரோயின் வர்த்தகர்களான இரு இளைஞர்களும் கொழும்பிற்கு கடத்திச்செல்லும் மற்றொரு நபரும் புதிய காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கடவுச் சீட்டுகள், வங்கி கணக்கு புத்தகங்கள், டெனிம் ரவுசர்களின் பட்டிகள், கையடக்க தொலைபேசி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சந்தேக நபர்கள் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாக காவற்துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# இந்து - பௌத்த உறவு யாழ்ப்பாணத்தில் மாநாடு



(கொழும்பு)

இந்து - பௌத்த நல்லுறவை மேம்படுத்தும் வகையில் இரு இனங்களையும் இணைக்கும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க மாநாடொன்றை முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் யூன் மாதம் நடாத்தவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் இந்து, பௌத்த தொடர்புகளை வளர்க்கும் நோக்கில் இந்த மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதுடன் இம்மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து 70 தமிழ் பௌத்த பிரதிநிதிகளை பங்கேற்கச் செய்யத் தீர்மானித்திருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# வடக்கில் நாளுக்கு நாள் உயரும் துஷ்பிரயோகங்கள் கட்டுப்படுத்தப்படுமா?

## சமூகங்கள் திரண்டு விழிப்படைய வேண்டும்

வடக்கில் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு என்பன இன்று சீர்குலைந்து விட்டதாக மக்கள் பெரிதும் ஆதங்கப்படுகின்றனர்.

இதனை ஆராயும் பொருட்டு கடந்த வாரம் ஊடகம் ஒன்றில் வந்த கட்டுரையில் 2009 இற்கு முன்னிருந்த மக்கள் பாதுகாப்பு, ஒழுங்கு, சட்டம், நிம்மதி என்பதற்கும் 2009 'மே' மாதத்திற்கு பின்னரான சட்டம், ஒழுங்கு, நியதி என்பது முற்றிலும் மாறுபட்டுள்ளதாகவும் கருத்துப்பட எழுதப்பட்டிருந்தது.

எழுத்து ஊடகமான செய்திகள் இவ்வாறு இருக்க மக்களை பாதுகாக்கவென அரசு முப்படைகளையும், இதற்கான பல் வேறு அமைச்சுக்களையும், ஆளணிகளையும் பெருந்தொகை யான நிதிகளை (பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பாதுகாப்பு பிரிவினர்) பாதுகாப்பு தரப்பில் வரவு - செலவு திட்டத்தின் ஊடாக செலவு செய்து வருகின்றது. மக்களை பாதுகாத்தும் வருகின்றனர்.

மேலும் குடாநாட்டிலும் ஏனைய இதர பகுதிகளிலும் இடம் பெறும் களவு, கொலை, கொள்ளை, வனபுணர்வு, போதைவஸ்து மற்றும் பல்வேறு இளைஞர்களது அட்டகாசம் (ஆவா) குறித்து இருவாரங்களுக்கு ஒரு தடவை ஊடகம் வாயிலாக அறிவிக்கும் நிகழ்வு பொலிஸ் தரப்பு ஊடாகவும் இடம்பெறுகின்றது.

இதனை விட 'ஆவாகுழு', வாள்வெட்டு குழு, கத்தி குழு என பல குழுக்களும் உலாவருகின்றது.

இவ்வாறான குழுக்களின் அட்டகாசம், நடவடிக்கை என்பன படைத்தரப்புகள் ஊடாகவும், நீதிமன்ற நடவழக்கை ஊடாகவும், ஊடகங்களின் வெளிப்படுத்தல் ஊடாகவும் 90 வீதம் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது என நினைக்கின்ற சிந்திக்கின்ற நேரத்தில் புங்குடுதீவில் மாணவி (வித்தியா) ஒருவருக்கு ஏற்பட்ட அவலத்தை நினைத்து இந்த யாழ்.குடாநாடுமட்டுமல்ல அகில உலகமே அதிர்ந்து போய் உள்ளது.

அதாவது யாழ்.மாவட்டத்தில் புங்குடுதீவில் உள்ள 18 வயது மாணவியான செல்வி வித்தியா பாடசாலைக்கு சென்ற வேளை வக்கிர-காமுகர்களின் கூட்டு வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கோரமான-கொடூரமானநிலையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி எல்லோர் மனதையும் ஆட்டிப் படைத்து நிற்கின்றது.

சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்தப் பாடசாலை மாணவியான வித்தியா ஜீ.சீ.ஈ. உயர்தரத்தில் கல்வி கற்று தனது சகோதரிபோன்று பல்கலைக் கழகம் செல்ல வேண்டும் என்ற அவாவில் அவ் மாணவியின் கல்வி தொடரப்பட்டு வந்தது.

இம் மாணவியின்மேல் 'அவாப்பட்ட' சிலர் இக்கொடூரமான செயலை செய்து மிகப்பெரிய தவறை-அநீதியை இழைத்து விட்டனர்.

இவ் அநீதியை மேற்கொண்டவர்களுக்கு நீதிமன்று உரிய உச்ச தண்டனையை வழங்கும் என்பது யாவருக்கும் தெரியும்.

வடக்கு மாகாணம் ஒரு கட்டுக்கோப்பான ஒரு பாரம்பரிய கலை, கலாசார மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்கு உட்பட்ட நாகரீகத்தை கொண்ட ஓர் உயர் சமூகமான மதிப்பினைக் கொண்டது என்ற வரலாறு உண்டு. அதனை நாம் சொல்லிதான் தெரியவேண்டும் என்பதல்ல.

இந்த வரலாறுகள் கட்டுக்கோப்புக்கள் யாவும் படிப்படியாக மாற்றமடைந்து பெண்கள் கல்வியில் உயருகின்ற அதேவேளை ஆண் சமூக வர்க்கம் கல்வியில் படிப்படியாக பின்னடைந்து வருவதனை காணக்கூடியதாக உள்ளது.

இதற்கு கைத்தொலைபேசி (hand phone) பாவனை, தொலைக் காட்சி பாவனை (முட்டாள் பெட்டி), வெளிநாட்டு நிதி உள்வரவு, வாசிப்பு திறன், கற்கை திறன் முற்றாக இல்லாது போகின்ற சீர்கேடான காரணங்களினால் சீரழிக்கப்பட்டு வருகின்ற கல்வியற்ற சமூகம் படிப்படியாக உயர்ந்து வருகின்றது.

கல்வியே இல்லாத சகல ஆண்களிடமும் ஒரு கைபோனும் (phone), ஒரு மோட்டார் (மோட்டு) சைக்கிலும் உண்டு. இதனை விட முட்டாள் தலைமயிர் வெட்டு, காதுகளில் தோடும் உண்டு.

இந்த பிறழ்வான நிலைகள் மனித சமூதாயத்தை இன்றும் அழிக்கவுள்ளது, அழித்தும் வருகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளை பாதுகாப்பு பிரிவினரால் கட்டுப்படுத்த முடியுமா? அவ்வாறு நாம் நினைக்க முடியாது. இவ்வாறான ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் தான் இந்த நெறிபிறழ்ந்த இளைஞர்கள் உருவாகின்றனர்.

இவ்வாறான உருவாக்கத்தினை ஆரம்பத்திலேயே குடும்பத்தில் உள்ளவர்கள், அயலவர்கள், சமூகங்கள் அவதானிக்கவேண்டும், கட்டுப்படுத்த வேண்டும். உரிய இடங்களில் கண்டிக்க வேண்டும்.


இவ்வாறான சமூக காரணிகளை கட்டுப்படுத்தா விட்டால் இன்னும் சில வருடங்களில் வடக்கில் வருத்தப்படாத காவாலிகள் சங்கம் கிராமத்திற்கு கிராமம் உருவாகிவிடும்.

எனவே வருமுன்பே காக்கவேண்டும். இன்று சகல வசதிகளும் பாடசாலைகளில் வழங்கப்பட்ட சூழலிலும் பாடசாலைக்கு மாணவர்கள் செல்லாத சூழல் பொதுவாக அவதானிக்கப்படுகிறது.

பிரதேச செயலாளர் மட்டத்தில் பாடசாலை செல்லாத மாணவர்களின் விபரம் அறிக்கையுடன் மட்டும் நகருகின்றது. இதற்கென பல வழவங்களில் அதிகாரிகள் இருந்தும் பலனில்லாத சூழல் நீண்டு தொடருகின்றது. எனவே மீண்டும் வடக்கில் நல்லதொரு சூழல் அமையவேண்டும் சட்டம் ஒழுங்கு முறையாக நடாத்தப்பட வேண்டும். வெறும் ஊடக அறிக்கையாக இல்லாது சகலரும் பொறுப்புடன் செயற்பட்டால் நல்லதொரு சமூக சூழலை கட்டியெழுப்பலாம்.

இதற்கு மேலாக கல்வியை மறுத்து கல்விபெறவிரும்பாது தொழிலுக்கு, வீதிக்கு வரும் சிறிய பிஞ்சு மாணவர்களை கல்விக்காக ஊக்குவித்தால் இவ்வாறான சகல சமூக சீர்கேடுகளை தவிர்த்து நல்வாழ்வு வாழலாம்.

எஸ்.ஆர்.ராஜாராம்,
பாடசாலை அதிபர்.

48 
உருவிலுள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?
1.வேட்டைக்காரன் 2.இடபம்
3.மிதுனம் 4.பெருங்கரடி


49.பரம்புகட்டை பயன்படுவது?
1.உழவுத்தொழிலில் 2.மட்பாண்டத்தொழிலில்
3.பிரம்பு பின்னல் தொழிலில் 4.உலோகக்கைத்தொழிலில்

50.கண்டி - கொழும்பு புகையிரதப்பாதையில் இருபெரும் புகையிரத பாதைகளைத் தொடுக்கும் புகையிரத நிலையம்?
1.வவுனியா 2.வட்டவளை 3.பொல்கஹவலை 4.பேராதனை

51.கைக்குட்டையின் கரையைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை யாது?
1.விஸ்வத்தையல் 2.நரம்புத்தையல்
3.கம்பளித்தையல் 4.வெட்டுக்குத்துத்தையல்

52.குறித்த பிரதேச மக்களுக்கு நீர் விநியோகத்தடை பற்றிய செய்தியை அறிவிக்கப் பொருத்தமுடையது?
1.வானொலி 2.தொலைக்காட்சி 3.பத்திரிகை 4.ஒலிபெருக்கி

53.பின்வரும் உருக்களில் கறிவேப்பிலையைக் காட்டும் உரு யாது?

1.  2.  3  4. 

54.உடலிற்குத் தேவைப்படும் விற்றமினைப் பெற்றுக்கொடுப்பது
1.பயறு - பருப்பு 2.முட்டை - பால் 3.மரவள்ளி - கடலை 4.கரட் - போஞ்சி

55.கொதிநீரில் இலகுவாக கரைவது?
1.மண்ணெண்ணெய் 2.உப்புக்கட்டி 3.மெழுகுத்துளி 4.கரிக்கட்டி

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01)01.வளர்ந்து வளர்ந்து, தளர்ந்து தளர்ந்து 02.செம்பொற்குடம் 03.நிலவு
04.அதிசயம் 05.தோன்றுதல் 06.உடல் (02)07.ஏழை எளியவர் 08.பேரும்புகழும் (03)09.சரி 10.சரி
(04)11.நிறைய பொய் சொல்லுதல் 12.கஷ்டப்படுத்தல் (05).13.குற்றவாளி
14.குழை 15.பால் 16.இறைச்சியைக் (06)17.முட்செடி
18.பச்சைச்செடி (07)19.தே + நீர் 20.தென் + மாகாணம்
(08)21.சிங்கத்தை கண்ட மான் ஒழிந்தது 22.மீனினங்கள் பல அருகி வருகின்றன
(09)23.இன்று எமக்கு நடப்பது நாளை இன்னொருவருக்கும் நடக்கும் 24.யார் செய்த உதவியும் மறக்ககூடாது
(10)25.I will come tomorrow 26.Donkey
(11)27.உங்கள் சுகம் எப்படி 28.நாங்கள் விளையாடுவோம் (12).29.ஆசிரியர் எத்தனை மணிக்கு வருவார் 30.நான் வீட்டை போகிறேன் (13).31.2 32.3
33.4 34.1 35.2
36.1 37.1 38.4 39.1
40.3 41. 42.3 43.2
44.1 45.3 46.2 47.2
48.2 49.3 50.3 (14).51.8
52.20 53.109 54.படத்தின் மீது நிழற்றிக்காட்டுக 56.2048
57.200ml 58.38 59.1. 60.1.403 2.99
61.செவ்வகம் 62.1.540 2.108

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01)பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

தந்தை இறந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் இராமன் அடியற்ற மரம் போல் விழுந்தான். சிறிது நேரத்தின் பின் மயக்கம் நீங்கி எழுந்தான். சகோதரர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் கூறிக்கொண்டனர்.

01.உயர்திணை, ஒருமை, படர்க்கை பெயர்ச்சொல்லொன்றை எழுதுக ..............................

02.தெளிவு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லொன்றை எழுதுக ..............................

03.சுழியும் விசிறியும் இடப்பட்டுள்ள ஒரு சொல்லை பந்தியில் இருந்து கண்டுபிடித்து எழுதுக ..............................

04.இப்பந்தியில் கையாளப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக ..............................

05.தகப்பன் எனும் சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக ..............................

06.கோடிடப்பட்ட வாக்கியத்தின் எழுவாய்ச்சொல் எது? ..............................

(02)கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

07.பொதுமக்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தங்கள் .............................. மேற்கொள்கின்றார்கள் (பிரயானத்தை, பிரயாணத்தை)

08.சிறுவர்கள் ..............................உடைத்தார்கள் (மின்குமிழை, மின்குமிலை)

09.நாம் கல்விச்.............................. சென்றவேளை அங்கு போயிருந்தோம் (சுற்றுளா, சுற்றுலா)

(03)பின்வரும் கூற்று சரியெனின் (சரி) எனவும் பிழையெனின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக

10.'மனைவியா' உயர்திணை ஒருமைப்பெயர்ச்சொல் (        )

11.வருகின்றனர் என்பது நிகழ்கால பன்மை வினைமுற்று (        )

(04)பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக

12.Go home straight ..............................

13.May I go out? ..............................

(05)பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக

14.நாம் கைகளைக் கழுவிக் கொள்வோமா? ..............................

(06)பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக

15.(1).Mot.........r cycle (2).B.........FFalo

(07)பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக

16.விளையாடப் போவோமா? ..............................

(08)பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக

17.'நெவத என்ன' ..............................

(09)வெற்றிடத்துக்குப் பொருத்தமான சரியான விடையை அடைப்புகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக

18.தமிழ்நெடுங்கணக்கில் ..............................மெய் எழுத்துக்கள் உள்ளன (12, 18, 30)

18. தமிழ்நெடுங்கணக்கில் .................................... உயிர் எழுத்துக்கள் உள்ளன (12, 18, 30)

19. இன்று எமது .................................... மிகவும் சுருங்கி விட்டது (தேசம், வேலை, உலகம்)

**(10) 20 தொடக்கம் 22 வரையுள்ள வினாக்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக**

20. எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் இக்கவிதையின் நாலாவது வரியை புள்ளிக்கோட்டில் எழுதுக?

....................................................................................................

21. காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான் இக்கவிதை எதைப்பற்றி குறிப்பிடுகிறது? ..............................

22. உலை வாயை மூடலாம் .................................... என்னும் பழமொழியை பூர்த்தி செய்க

**(11) பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் இருக்கும் சொற்களின் கருத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

23. கடைசி மேசையில் அமர்ந்திருந்த ஆதவனுக்கு உதறல் எடுத்தது உதறல் என்பது? ..............................

24. காந்தியடிகள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர் ஆவார் ..............................

25. அதுதான் ஏற்ற சமயம் என எண்ணி செல்வந்தர் அருகில் சென்றான் ..............................

**(12) 26 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களின் வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

26. கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற கணிதச்செயற்பாடுகளுக்கும் உதவும் வகையில் மற்றுமொரு பொறி .............................. (கண்டுபிடிக்கப்பட்டன / கண்டுபிடிக்கப்பட்டது)

27. ஆதவனுக்கு வகுப்புத்தலைவன் சத்தியனை நினைத்தபோது ஒரே எரிச்சலாக .............................. (இருந்தது / இருந்தான்)

28. இவை மாணவர்களுக்குப் பெரிதும் .................................... (உதவுகின்றது / உதவுகின்றன)

**(13)** உலகில் எங்கு என்ன நடந்தாலும் அதனை உடனுக்குடன் அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கும் ஊடகங்கள் பல உள்ளன. அவற்றுள் பத்திரிகை எத்தனையோ ஆண்டுகளாகத் தனியான இடத்தினை வகித்து வருகிறது. "பத்திரிகை வாசிப்பதன் மூலம் மனிதன் அடையும் பயன்கள்" என்னும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும் எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

29 ....................................................................................................


30 ....................................................................................................

31 ....................................................................................................

**(14) தரப்பட்ட வெற்றிடத்தில் விடையை எழுதுக**

32. இலக்கங்களில் எழுதுக - ஐம்பதாயிரத்து எண்னூற்று ஐந்து ..............................

33. எண்கோலத்தில் பொருத்தமற்ற எண்ணை தெரிவு செய்து எழுதுக
4004, 4008, 4012, 4018, 4016, 4020 ..............................

34. 

1). தரப்பட்டுள்ள உருவில் $\frac{3}{5}$ ஐ நிழற்றுக

2). அதில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைத் தசமத்தில் தருக ..............................

35. பிஸ்கட் பெட்டியொன்றின் நிறை 2kg 500g ஆகும். அவ்வாறான 3 பெட்டிகளில் நிறையை இரு பெட்டிகளில் இடும்போது ஒரு பெட்டி கொள்ளும் நிறை யாது?

....................................................................................................




36. பிரபா 2013ஆம் ஆண்டு தனது 14ஆவது பிறந்தினத்தை ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி கொண்டாடினாள். 2020.08.31ஆம் திகதிக்கு பிரபாவுக்கு எத்தனை வயதாகும்?

....................................................................................................


37. 750ml தோடம்பழச்சாறு கொண்டுவரப்பட்டு அதனுடன் 850ml நீர் கலக்கப்பட்டு பானமொன்றை தயாரித்து நால்வரிடையே சமனாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. எனின் ஒருவருக்குக் கிடைத்த பானத்தின் அளவை மில்லிலீற்றரில் தருக

....................................................................................................

38. 


உரு A ஆனது சமபக்க முக்கோணியாகும் எனின் சதுரத்தின் சுற்றளவு எத்தனை சென்றிமீற்றராகும்?

....................................................................................................

39. 

(1). இத்திண்மத்தில் காணப்படும் செவ்வக முகங்களின் எண்ணிக்கை யாது?

....................................................................................................

(2). நேர்விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

....................................................................................................

40. எழுத்துக்களில் எழுதுக
01. 2.25 .............................. 02. 0.03 ..............................

41. பேருந்து ஒன்று பி.ப 1.00 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு 16:30 மணிக்கு பொலன்னறுவையை அடைந்தது. பயணத்திற்கு செலவிட்ட காலம் எவ்வளவு?

....................................................................................................


42. வெற்றிடங்களை நிரப்புக 15kg 250g - 8kg 800g = ..............................

43. ரூபா 35.00 வீதம் 10 அப்பிள் பழங்களை வாங்கிக்கொண்டு ரூபா 500ஐ வழங்கினால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

....................................................................................................

44. வரைபில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையையும் வரைபையும் நிரப்புக

| பூக்கள் | பூக்களின் எண்ணிக்கை |
|---|---|
| மல்லிகை | 24 |
| ரோஸா | .............. |
| அலரி | 12 |
| அல்லி | 18 |
| லில்லி | 10 |





**(15) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக**

45. ஒளியை விரும்புவதும் இருளை விரும்பாததுமான பிராணி பின்வருவனவற்றுள் எது?
1. நுளம்பு 2. இலையான் 3. சிலந்தி 4. ஆந்தை

46. இலங்கைக்கே உரிய விலங்கு?
1. கோழி
2. நீர்க்காகம்
3. காட்டுச்செண்பகம்
4. முதலை

47. நீரின் மூலம் பரம்பலுக்கு உட்படும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க
1. புன்னை, ஆம்பல்
2. அல்லி, கொட்டங்காய்
3. புலிநகம், இறப்பர்

# யுத்தத்தில் இறந்தவர்களை நினைவுகூர தமிழர்களுக்கு தடைபோடக்கூடாது



யுத்தத்தில் உயிர் நீத்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதைப் போல் வடக்கில் உயிரிழந்த பொது மக்களையும் நாம் நினைவு கூரவேண்டும். தமிழ் மக்களை மட்டும் தடுப்பது அவர்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் பறிக்கும் செயல் என சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

யுத்தத்தில் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூருவதில் தடைகள் இருக்கின்ற நிலையில் அது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த மூன்று தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதம் நாட்டை தேசிய ரீதியில் பிளவுபடுத்தியது. இன ரீதியான முரண்பாடுகள் தோன்றி இன்று வரை இனப்பிரச்சினை வேரூன்றி இருப்பதற்கு பயங்கரவாதமே பிரதான காரணமாகும். அவ்வாறான நிலைமையில் பயங்கரவாதத்தில் இருந்து இந்த நாடு விடுபட்டுள்ளது.

ஆயுதப் போராட்டம் முற்றாக முடிவுக்கு கொண்டு வந்த பின்னரும் கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடர்ச்சியாக யுத்த வெற்றியை மட்டுமே சுட்டிக்காட்டி அரசாங்கம் ஆட்சி செய்தது. ஆயுத போராட்டம் வடக்கில் மக்களிடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில் தொடர்ச்சியாக அம் மக்களை பயங்கரவாதிகளாக சுட்டிக் காட்டி இனவாத அரசியலை முன்னைய தலைவர்கள் கையாண்டார்கள்.

இந்த நிலைமையில் தான் கடந்த ஆறு யுத்த வெற்றி தினங்களும் கொண்டாடப்பட்டன. ஆனால் புதிய அரசாங்கம் இம்முறை மே 19 ஆம் திகதியை யுத்த வெற்றி தினமாக கொண்டாடாது இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தினமாக அனுஷ்டிக்க நினைத்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதேவேளை வடக்கில் யுத்தத்தில் உயிரிழந்த பொதுமக்களையும் நாம் நினைவு கூர வேண்டும். விடுதலைப் புலிகள் நாட்டில் பயங்கரவாத செயல்களை செய்தாலும் அது வடக்கில் பொது மக்களையே பாதித்தன. கடந்த அரசாங்கத்தில் யுத்தம் வெற்றிகொள்ளப்பட்ட போதிலும் வடக்கு மக்கள் பல துன்பங்களை அனுபவித்தனர்.

தமது காணிகளை பறிகொடுத்து அநாதைகளாகவே கடந்த ஐந்து ஆண்டுகளாக வாழ்ந்தனர். எனினும் இந்த ஆட்சியில் அவர்களின் நிலங்களை மீண்டும் அவர்களிடம் கையளித்தமை அரசாங்கம் செய்த மிகப்பெரிய செயலாகும். அதேபோல் ஒவ்வொரு முறையும் வடக்கில் பொதுமக்களை நினைவு கூர்ந்தால் இராணுவத்தினால் அச்சுறுத்தப்படுவதும் கைது செய்யப்படுவதுமே இடம்பெறும்.

இது அந்த மக்களின் உரிமைகளை பறிக்கும் செயலாகும். அவர்களின் உறவுகளுக்காக விளக்கேற்றி அனுதாபம் தெரிவிப்பது அவர்களின் உரிமை. அதை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது. ஆனால விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்து வடக்கில் எந்த செயற்பாடுகளும் நடைபெறுவது நாட்டில் மீண்டும் பிரச்சினைகள் உருவாக சந்தர்ப்பமாக அமைந்துவிடும். அதை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

ஒரு சில அமைப்புக்களை சேர்ந்தவர்கள் மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த இவ்வாறாக முயற்சிப்பார்கள். ஆனால் மக்கள் அதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடம்கொடுக்கக்கூடாது. தமிழ் மக்களுக்கும் சேர்த்தே இந்த பயங்கரவாதம் வெற்றிகொள்ளப்பட்டது. இந்த வெற்றியை தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும்.

இந்த நாட்டில் இனி ஒரு சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்சினை தலைதூக்கக் கூடாது. இனவாத அரசியலுக்கு புதிய அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

இனி இனவாதிகள் அதிகாரத்தை கைப்பற்ற முடியாது என்பதை மக்கள் ஆட்சியாளர்களுக்கு சொல்லிவிட்டனர். எனவே வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் சம அளவில் மனித உரிமைகள் செயற்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

## பாவனைக்குதவாத எண்ணெய் மீட்பு

பொல்கஸ்ஓவிட்ட பகுதியிலிருந்து மனித பாவனைக்கு உதவாத 5,500 லீற்றர் தேங்காய் எண்ணெயை கைப்பற்றியதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்தது.

கம்பஹா பிரதேசத்திலுள்ள தேங்காய் எண்ணெய் தயாரிப்பு நிலையமொன்றிலிருந்தே மேற்படி எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவ்வதிகாரசபை கூறியது. இந்த தேங்காய் எண்ணெயின் பெறுமதி 15 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க பகுப்பாய்வு அதிகாரியின் அறிக்கையின் பின்னர். மேற்படி எண்ணெய் உற்பத்தி நிலையத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபை மேலும் தெரிவித்தது.

## பல்கலைக்கழக அனுமதி இணையம் மூலம் படிவம் பெறலாம்

புதிய கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை இணையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் முதன் முறையாக இந்த வசதி இவ் வருடம் முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி WWW.UGC.AC.lk என்ற இணையத்தள முகவரிக்குள் பிரவேசிப்பதன் மூலம் இந்த வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை இம் மாதம் 29 ஆம் திகதி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத்தள விமான நிலையத்தை இலாபகரமாக இயக்குவது எப்படி

### புதிய பொறிமுறை தேடுகிறது அரசு

மத்தள சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிக்க முன்னைய அரசாங்கம் எடுத்த கடன்தொகை மாதாந்தம் 250 மில்லியன் ரூபாவை செலுத்த நேரிட்டுள்ளது.

இந்த விமான நிலையத்தை நடாத்திச் செல்வது சவாலாக உளளது. இது முறையான ஒரு பொறிமுறையின் கீழ் இலாபகரமானதாக மாற்றப்படும் என சிவில் விமானசேவை அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தை நிர்மாணிக்க எடுக்கப்பட்ட கடனைச் செலுத்தவும் விமான நிலைய ஊழியர்களுக்குச் சம்பளம் செலுத்தவும் விமான நிலையத்தின் வருமானத்தால் முடியாமற் போய் இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இங்கு ஒரு விமானமே வருகிறது. அது "பிளை டுபாய" நிறுவனத்துக்கு உரிய வெளிநாட்டு விமானமாகும். மத்தள விமான நிலையத்தை பராமரிபபு, திருத்த வேலை நிலையமாக உலகுக்கு அடையாளப்படுத்தவும் இப்பகுதியின் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் பயன்படுத்துவது தொடர்பாகவும் அவதானம் திரும்பி உள்ளதாகவும் அதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மத்தள விமான நிலையத்தில் அதிகமான ஊழியர்கள் உளளனர். ஆனால் வேலை இல்லை. கட்டுநாயக்காவில் வேலை இருநதாலும் ஊழியர்கள் இல்லை.

இந்த நிலைமையைக் கண்டறிந்து இவ்விரு விமான நிலையங்களையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சர் ரெஜினோல்ட் குரே தொடர்ந்து தெரிவித்தார்.

## கிழக்கில் விவசாயகுளம் புனரமைப்பு உலக தரிசனம் நிதி உதவி

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு - வாகரை பிரதேச செயலகத்திற்குற்பட்ட பனிச்சங்கேணி கிராம சேவகர்பிரிவில் உள்ள கருவேப்பஞ்சேனைக்குளம் புனருத்தாரண ஆரம்ப விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 15 ஆம் திகதி கமநல விவசாய அமைப்பின் ஏற்பாட்டில் கருவேப்பஞ்சேனைக் குளம் அருகில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ். ஆர்.ராகுலநாயகி, கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சிவலிங்கம், உலக தரிசன நிறுவன முகாமையாளர் வொனி வின்சன், உலக தரிசன நிறுவனத்தின் திட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஜீ.சுரேஸ், ஒப்பந்தக்காரர், கமநல விவசாய அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். 1962 ஆம் ஆண்டு வெறுமனே மனித உழைப்பினால் மட்டும் அமைக்கப்பட்ட இக்குளமானது ஆரம்ப காலத்தில் புளியங்கட்டு என அழைக்கப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் மாரிபோகத்தில் அதிகளவான விவசாயிகள் இக்குளத்திலிருந்து நீரைப்பெற்று விவசாயம் செய்துவந்துள்ளனர். பின் 2010 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபையினால் ரூபா 2000000 செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இதன் மூலம் சிறுபோகம மற்றும் பெரும் போகங்கள் செய்யப்பட்டதுடன் பல குடும்பங்கள் நன்மையடைந்து வந்தனர்.

## கோத்தா விவகாரம் ரணில் விடாப்பிடி

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணையின்போது இரண்டு நீதியரசர்கள் கொண்ட குழுவால் தடை உத்தரவு பிறப்பிக்க முடியாது.

ஆகவே, இது தொடர்பில் சட்ட ஆலோசனை பெற்ற பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த வழக்கை ஒக்ரோபர் மாதம் வரை தள்ளிப் போட்டமை நியாயமற்ற செயற்பாடாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். பௌத்த மற்றும் இந்து மதத் தலைவர்களை அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே . பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளரைக் கைது செய்வதற்கு உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள தடை உத்தரவு குறித்து பிரச்சினை உள்ளது . இந்த விடயம் சட்ட சித்தாந்தத்துக்கு உட்பட்டதா, பொலி ஸாருக்கு செல்லுபடியான தொன்றா என்பது குறித்து சட்டமா அதிபருடன் கலந்துரையாட வேண்டும்.

கோத்தாபய ராஜபக்ஷ விவகாரத்தில் எனக்கு உத்தரவு கிடைக்கவில்லை. எனக்குத் தெரிந்தளவில் உயர்நீதிமன்றத்திலிருந்து உத்தரவொன்று இதுவரை வெளியாகவில்லை



அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய மூன்று நீதியரசர்களைக்கொண்ட குழாமின் ஊடாகவே தடை உத்தரவொன்றைப் பிறப்பிக்க முடியும். இவ்வாறான நிலையில், கோத்தாபய ராஜபக்ஷவின் விடயம் தொடர்பில் உயர்நீதிமன்றம் விடுத்துள்ள தடை உத்தரவு குறித்து பிரச்சினை உள்ளது என்று எனது சட்டத்தரணிகளால் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது - என்று கூறியுள்ளார் பிரதமர் ரணில்.

## திருமணப் பதிவாளர்களுக்கு முன்மாதிரி பயிற்சித் திட்டம்

புதிதாக திருமண பந்தத்தில் இணைந்த தம்பதியினருக்கான ஆலோசனை வழங்கும் வகையில் திருமணப் பதிவாளர்களுக்கான பயிற்சி கருத்தரங்கொன்று அண்மையில் புத்தளம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

முறையான சுகாதார சேவையை வழங்கும் பொருட்டு சுகாதார அதிகாரி பிரிவுகளிலும் புதிதாக திருமணம் செய்த தம்பதியினருக்கு ஆலோசனை வழங்கும் திட்டத்தின் கீழ் விவாக பதிவாளரகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புத்தளம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலத்தின் அனுசரணையில் பாலியல் உறவினால் உருவாகும் நோய்கள் - பற்றிய விரிவுரை டொக்டர் உபுல் ஜயதிலக்கவும் பாலுறவு தொடர்பான விரிவுரையை டொக்டர் அனுர ராஜபக்ஷவும் சிறந்த குடும்ப வாழ்க்கை உறவுகள் பற்றி விரிவுரையை டாக்டர் வி. சைத்திய புத்தி ஜயசேகர ஆகியோர் ஆற்றியுள்ளனர்.

இதுதவிர கர்ப்பிணியாகும் முன்னர் போஷனை - நோய்களுக்கு ஆளாகாமை மற்றும் நோய பரிசோதனை - குழந்தைகளுக்கிடையிலான இடைவெளி- மது மற்றும் புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் தவிர்த்தல் போன்ற விடயங்கள் தொடரபான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றதுடன் விவாக பதிவாளர்களுக்கான உடற் பரிசோனையும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நிலம் கையகப்படுத்தும் சட்டம் தடையாக இருப்பதை அனுமதிக்கமாட்டோம்

## பிரதமர் மோடி தெரிவிப்பு



நிலம் கையகப்படுத்தும் சட்டம் நாட்டின் வளர்ச்சிக்கு தடையாகவோ அல்லது விவசாயிகளுக்கு சுமையாகவோ இருப்பதை அனுமதிக்க மாட்டோம் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

நிலம் கையகப்படுத்தும் சட்டத் திருத்த மசோதாவுக்கு பல்வேறு கட்சிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் வேளையில் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

3 நாள் பயணமாக சீனா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி தனது பயணத்தின் 2ஆவது நாளான நேற்றுமுன்தினம் பெய்ஜிங்கில் உள்ள ஸிங்ஹுவா பல்கலைக் கழகத்தில் உரையாற்றினார். அப்போது அவர் பேசும்போது, எங்கள் வளங்கள் விரைவாகவும் வெளிப்படையாகவும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. நிலம் கையகப் படுத்துதல் நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக இருப்பதையோ அல்லது விவசாயிகளுக்கு சுமையாக இருப்பதையோ அனுமதிக்க மாட்டோம் என்றார்.

மாநிலங்களவையில் எதிர்க்கடசிகளின் கடும் எதிர்ப்பு காரணமாக, நிலம் கையகப்படுத்தும் மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கு ஏற்பட்டது. இந்நிலையில் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட 3 நாட்களில் பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி மேலும் பேசியதாவது:

வேளாண்மை உற்பத்தியை பெருககவும், விவசாயிகள் தங்கள் வளமான வாழ்க்கையை மீட்கவும், வேளாண்மைதுறையை நாங்கள் சீரமைத்து வருகிறோம்.

பெரிய அளவிலான சீர்திருத்தங்களை எனது அரசு செய்து வருகிறது. இந்தியாவில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை நீங்கள் உணர்வீர்கள். எங்கள் வளர்ச்சி விகிதம் மூலம் இதை நீங்கள் உணரலாம்.

இந்தியாவின் வளர்ச்சி விகிதம் தற்போது 7.5 சதவீதமாக உள்ளது. இது மேலும் அதிகரிக்கும் என சர்வதேச நிபுணர்கள் ஒருமித்த குரலில் கூறுவது எங்களை ஊக்கப்படுத்துகிறது.

அனைத்து மக்களுக்கும் வீட்டு வசதி, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் அளிப்பதில் கால வரம்புக்குட்பட்ட இலக்குகளை அரசு நிர்ணயிக்கிறது.

இது மக்களின் வாழ்க்கையை மட்டும் மாற்றி அமைக்காது. பொருளாதார செயற்பாடுகளுக்கான புதிய ஆதாரங்களை உருவாக்கும்.

சர்வதேச தரத்திலான உற்பத்தி துறையுடன் இந்தியாவை நவீன பொருளாதாரமாக மாற்ற தனித்திறன் வாய்ந்த தொழிலாளர்களை இந்திய அரசு உருவாக்கிவருகிறது.

ஏழ்மையை அகற்றவும் ஏழைகளுக்கு பாதுகாப்பு அளிக்கவும் நவீன பொருளாதார சாதனங்களுடன் கூடிய பாரம்பரிய உத்திகளை நாங்கள் பயன்படுத்துறோம்

காப்பீடு மற்றும் வருங்கால வைப்பு நிதித்திட்டங்கள் பரம ஏழைக்கும் சென்றடைவதை உறுதிப்படுத்தி வருகிறோம். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# போஹோகரம் தாக்குதலில் 55பேர் பரிதாபமாக பலி



இரண்டு கிராமங்கள் மீது போஹோ கரம் தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதலில் குறைந்தது 55 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது.

'போஹோ கரம்' என்ற தீவிரவாத அமைப்பு நைஜீரிய அரசுக்கு எதிரான வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருகிறது. வெடி குண்டு மற்றும் அப்பாவி மக்களை சுட்டு கொல்வது என பல்வேறு தாக்குதல்களை நடாத்தி ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பறித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நைஜீரியாவின் வடகிழக்கில் உள்ள மைதுகுரி நகரின் அருகே இருக்கும் பேல் மற்றும் காயாமலா என்ற இரு கிராமங்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இதில் பேல் கிராமத்தை சேர்ந்த 30 பேரும் காயாமலா கிராமத்தில் 25 பேரையும் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

# ஈராக் அரச தலைமை அலுவலகத்தை கைப்பற்றியது ஐ.எஸ்.ஐ.எஸ்.



ஈராக்கில் பல பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி தனிநாடு அமைத்துள்ளனர். அன்பர், நைனேங் மாகாணங்கள் தீவிரவாதிகள் வசம் இருந்தன. அவற்றில் அன்பர் மாகாணத்தில் ரமாடி நகரை இராணுவம் மீண்டும் கைப்பற்றியது.

அதை மீட்க இராணுவத்துடன் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் கடும் சண்டையில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு ரமாடி நகரில் அரசு அலுவலகங்கள் மற்றும் அதிகாரிகள் வீடுகள் நிறைந்த பகுதியில் கற்குண்டு மூலம் தற்கொலை தாக்குதல் நடாத்தினார்கள்.

இந்த வளாகத்தில் பொலிஸ் தலைமை அலுவலகம், ஆளுநர் அலுவலகம் உள்ளது. இத்தாக்குதலில் 10 பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர். 50 பேர் காயம் அடைந்தனர். அதை தொடர்ந்து ரமாடியில் உள்ள அரசு தலைமை அலுவலகத்தை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினர்.

அங்கு அவர்களது கறுப்புக் கொடி பறக்கிறது. இத்தாக்குதலின் போது 50 பொலிஸ் அதிகாரிகளை பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்றனர். அவர்கள் கொல்லப்பட்டார்களா? அல்லது உயிருடன் இருக்கிறார்களா? எனத் தெரியவில்லை.

# திடீரென தீப்பற்றியது பேருந்து சாரதியின் சாதுரியத்தால் சேதம் இல்லை



சுவிட்சர்லாந்து நாட்டில் பயணிகள் பேருந்து ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்ததில், பயணிகள் அனைவரும் அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

சுவிஸின் பெர்ன் மண்டலத்தில் உள்ள Brünig Pass பகுதியின் A8 சாலை வழியாக நேற்று முன்தினம் பயணிகள் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது.

Interlaken என்ற நகரை நோக்கி சென்ற அந்த பேருந்தின் ஓட்டுநர், பேருந்திலிருந்து திடீரென் கரும்புகை வெளியேறுவதைக் கண்டு அதிர்ச்சியுற்றார்.

பேருந்தின் வேகத்தை குறைத்த ஓட்டுநர், அப்பகுதியில் ரயில்கள் பயணிக்கும் சுரங்கப்பாதைக்கு மேற்புறம் பேருந்தை அவசரமாக நிறுத்தினார்.

பின்னர், பேருந்தில் இருந்த பயணிகளை நோக்கி உடனடியாக பேருந்தை விட்டு வெளியேறுங்கள் என கத்தியுள்ளார். இதனிடையில், பேருந்தின் பின்புறம் தீப்பற்றியுள்ளது.

தீ சுவாலைகளைக் கண்ட பயணிகள் அலறியடித்துக்கொண்டு பேருந்திலிருந்து குதித்து ஓடினர்.

பயணிகள் அனைவரும் பத்திரமாக வெளியேறியவுடன், பேருந்து முழுவதும் தீ சுவாலைகள் பரவத் தொடங்கியது.

ஓட்டுநர் அளித்த தகவலை தொடர்ந்து 30 தீயணைப்பு வீரர்கள் அங்கு வருவதற்குள் பேருந்து முழுவதும் எரிந்து நாசமானது.

தீவிபத்து குறித்து தகவல் வெளியிட்ட பெர்ன் மண்டல பொலிஸார், பேருந்தில் ஏற்கனவே எரிபொருள் தீர்ந்திருந்ததாகவும், சில தொழில்நுட்ப காரணங்களால் தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் என தெரிவித்தனர்.

இருப்பினும், தீவிபத்திற்கான உறுதியான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

பேருந்துகள் அதிகமாக செல்லும் முக்கிய சாலையில் தீவிபத்து ஏற்பட்டதால், இரு வழித்தடங்களையும் தற்காலிகமாக மூடிய பொலிஸார் எரிந்து சாம்பலான பேருந்தை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

பேருந்தின் ஓட்டுநர் சரியான தருணத்தில் தீவிபத்தை கண்டறிந்து பயணிகளை வெளியேற்றியதால் பெரும் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# பாதிப்புக்களிலிருந்து மீண்டுவர அயல்நாடுகள் உதவி வழங்க வேண்டும்

## நேபாள நிதித்துறை அமைச்சர் கோரிக்கை

சமீபத்திய நேபாள நிலநடுக்கத்தினால் 10 ஆயிரம் கோடி டொலர் அளவுக்கு சேதம் அடைந்துள்ளதாக அந்நாட்டு நிதித்துறை அமைச்சர் ராம் சரண் மகத் கூறியுள்ளார்.

இழப்பில் இருந்து மீண்டு வர அண்டைய நாட்டவர்கள் நிதி உதவி வழங்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 8, 500 பேர் உயிரிழந்துள்ளனர் . ஒரு மில்லியன் (10 இலட்சம் வீடுகள்) முழு அளவில் இடிந்து தரை மட்டமாகியுள்ளது. முதற்கட்ட உதவிகள் விரைந்து வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வீடுகள் இழந்தோர் கூடாரங்களில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது போல் முழு அளவில் சீரமைக்க நீண்ட காலம் தேவைப்படுகிறது . தொழில் துறை, வேளாண்மைத்துறை, சுற்றுலா, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்தும் முடங்கிப் போனது.

இது போன்ற பாதிப்பினால் நேபாளத்தில் (ஆயிரம் கோடி டொலர்) 64 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதில் இருந்து மீண்டு வர மனித நேயமிக்க நாடுகள் நிதி உதவி வழங்க வேண்டும். நில நடுக்க பாதிப்புக்கு வரும் நிதிக்கணக்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒரு ரூபாய்க்கு கூட முறையான கணக்கு வைத்துள்ளோம் இதில் எந்த ஒழிவு மறைவும் இல்லை. வெளிநாடுகள் உதவிக்கரம் நீட்ட வேண்டும் இவ்வாறு ராம் சரண் மகத் கேட்டுக் கொண்டார்.

# ரயில்வே திணைக்களத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை

## ஊழியர் தொழிற்சங்க ஒன்றியம் குற்றச்சாட்டு

ரயில்வே திணைக்களத்தில் நிலவும் எண்ணாயிரத்திற்கும் அதிகமான ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என ரயில்வே ஊழியர் தொழிற்சங்க ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தொழில்நுட்பவியலாளர்கள், சாரதி உதவியாளர்கள், ரயில் பரிசோதகர்கள், ரயில்வே நேரக் காப்பாளர்கள், எழுதுவினைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரங்களில் பதவி வெற்றிடங்கள் நிலவுவதாக ஒன்றியத்தின் செயலாளர் சம்பத் ராஜித குறிப்பிட்டார்.

இந்த நிலைமையின் கீழ் ரயில் சேவைகளை செயற்திறனுடன் முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ரயில்வே ஊழியர் தொழிற்சங்க ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ள போதிலும், வெற்றிடங்களை நிரப்புவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என ஒன்றியத்தின் செயலாளர் தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களத்தில் நீண்டகாலமாக பணியாற்றி வருகின்ற தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் பயிற்சிபெற்ற ஊழியர்கள் ஓய்வுபெற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் ரயில் போக்குவரத்து நடவடிக்கைக்கள் தடைப்படுவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ரயில்வே பொது முகாமையாளர் விஜய அமரதுங்கவிடம் வினவிய போது, ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான உரிய விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

ஆயினும், ஒரு சில தரங்களில் ஊழியர்களை சேர்த்துக் கொள்வதில் சிக்கல் நிலை காணப்படுவதாகவும் அரச சேவை ஆணைக்குழு உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளின் ஒத்துழைப்புடன் ரயில்வே திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ரயில்வே பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

# முள்ளியவளையில் காணாமற்போன சிறுமி சண்டிலிப்பாயில் மீட்பு

கடந்த மாதம் முல்லைத்தீவு முள்ளியவளையில் காணமற்போனதாக கூறப்பட்ட பதின்மவயது சிறுமி ஒருவர் சுமார் மூன்று வாரங்களின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டார் இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

கடந்தமாதம் 28ஆம் திகதி மாலை வகுப்பிற்கு செல்வதாக கூறிச்சென்ற சிறுமி வீடு திரும்பாததால் அவரைக் காணவில்லை என பெற்றோரால் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் அன்றைய தினமே முறைப்படு செய்யப்பட்டது முறைப்பாட்டை அடிப்படையாகக்கொண்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தவேளை நேற்றுமுன்தினம் குறித்த சிறுமி சண்டிலிப்பாயில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதை அறிந்த சிறுமியின் பெற்றோர் சிறுமியை மீட்டு முள்ளியவளைப் பொலிஸாரிடம் நேற்று ஒப்படைத்தனர். குறித்த சிறுமி மறைத்து வைக்கப்பட்டதன் காரணம் தொடர்பாக முள்ளியவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (125)

### இ.போ.ச..

யாழ்.கச்சேரி ரயில் கடவைக்கு அருகில் வழிமறித்த இனந்தெரியாத சிலர் போத்தல் ஒன்றினுள் தாம் வைத்திருந்த அசிட்டை சாரதியின் பக்கமாக எறிந்துள்ளனர்.

இதன்போது போத்தல் உடைபட்டு அசிட் வெளிவந்துள்ளது. இந்நிலையில் சாரதி உட்பட பேருந்தில் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பில் பேருந்தின் சாரதி சாவகச்சேரி பொலிஸ நிலையத்தில் முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளார். (29)

### காணாற்..

முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், காணாமற்போனவர்களது உறவினர்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ள பெயர்களையும், வைத்திய சாலை பதிவேடுகளில் உள்ள அறிக்கைகளின் பெயர்களையும் ஒப்பிடுவதில் சிக்கல் உள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் குறிப்பிட்டார்.

நோயாளர்களின் பெயரின் ஒரு பகுதி அல்லது புனைபெயர்கள் வைத்தியசாலை பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

வைத்தியசாலைகளின் நோயாளர் பதிவேட்டிலுள்ள விபரங்கள் கணனியில் பதிவேற்றம் செய்யப்பட்டதன் பின்னரே தகவல்கள் ஆராயப்படும் எனவும் காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கஜேந்திரகுமார்..

தமிழ்த் தேசியத்துக்கு எதிரான செயற்பாடுகளில் சுமந்திரன் ஈடுபடுகின்றாரென்றும், இலங்கை தேசியத்தை ஏற்றுக் கொண்டும், இலங்கை தேசியக் கொடியையும் தூக்கிக் கொண்டும் சுமந்திரன் ஓடித்திரிகின்றார் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அடிமை விசுவாசியாக மாறிவிட்டார் எனவும் கேள்வியெழுப்பிய பொதுமக்கள் விமர்ச்சித்தனர். இதனால் ஆத்திரமடைந்த சுமந்திரன், கேள்வியெழுப்பிய பொதுமக்களை திட்டினார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்.

தனது செயற்பாடுகளை நியாயப்படுத்தி விளக்கமளித்த சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் ஈடுபாடுகளைக் கிண்டலடித்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் தமிழ் மக்களை நடுவீதிக்குக் கொண்டு வரும் என்ற தொனியில் தனது விவாதத்தை முன்வைத்தார். விவாதத்தின் இறுதியில் பொது மக்களின் கேள்விகளுக்கு சுமந்திரன் பதிலளிக்க முடியாது தடுமாறினார்.

### தடை..

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தொலைபேசியில் தொடர்பு கொண்ட ரவிகரன் மே 18 அன்று பேரணியோ அல்லது ஆர்ப்பாட்டமோ ஒழுங்கு செய்யப்படவில்லை. அமைதியான முறையில் சமய கிரியைகள் உள்ளடக்கிய நினைவேந்துதல் நிகழ்வே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது .கௌரவ முதலமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள்,மாகாணசபை உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் குறித்த நிகழ்வு அமைதியான முறையிலேயே நடைபெறும் என்றும் அமைதியைக் குலைக்கும் வகையிலான எந்த ஒரு நடவடிக்கையும் இடம்பெறாது என்று தெரிவித்தார். இதே வேளை வடமாகாண அவைத் தலைவரால் பொலிஸ் மேலதிகாரிகளுக்கு முறைப்படி இந்நிகழ்வு குறித்து அறிவிக்கப்பட்டிருப்பதையும் தெரிவித்தார்.

பதிலளித்த பொலஸ் நிலைய பொறுப்பதிகாரி "பேரணி, ஆர்ப்பாட்டம் என்று மட்டுமல்ல.. அனைத்து வகையான நிகழ்வுகளையும் அந்நாளில் நீதிமன்று தடை செய்திருக்கிறது.குறித்த நாளில் எந்த ஒரு நிகழ்வு அங்கே இடம்பெற்றாலும் அது நீதிமன்ற அவமதிப்பாகவே கருதப்படும் என்று தெரிவித்துள்ளார். (160)

### தமிழ்...

நிகழ்வின் இறுதியில் தமிழ் மொழியில் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டதன் காரணமாகவே தன் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று தான் கருதுவதாக அவர் தெரிவித்தார்.

உயர்கல்வி மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சுடன் செங்கலடி பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கண்காட்சி நிறைவின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நிகழ்வின் முடிவில் தமிழ் மொழியில் தேசிய கீதம் ஒலிக்கப்பட்ட போது அங்கிருந்த சிங்கள மாணவர்கள் ஆத்திரமுற்ற நிலையில் காணப்பட்டதாக அவர் கூறினார்.

பின்னர் அந்த மாணவர்கள் சிங்கள மொழியிலும் தேசிய கீதத்தை ஒலிக்கச் செய்ததாகவும் நிகழ்வின் பின்னர் வெளியேறிச் சென்றவேளை இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

சிங்கள மொழியில் பேசியவர்களே தன் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தாக்குதல் நடத்திய முக்கிய நபரொருவரை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் பத்தக்குட்டி சுமன் கூறினார்.

தேசிய கீதம் ஒலிப்பது தொடர்பான பிரச்சினையே தாக்குதலுக்கு காரணம் என்று தமது விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கூறினார்.

இலங்கையில் நீண்டகாலமாக தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டு வந்த நிலையிலும் கடந்த அரசாங்கக் காலத்தில் சிங்கள மொழியில் மட்டும் ஒலிக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் வந்திருந்தன.

எனினும் தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு நாட்டில் தடையேதும் இல்லை என்று புதிய அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 21 இலங்கையருக்கு கட்டாரில் கதவடைப்பு

கட்டாரின் செஹெலியா பகுதியிலுள்ள குடியிருப்புத் தொடர் ஒன்றில் பரவிய தீயை அடுத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட 21 இலங்கையர்களையும் கட்டார் அரசாங்கம் கறுப்புப் பட்டியலில் இணைத்துள்ளது.

இதற்கமைய, அவர்களை இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையை கட்டார் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

செஹெலியா பகுதியில் பலகையால் அமைக்கப்பட்டிருந்த குடியிருப்பு தொடரில் கடந்த 8ஆம் திகதி தீ பரவியதனால் அங்கு சுத்திகரிப்பு நிறுவனத்தில் பணியாற்றிய 350 இலங்கையர்கள் இருப்பிடங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவர்களுக்கு தற்காலிக தங்குமிடங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் பணிக்கு சமுகமளிக்காத சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

தற்காலிகத் தங்குமிடத்தில் இருந்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதால் குறித்த 21 பேரும் கட்டார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் நந்தபால விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை இலங்கை பணியாளர்கள் பகிஷ்கரித்துள்ளனர்.

அத்தோடு, தீயினால் தமது உடமைகள் அனைத்தும் சேதமடைந்த போதிலும் இதுவரை எவ்வித இழப்பீடும் வழங்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனா?.

இந்த நிலையில், விசா காலம் நிறைவுபெற்ற இலங்கைப் பணியாளர்கள் சிலர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளபோதிலும் அவர்களைத் தொடர்ந்தும் பணியாற்றுமாறு அதிகாரிகள் பலவந்தப்படுத்துவதாக கூறப்படுகிறது.

இதேவேளை், கட்டாரில் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள பணியாளர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்ய முடியும் என பணியகத்தின் தலைவர் நந்தபால விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவர முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### போதைப்..

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் இந்த நாட்டில் போதைவஸ்து பாவனையை முற்றாக ஒழிப்போம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பதை நாம் வரவேற்கின்றோம். நாட்டில், குறிப்பாக தற்போது வடக்கு மாகாணத்தில் போதைப் பொருட்களின் தாக் கங்கள படிப்படியாக மேலெழுந்து வரக்கூடியதான ஒரு சூழ்நிலை தோன்றியுள்ளது. போதைப் பொருட்கள் கடத்தல் செயற்பாடுகளின் கேந்திர இடமாக வடக்கு மாகாணம் மாறிவரக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் போதைப் பொருள் பாவனையை தடை செய்வதன் அவசியம் குறித்து நான் நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தியுள்ளேன். போதைப் பொருள் வர்த்தகத்தில் தமிழ்த் தேசியம் பேசுகின்ற அரசியல்வாதிகளுக்கும் பங்கு உண்டென்பதை நான் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தேன்.

கடந்தகால யுத்த அழிவுகளிலிருந்து எமது சமூகம் படிப்படியாக மீண்டுவரும் நிலையில், போதைப் பொருட்களின் தாக்கம் என்பது எமது சமூகத்தை மீண்டும் இன்னுமொரு வகையிலான அழிவிற்கே இட்டுச் செல்லும்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் கூடிய கவனமெடுத்து, போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையை துரிதமாக முன்னெடுக்கும்படி ஜனாதிபதியிடம் வலியுறுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

### ஊரெழு..

வெட்டும் போது, குறித்த கொள்கலன்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், கொள்கலன்களில் ஒன்றில் தமிழில் எழுதப்பட்டுள்ள குறிப்பு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதில் 1986.09.12 என திகதியிடப்பட்டு 4 முட்டை, 2 டசின் பியூஸ், 2 சாவி என எழுதப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த ஆயுதங்களை் கோப்பாய் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மீட்டுச் சென்றுள்ளதாகவும், தற்போது, கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஆயுதங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று குறித்த ஆயுதங்கள் நீதிமன்றில் ஒப்படைக்கப்படுமென்றும் கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலை விரைந்து நடத்தக் கோரிக்கை

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்து உனடியாக வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டு, அவற்றுக்கான தேர்தலை நடத்துமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான சுசில் பிரேமஜெயந்த இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

335 உள்ளூராட்சி மன்றங்களினதும் தேர்தலை ஒருசேர நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் பொருட்டே ஆட்சிக்காலம் நிறைவடைந்த 234 உள்ளூராட்சி மன்றங்கள் விசேட ஆணையாளரின் கீழ் கொண்டு வரப்பட்டதாக அரச நிர்வாக அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்திருந்தார்.

எனினும் 2012ஆம் ஆண்டு 22ஆம் இலக்க உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தின்படி, உருவாக்கப்பட்டுள்ள தொகுதிகள் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படாமல் இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்த முடியாது.



எனவே புதிய தொகுதி மீள்நிர்ணயங்களை விரைவில் வர்த்தமானியில் அறிவித்து, தேர்தலை துரிதப்படுத்துமாறு வலியுறுத்தப்படும் என சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

# மகிந்தவின் அசமந்தமே ஜெனீவா பிரச்சினைக்கு காரணம்

## இப்போது கூறும் எஸ்.பி.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அசமந்தப் போக்கு காரணமாக ஜெனீவா பிரச்சினை பாரிய ஒன்றாக உருவெடுத்ததாக அமைச்சர் எஸ். பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் பதவி பெற்றுக் கொளளப்பட்டமையானது சந்தோசத்துடன் மேற்கொண்ட செயற்பாடு அல்லவெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அஸ்கிரி பிரிவின் மகாநாயக்கர் கலகம ஸ்ரீ அத்ததச்சி தேரரிடம் ஆசிர்வாதம் பெற்ற தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்கட்சியில் இருந்து செயற்படுவதற்கு அதிக விருப்பத்தை கொண்டிருந்த போதும், ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைய அமைச்சர் பதவியை ஏற்று கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறை சீர்த்திருத்தத்தை ஏற்படுத்தியக் கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகளவு தேவைப்பாடு இல்லை என்றும் அமைச்சர் எஸ்.பீ. திசாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அசமந்த போக்கு காரணமாக ஜெனீவா பிரச்சினை பாரிய ஒன்றாக உருவெடுத்ததாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# நிதி மோசடி பொலிஸ் பிரிவு சட்ட ரீதியானதென தெரிவிப்பு

புதிதாக உருவாக்கப்பட்ட நிதி மோசடி பொலிஸ் விசாரணைப் பிரிவு சட்டரீதியானது என சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன மற்றும் உபுல் ஜயசூரிய ஆகிய இருவரும் தெரிவித்துள்ளனர.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருக்கின்ற நபரொருவரின் செயற்பாட்டினால் அந்தப்பிரிவின் நம்பிக்கைத்தன்மையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

நல்லாட்சியின் ஊடாக நீதிமன்ற தடையுத்தரவுகளை சட்டத்தரணிகளால் அகற்றிவிட முடியாது என்றும் நீதிமன்றங்களின் பின்னால் மக்கள் இருக்கவேண்டும் என்றும் சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவித்தார்.

# இலங்கையில் முதலீடு விருப்பத்துடன் இஸ்ரேல்

இலங்கையில் காணப்படுகின்ற வர்த்தக வாய்ப்புக்களை பயன்படுத்தி கொள்வதற்கு இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளது.


இலங்கைக்கான இஸ்ரேலிய தூதுவர் டேனியல் கார்மன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவர்களுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் எதிர்காலத்தில் இஸ்ரேல் பாரியளவிலான முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என டேனியல் கார்மன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.பி.எல்.கிரிக்கெட் தொடர்

# தொடர்கதையாகு[ம்] பஞ்சாப்பின் சோகம்



பஞ்சாப் அணிக்கு எதிரான ஐ.பி.எல். லீக் போட்டியில் சென்னை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மொகாலியில் நேற்று நடந்த லீக் போட்டியில் சென்னை, பஞ்சாப் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி கப்டன் பெய்லி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். சென்னை அணியில் டுவைன் ஸ்மித், மோகித் சர்மா நீக்கப்பட்டு மைக்கல் ஹசி, நெஹ்ரா இடம்பிடித்தனர்.

பஞ்சாப் அணிக்கு சகா (15) ஏமாற்றினார். நெஹ்ரா பந்தில் பெய்லி (12) சிக்கினார். வோரா (4), குர்கீரத் சிங் (15) நிலைக்கவில்லை. மக்ஸ்வெல் (6), மில்லர் (11) விரைவில் வெளியேறினர் அக்சர் படேல் 32 ரன்கள் எடுத்தார். பஞ்சாப் அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 130 ரன்கள் எடுத்தது. ரிஷி தவான் (25), ஹென்டிரிக்ஸ் (1) அவுட்டாகாமல் இருந்தார்.

இலகுவான இலக்கை விரட்டிய சென்னை அணிக்கு மைக்கல் ஹசி (1), பிரண்டன் மெக்கலம் (6) விரைவில் திரும்பினர். சிறப்பாக செயற்பட்ட டுபிளசி அரைச் (55) சதம் அடித்தார்.

சென்னை அணி 16.5 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 134 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரெய்னா (41), டோனி (25) அவுட்டாகாமல் இருந்தனர்.

ஆட்டநாயகனாக 2 விக்கெட்டுக்களை கைப்பற்றிய நெகி தெரிவினார்.

# கொல்கத்தாவை வீழ்த்தி முன்னேறியது ராஜஸ்தான்

வட்சனின் பொறுப்பான சதமும் மொறிசினின் உரிய நேர விக்கெட் வேட்டையும் கைகொடுக்க கொல்கத்தா நைட் றைடர்ஸை 9 ஓட்டங்களால் வென்றது ராஜஸ்தான் றோயல்ஸ்.

மும்பையில் நேற்று நடைபெற்ற 54 ஆவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் றோயல்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது.

அவ்வணி சார்பாக ரகானே, வட்சன் இணை சிறப்பான அடித்தளத்தை இட்டபோதிலும் அணி 80 ஓட்டங்களைப் பெற்ற வேளை ரகானே 37 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார். இதன் பின் வந்த வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேற தனது நிலையை உணர்ந்து பொறுப்புடன் ஆடிய வட்சன் இறுதிவரை ஆட்டமிழக்காது 59 பந்துகளில் 5 சிக்ஸர், 9 பவுண்டரிகள் அடங்கலாக 104 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் 6 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ரசல் 3, உமேஸ் யாதவ் ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

200 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலளித்த கொல்கத்தா அணிக்கு ஆரம்பமே சறுக்கலாக அமைந்தது. கம்பீர் 1, உத்தப்பா 14 என வெளியேற பின்னர் வந்த பாண்டே 21, ரசல் 37, பதான் 44 என வெளியேற கொல்கத்தாவின் ஆட்டம் முடிவுக்கு வரும் நிலையில் இருந்தது.

எனினும் இறுதி நேரத்தில் வந்த உமேஸ் யாதவ் 11 பந்துகளில் ஒரு சிக்ஸர் 4 பவுண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களைப் பெற்ற போதிலும் அணியால் வெற்றி பெற முடியவில்லை. இதனால் அவ்வணி 9 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

ராஜஸ்தான் அணி சார்பாக 26 ஓட்டங்கள் உதிரிகளாக விட்டுக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சில் மொறிஸ் 4, குல்கர்னி, வட்சன் 2 போல்க்னர் ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயனாக வட்சன் தெரிவானார்.

## சிறுமி மீது துஷ்பிரயோகம்

# இலங்கை இளைஞர் அமெரிக்காவில் கைது



(கொழும்பு)

சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டதாக கூறப்படும் இலங்கையர் ஒருவர் அமெரிக்காவின் புளோரிடாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இணையத்தின் மூலம் அறிமுகமான சிறுமி ஒருவரையே இவர் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டுள்ளார்.

மேலும் சந்தேகநபர் 23 வயதான இளைஞர் எனத் தெரிய வந்துள்ளது.

இருக்கு எதிராக புளோரிடா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய அந்த நாட்டு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# உயர்நீதிமன்ற தீர்ப்பு குறித்து பிரதமரின் கருத்து சட்டரீதியானது

## எனகிறார பிரதிநீதி அமைசசர

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் முறைப்பாடு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தெரிவிக்கபட்ட கருத்து சட்ட ரீதியானது என பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த நீதிமன்றத் தீர்ப்பு பற்றி பொது நலவாய நாடுகளின் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரவுள்ளதாக பிரதமர் அறிவித்திருந்தார்.

அத்துடன், மூவர் சேர்ந்து மேற்கொள்ள வேண்டிய விசாரணையை இருவர் சேர்ந்து விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் இது அரசியல் யாப்பின் சரத்துக்கு முரணானது எனவும் மீளவும் பிரதமர் சுட்டிக்காட்டியிருந்தார்.

பிரதமர் இவ்வாறு சுட்டிக் காட்டியமை நீதி மன்றத்தினை அவமதிக்கும் நடவடிக்கையாகும் என ஜாதிக ஹெல உறுமய குறிப்பிட்டிருந்தது. இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# உடற்கூற்று பரிசோதனையின் பின் சரண்யாவின் சடலம் புதைப்பு

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் மரணமடைந்ததாக சந்தேகிக்கப்பட்ட நிலையில் தோண்டி எடுக்கப்பட்ட சரண்யாவின் சடலம் உடல்கூற்று பரிசோதனையின் பின் மீண்டும் புதைக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்த 16 வயதான செல்வராஜா சரண்ஜா என்ற இச் சிறுமியின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாகவும், சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டதையடுத்து சட்டத்தரணிகள் ஊடாக வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சிறுமியின் மரணம் தொடர்பாக வைத்திய அறிக்கையிலும் குழப்பமான நிலை காணப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் நீதிமன்றத்தினால் மார்ச் மாதம் 6 ஆம் திகதி சடலத்தைத் தோண்டியெடுத்து கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகதிற்கு மருத்துவ பரிசோதனைக்காக அனுப்புமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய வவுனியா மாவட்ட நீதிவான் முகமட் ரிஸ்வான், யாழ்.மாவட்ட சட்ட வைத்திய நிபுணர் ருத்திரபதி மயூரதன், கனகராயன்குளம் பொலிஸார் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டு உடல் கூற்று பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்ட சடலம் பரிசோதனை முடிவடைந்த நிலையில் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு நேற்றைய தினம் கனகராயன்குளம் மயானத்தில் மீண்டும் புதைக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதி வவுனியா நீதிமன்றில் இடம்பெறவுள்ளதுடன் அதன போது உடல்கூற்று பரிசோதனை அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.